

# சிந்தனைச் சுடர்

வி.பி.தனேந்திரா

# சிந்தனைச் சுடர்

(கிறிஸ்தவக் கட்டுரைகளும் கீர்த்தனைப் பாடல்களும்)

வி.பி. தனேந்திரா

(யாழ். ராதவல்லி)

வெளியீடு

பாதுகாவலன்

இலங்கை முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிந்தனைச் சுடர் |
| நூலின் வகை | : | கிறிஸ்தவ கட்டுரைகளும் கீர்த்தனைப் பாடல்களும் |
| ஆசிரியர் | : | வி.பி. தனேந்திரா (யாழ். ராதவல்லி) |
| பக்கங்கள் | : | XII + 62 |
| முதற் பதிப்பு | : | 15 ஒக்டோபர் 2006 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | பாதுகாவலன்<br>360, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். |
| கணினி – வடிவமைப்பு | : | ஜெயந்த் சென்ரர் (கு. இராயப்பு)<br>28 , மாட்டின் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| அட்டை ஓவியம் | : | ஓவியர் ம. டொமினிக் ஜீவா |
| அட்டை வடிவமைப்பு | : | ஜெயந்த் சென்ரர் |
| அச்சுப்பதிப்பு | : | ஏ. சி. எம். அச்சகம்<br>யாழ்ப்பாணம். |
| விலை | : | 100/= |

## தொடர்புகளுக்கு

*227, சென். பெனடிக்ற் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

*227, St. Benedict's Road,*
*Ariyalai West,*
*Jaffna.*



# அமரர் திருமதி பரமசாமி ரோசாமலர்

உடல் நொந்து போனாலும்
உளம் வலிமை பெற்றுவாழ முடியும் - என
உரைத்து - என்
உள்ளத்தில் விதைத்த தாயே
உங்கள் பாதக் கமலத்திற்கு...

# ஆசியுரை

புதிய நூல்களின் வரவு எப்போதும் புதிய அறிவின் - புதிய சிந்தனை ஓட்டத்தின் வரவாகும். புதிய புத்தகங்களை எழுதுவதும் வெளியிடுவதும் கடினமான – அதேவேளை செலவுமிக்க – வருமானமற்ற ஒரு பணியாக இருந்தாலும் காலத்திற்குக்காலம் தமிழ்கூறும் நல்லுலகிற்கு புதிய நூல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இவற்றைப் பாராட்டி வரவேற்பது முக்கியமானதாகும்.

தெளிவுப் பத்திரிகையின் ஆசிரியரான வி. பி. தனேந்திரா 'சிந்தனைச் சுடர்' எனும் பெயரில் வெளியிடும் நூலிற்கு ஆசி உரை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். சிறப்பான விதமாக இது 'பாதுகாவலன்' பத்திரிகை வெளியீடாக வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இன்றைய சமுதாயத்தை வழிநடத்தும் பெரும் பணியை பத்திரிகைகள் – புத்தகங்கள் – சஞ்சிகைகள் ஆற்றுகின்றன என்றால் அதில் தவறிருக்க முடியாது. காலத்திற்கு காலம் பத்திரிகைகளில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவரும் இந்நூல்; இளம் சமுதாயத்தினருக்கு வழிகாட்டும் ஒரு நூலாகவும், அவர்களின் சிந்தனையைத் தூண்டி நற்செயற்பாடுகளை தொடக்கி விடுகின்ற ஒரு நூலாகவும் அமைந்திருக்கின்றது.

வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகி வருகின்ற இந்த வேளையில் அழகு தமிழில் இளம் உள்ளங்களை கவரும் விதமாக சிறிய சிறிய கட்டுரைகளாக காலத்தின் தேவையை ஒட்டி அமைக்கப்பட்ட இந்நூல் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு பெரும் கொடையாகும். இந்நூலை இளம் சமுதாயத்தினர் வாங்கிப் படிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். துடிப்பும் இளமையும் மிக்கவரான வி.பி. தனேந்திரா தனது எழுத்துப்பணியை முன்னெடுத்துச்சென்று பல அரிய நூல்களை எழுதி சமுதாயப் பணிபுரிய வாழ்த்துகின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

*யாழ். ஆயர்,*

*கத்தோலிக்க திருச்சபை.*

# வாழ்த்துரை

பல நெருக்கீடுகள் நிறைந்த சூழ்நிலையில் ஒரு நூலை அச்சிடுவதும், வெளியீடு செய்வதும், விநியோகிப்பதும் சாதனையான செயலே ஆகும். அந்தவகையில் 'சிந்தனைச் சுடர்' என்னும் இந்நூலை பல நெருக்கீடுகள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியீடு செய்கின்றமை எனக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றது.

என்மீது விசுவாசமும், அன்பும் கொண்ட எனது சகோதரப் பணியாளர் ஒருவரின் நூலுக்கு, வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்து உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இவரின் இத்தகைய ஆக்கப்பணி முயற்சிகளுக்கு இறையருள் என்றும் துணையிருக்க பிரார்த்திக்கிறேன்.

வி.பி. தனேந்திரா திருச்சபை வட்டத்திற்குள்ளும், அதற்கு வெளியிலும் பல ஆக்கபூர்வமான இலக்கியங்களைப் படைத்து வருவதோடு, சமூகப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்கின்றார்.

எமது இலங்கைத் திருச்சபையின் முதலாவது தமிழ் பத்திரிகையாக விளங்குகின்ற 'தெளிவு' பத்திரிகையின் ஆரம்பம் முதல் இன்றுவரை அதன் பிரதம ஆசிரியராகவும், இதழ் வடிவமைப்பாளராகவும் இருந்து, அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து உழைத்து வருகின்றார்.

இவரின் 'சிந்தனைச் சுடர்' என்னும் இந்நூலில் முப்பது கட்டுரைகளும், இருபத்தி மூன்று கீர்த்தனைப் பாடல்களும் உள்ளடங்கியுள்ளன. இவை பல்வேறு அச்சு ஊடகங்களில் அவ்வப்போது வெளிவந்தவை ஆகும்.

வி. பி. தனேந்திராவின் 'சிந்தனைச் சுடர்' கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக அனைத்து மக்களும் படித்துப் பயன் பெறக்கூடிய வகையில், நேரிய வாழ்வுக்கு உரம் ஊட்டுவதாகக் காணப்படுகின்றது.

இவர் சிறு பிராயத்தில் இருந்தே தன் எழுத்தாற்றலில் பணிவும் – துணிவும் – உறுதியும் கொண்டுள்ளார். அகலச் சிந்திக்கும் இவர்; திருச்சபை வாழ்விலும், சமூக வாழ்விலும் நிறையவே சாதனைகளைப் படைக்க வேண்டும் என்பதில் தீவிர வேட்கை கொண்டுள்ளார்.

எனவே, வி.பி. தனேந்திராவின் சிந்தனைச் சிறகுகள் இச் 'சிந்தனைச் சுடர்' களுக்கூடாக இன்னும் மேலெழுந்து பறக்கும் என்பது என் உறுதியான நம்பிக்கை. இந்நூலை சிறந்த முறையில் வெளியீடு செய்கின்ற கத்தோலிக்கத் திருச்சபையின் 'பாதுகாவலன்' பத்திரிகைக்கும், நூல் ஆசிரியர் வி. பி. தனேந்திராவுக்கும் எனது பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

**அருள்தந்தை எஸ். பி. நேசகுமார்**
யாழ். குருமுதல்வர்,
இலங்கைத் திருச்சபை.

# அணிந்துரை

வி. பி. தனேந்திரா அவர்களுடைய 'சிந்தனைச் சுடர்' என்ற நூல் தமிழ் கூறும் நல் உலகிற்கு ஒரு புதிய வரவாகும். தெளிவுப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும், வேறுபல நூல்களைத் தொகுத்து வெளியிட்ட அனுபவமும் 'சிந்தனைச் சுடர்' என்ற இந்த நூலை தொகுத்து வெளியிட அவருக்கு துணை நின்றிருக்கின்றன.

'சிந்தனைச் சுடர்' என்ற நூலினைப் படித்துப் பார்த்தபோது மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இதில் வெளிவந்துள்ள கட்டுரைகள் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்திருந்தாலும் அவை அனைத்தையும் ஒன்றாக இணைத்து வைத்துப் படித்துப் பார்க்கின்ற போது வி. பி. தனேந்திரா அவர்களுடைய எண்ணக் கருவும் சிந்தனை ஓட்டமும் சமுதாய முன்னேற்றப் பார்வையும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

உளவியல் - ஆன்மீகம் - சமூக முன்னேற்றம் - மனித மாண்பு - புனித வாழ்வு எனப் பல முக்கிய விடயங்கள் இணைக்கப்பட்டு, குறிப்பாக இளம் சமுதாயத்தினருக்காகவே எழுதப்பட்டுள்ள சிறு கட்டுரைகள் அடங்கிய இந்நூல் காலத்தோடு ஒட்டி படிக்கப்பட வேண்டியதாகும். சமகாலப் பிரச்சினைகளை பின்னணியில் வைத்துக் கொண்டு அவற்றிற்கு தீர்வு சொல்லுவது போல் கருத்துக்களையும் சிந்தனைகளையும் தன் எண்ணக் கருவூலத்திலிருந்து தொகுத்து அமைத்திருக்கின்றார் நூல் ஆசிரியர். கட்டுரைகளின் பின்னால் குறிக்கப்பட்டுள்ள திகதியைப் பார்க்கின்றபோது அந்தக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இக் கட்டுரையை எழுத இவரைத் தூண்டியுள்ளது என்பதை உணரக் கூடியதாக உள்ளது.

நாளைய சமுதாயத்தில் நடக்கப்போகின்றவர்களும், அதை நடத்தப் போகின்றவர்களும் இன்றைய இளைஞர்களே என்பதைப் பின்புலத்தில் வைத்து அவர்களின் வளமான வாழ்விற்கு அறிவுரைகளை கூறினால் நாளைய சமுதாயம் சீர் மிக்க சமுதாயமாக, சிறந்த சமுதாயமாக

அமையும் என்பதில் நம்பிக்கை கொண்டு அமைக்கப்பட்ட இந்நூல் பெரு வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

கட்டுரைகளில் வாசகர்களின் கவனத்தை கவருகின்ற விதமாக சிறுசிறு சம்பவங்களையும் கதைகளையும் மேற்கோள்களையும் இணைத்துள்ளார் ஆசிரியர். மேலும் அவர் சலிப்பின்றி படிக்கத்தக்க விதமாக இனிமையான தமிழில் சிறிய கட்டுரைகளாக இந்நூலை அமைத்திருப்பது சிறப்பானதாகும். கட்டுரைகளிற்கு இடையே அமைக்கப்பட்டுள்ள அவரது கீர்த்தனைப் பாடல்கள் பார்ப்பதற்கு இலகுவாகவும் படிப்பதற்கு எளிமையாகவும் சிந்தனையைத் துண்டுவதாயும் காணப்படுகின்றது. இவை வாசனைத் திரவியங்களை இடையிடையே தூவிவிட்டதுபோல் அமைந்திருக்கின்றது.

இயேசு சபைக் குருவானவராகிய அந்தனி டி மெல்லோ எழுதிய 'ஒரு நிமிட அபத்தம்' என்ற நூல் சிறப்புப்பெற முக்கிய காரணம் அதன் கட்டுரைகள் ஒரு நிமிடத்திலேயே படிக்கத்தக்கனவாக சிறியதாக அமைந்திருப்பதாகும். இப்புத்தகத்தின் சிறப்பம்சம்; கட்டுரைகள் சிறியதாகவும் படிப்பதற்கு இலகுவாகவும் அமைந்திருப்பதாகும். காலத்தோடு போராட வேண்டிய இன்றைய அவசர உலகில் ஒரு விடயத்தை விரைவாகப் படித்து அதன் கருத்தை வேகமாக உள்வாங்கிக் கொண்டு வேகமாக தம் பணிகளுக்குச் செல்லவே வாசகர்கள் விரும்புவர். ஒரு நிமிடத்தில் ஒரு கட்டுரையை படித்து சிந்தனைக் கருவூலகத்தைக் கிளறி செயற்பாட்டை தொடக்கி விடுமாறு நூலாசிரியர் இந்நூலை அமைத்திருப்பது சிறப்பானதாகும்.

சிந்தனைத் துடிப்பும் சாதிக்கும் திறமையும் படைப்பாற்றலும் உடைய வி. பி. தனேந்திரா அவர்களுடைய 'சிந்தனைச் சுடர்' என்னும் இந்நூலை இலங்கை முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான 'பாதுகாவலன்' பத்திரிகையின் வெளியீடாக வருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். திரு. வி.பி. தனேந்திரா பாதுகாவலன் பத்திரிகை மூலமாக எழுத்துலகிற்கு அறிமுகமானவர். பாதுகாவலன் நடத்திய பயிற்சிப் பட்டறைகள் பலவற்றில் கலந்து சிறப்புச் சான்றிதழ்கள் பல பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மென்மேலும் எழுத்துலகில் வளரவேண்டும். பல சாதனைகள் படைக்கவேண்டும். அதற்குப் பாதுகாவலன் பத்திரிகை என்றும் வழிசமைக்கும் என்று உறுதிகூறவும், உற்சாகப்படுத்தவுமே இந்நூலைப் பாதுகாவலன் வெளியீடாகத் தருகின்றோம். இவரது பணிதொடர வாழ்த்துக்கள்.

**அருள்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை**
ஆசிரியர், 'பாதுகாவலன்' -
பயிற்சி இணைப்பாளர்,
ஊடகவளங்கள் பயிற்சிமையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# ஆசிரியர் பற்றி...

மனித உறவுகள் பொய்மையும், போலிகளும் நிறைந்தது. சந்தர்ப்பவாதங்களும், சுயநலன்களும் மேலோங்கி நிற்கும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் - முகத்துக்கு முன்னால் ஒரு வாழ்வும், பின்னால் ஒரு வாழ்வுமாக முகம் காட்டும் மனிதர்களே அதிகமாகி விட்ட வாழ்வுப் பயணத்தில் - மனித உறவின் உன்னத அடையாளமாக உறவாடக் கிடைக்கும் சில மனிதர்களில் - கடந்த சில ஆண்டுகளாக நம்பிக்கையுடன் உறவாட எனக்குக் கிடைத்த ஒரு இனிய தோழமையுள்ளமாக திரு. வி. பி. தனேந்திரா விளங்குகின்றார்.

எல்லோருடனும் சிரித்த முகத்துடனும் அன்புடனும் உறவாடும் இவரை, நம் மத்தியில் நல்ல பல சிந்தனைகளுடன் நடமாடும் ஒரு மனிதனாகவும் அடையாளப்படுத்தலாம்.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவனும், இலங்கைத் திருச்சபையின் துடிப்பு மிக்க பணியாளனுமாகிய இவர், யாழ் அரியாலைக் கிராமத்தைச் சேர்ந்தவர்.

ஈழத்து கலை, இலக்கியப் புலத்தில் வளர்ந்து வருகின்ற படைப்பாளியாகவும் - கிறிஸ்தவ உலகில் வளர்ந்து விட்ட படைப்பாளியாகவும் விளங்கும் இவர்; கட்டுரை, கவிதை, நாடகம், பாடல், வரலாற்றுப் பதிவுகள், உரைச்சித்திரம், சிந்தனைத் துளிகள், உரையாடல்த் தொகுப்பு எனப் பல தளங்களில் தன் படைப்புக்களை எழுதி சஞ்சிகைகள், பத்திரிகைகள் உட்பட பல்வேறு ஊடகங்களிலும் தனது சொந்தப் பெயரிலும், புனை பெயர்களிலும் வெளியிட்டு வருபவர். இவற்றில் பெரும்பாலானவை ஆன்மீக நறுமணம் வீசுபவையாக இருந்த போதிலும், மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பல வழிகாட்டுதல்களை தந்து நிற்பவை.

இவரது ஆளுமைகள் படைப்புத்துறைக்கப்பாலும் பரந்து நிற்பவை. இலங்கைத் திருச்சபையின் முதலாவது உத்தியோகபூர்வ பத்திரிகையான 'தெளிவு' இதழின் ஆரம்பம் முதல், இன்று வரை அதன் ஆசிரியராக இருந்து அதனை வெளியிட்டு வருகின்றார். அத்துடன், திருமறைக் கலாமன்ற வெளியீடாகிய 'கலைமுகம்' கலை, இலக்கிய,

சமூக இதழின் அண்மைக்கால வருகையில், என்னுடன் இணைந்து உதவி ஆசிரியராக பணியாற்றியும் வருகின்றார். இவை தவிர, பல நூல்களின் வருகைக்கு தொகுப்பாசிரியராக இருந்து அவற்றை சிறப்பாக வெளியிட்டுள்ளார். குறிப்பாக, யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட 'உயிர்க்கும் நினைவுகள்' என்னும் 'சுனாமி' பேரவையின் பல் பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் நூலின் வருகைக்கு பிரதான உந்து சக்தியாக செயற்பட்டு அதனை சிறப்பாக வெளிக்கொணர்ந்திருந்தார். இவற்றுடன் மட்டுமல்லாமல், சமகாலத்தில் தனது சொந்த முயற்சியின் வெளிப்பாடாக 'யாழ். ராதவல்லி வெளியீடு' என்னும் நூல் வெளியீட்டகத்தை உருவாக்கி சில நூல்களை அண்மையில் வெளியிட்டுள்ளதுடன் இன்னும் நூல்கள் பலவற்றை வெளியிடவும் முயன்று வருகின்றார்.

இவ்வாறாக, பல திசைகளிலும் தன் கரங்களை நீட்டி சமூகத்துக்கும், தான் சார்ந்த திருச்சபைக்கும் பல்வேறு பணிகளையும் ஆற்றி வரும் தோழமைக்குரிய பணியாளனான தனேந்திரா, தனது மற்றுமொரு வெளிப்பாடாக பல்வேறு சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் தன்னால் எழுதப்பட்டு வெளிவந்த பல கிறிஸ்தவ நற்சிந்தனைக் கட்டுரைகளையும் மற்றும் தான் எழுதிய பாடல்களையும் இணைத்து தன் சொந்த ஆக்கத்தில் தனது முதலாவது நூலை 'சிந்தனைச் சுடர்' என்னும் பெயரில் 'பாதுகாவலன் வெளியீடாக' வெளியிடுவது மகிழ்வைத் தருகின்றது. தன் முதல் வெளியீடான இதனை பத்தாண்டுகளுக்கு முன்பாக மறைந்த தன் அன்னைக்கு சமர்ப்பணம் செய்கின்றமை மற்றுமொரு வகையில் அவருக்கு நிறைவைக் கொடுக்கும் என நம்பலாம்.

இவ்வாறு, எண்ணற்ற பல சிறப்புக்களைக் கொண்ட தோழமைக்குரிய திரு. வி. பி. தனேந்திராவின் முயற்சிகள் இன்னும் இன்னும் முகிழ்ந்தெழுந்து - நீட்சி பெற்று நீண்டதூரம் பயணிக்கவும், தன் ஆளுமை வெளிப்பட்டால் இன்னும் பல்வேறு படைப்புக்களைத் தரவும், நெஞ்சார்ந்த நெருக்கத்துடன் வாழ்த்தி, இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**கி. செல்மர் எமில்**
*பொறுப்பாசிரியர், 'கலைமுகம்' -*
*ஊடக இணைப்பாளர்,*
*திருமறைக் கலாமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

# என்னுரை

கடந்த பத்து வருடங்களாக என் வாழ்வில் துன்ப அனுபவங்களே அதிகம் நிகழ்ந்துள்ளன. துன்பங்களின் மத்தியில் இன்பமாக வாழ வேண்டும் என்ற கொள்கை என்னுள்ளத்தில் வேட்கை கொண்டுள்ளது. அதனால் அகலச் சிந்திக்கவும், அதனை எழுத்தில் வடிக்கவும், மற்றவர்களுடன் சிரித்து உரையாடி மகிழவும், மற்றவர்களுக்கு தீங்கு செய்யாது உதவி புரிந்து வாழவும், இயன்றளவு அறவழியில் செல்லவும் முற்படுகின்றேன்.

துன்பங்கள் மனிதனை நெருங்கும் போதே 'இறையனுபூதி' அனுபவம் கிடைக்கப்பெறுகின்றது. இதை வாழ்வில் அனுபவித்திருக்கிறேன். இந்த இறையனுபூதி அனுபவத்தை விளக்குவதும் கடினம்; விளங்கிக் கொள்வதும் கடினம். ஆனால் அனுபவிக்க முடியும். இது ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அனுபவத்தைக் கொடுக்கும்.

ooo

சமூகத்தில் நடக்கின்ற கீழ்தரமான இழிதகமைச் செயல்கள் என்னை அதிகம் பாதிக்கின்ற விடயங்களாகும். இவை ஏன் நடக்கின்றன! இதற்கான காரண காரியத் தொடர்பு என்ன! என்பவை குறித்து நீளச் சிந்திப்பதுண்டு. இவையே நாளாந்தம் விவிலியத்தைத் தியானிக்கும் போது என் மனதில் தோன்றும் சிந்தனைச் சிதறல்களை யதார்த்தச் சூழலுடன் பொருத்திப் பார்க்க உதவுகின்றது. அவற்றைக் குறிப்பேட்டில் பதிவாக்கிக் கொள்வது வழமை. அச்சிந்தனைகளை அவ்வப்பொழுது விரிவுபடுத்தி கட்டுரைகளாகவும் எழுதிக்கொள்வேன்.

அவ்வாறு எழுதப்பட்ட கட்டுரைகளில் சிலவற்றைத்தான் வலம்புரி, உதயன், யாழ். தினக்குரல், தெளிவு ஆகிய பத்திரிகைகளிலும்; தொண்டன் சஞ்சிகையிலும் பிரசுரிக்கக் கொடுத்தேன். அவர்களும் அதனைப் பிரசுரித்தார்கள். அவற்றின் தொகுப்பே 'சிந்தனைச் சுடர்' என்னும் நூலாக வெளிவருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இக்கட்டுரைகளை பிரசுரித்த இதழ் ஆசிரியர்களுக்கு நன்றிகள் கூறுகின்றேன்.

கிறிஸ்தவ திருநாள்களான கிறிஸ்து பிறப்பு விழா, உயிர்ப்புத் திருவிழா, மற்றும் நற்செய்தி சார்புடைய விழாக்களுக்கு ஏற்ற வகையில் எண்பது வரையான கிறிஸ்தவ கீர்த்தனைப் பாடல்கள் இயற்றியுள்ளேன். அவற்றில் இருபத்தி மூன்று கீர்த்தனைப் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களில் அதிகமானவற்றுக்கு இசையமைத்தவர்கள் திரு. வே. தூயகுமாரன், திருமதி ஹேமா தூயகுமாரன் ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

ooo

1995 ஆம் ஆண்டு யாழ் நகரம் வெறிச்சோடிப் போய், பாழ்வெளியாகக் காணப்பட்ட வரலாற்றை யாரும் மறக்க மாட்டார்கள். அவை கொடுத்த துன்பங்களும் ஏராளம்; அழிக்கமுடியாத வடுக்களும் ஏராளம்; மனம் ஆற்றுப்படாமல் புண்பட்ட நிகழ்வுகளும் ஏராளம்; இதைப்போலவே என் அம்மாவின் இறப்பும் என்னைப் பாதித்தன.

அம்மா! நோயுற்று 1996 ஒக்டோபர் 15 இல் வன்னிப்பெரு நிலப்பரப்பில் மண்ணுலக வாழ்வை அறுத்து பரமாத்மாவுடன் சங்கமம் ஆனார்.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வசித்த என்னால் நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக அம்மாவின் இறுதிப்பயணத்தில் கலந்து கொள்ள முடியாமல் போன வேதனை நீண்டது தான்... அந்த வேதனைகளை விபரிக்க வார்த்தைகளும் என்னிடம் இல்லைதான்...

எனினும், அம்மா மண்ணுலக வாழ்வை அறுத்து விண்ணுலகம் சென்றதில் எனக்கு திருப்தி உண்டு.

என் உடல் சிறிதாக நொய்ந்து போன நேரமெல்லாம் அம்மாவும் நொய்ந்து போவார்.

நொய்ந்த உடல் வலிமை பெறுமட்டும் உண்ணாமல் குடிக்காமல் கண்ணீருடன் இறை பிரார்த்தனையில் ஈடுபடும் அம்மாவின் பாச உணர்வு என் உள்ளத்தில் பசுமரத்தாணிகளாய் பதிவாகியுள்ளன...

என் வலியை தன் வலியாய் ஏற்ற;

என் துன்பத்தை தன் துன்பமாக ஏற்ற அம்மா!

2000 ஆம் ஆண்டு நோயின் காரணமாக எனது இடது கால் துண்டிக்கப்பட்ட அவலத்தை எப்படித் தாங்கியிருப்பார். நான் பட்ட துன்பங்களைவிட அம்மா படும் துயர் மேலானதாக இருந்திருக்கும்.

இவற்றை அனுபவிக்காமல் அம்மா விண்ணுலகம் சென்றதில் எனக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சிதான்.

குழந்தைப் பருவத்தில் அம்மாவின் மடியில் இருந்து பெற்ற படிப்பினைகள்தான்; இன்றும் என்னை வாழ்விக்கின்றன.

என் உடல் நொய்ந்து போனாலும் மனம் வலிமையுடன்தான் இருக்கின்றது.

இது அம்மா என் உள்ளத்தில் விதைத்த படிப்பினையின் விளைபயனால் கிடைத்தது.

2006 ஒக்டோபர் 15 ஆம் திகதியுடன் அம்மா விண்ணுலகம் சென்று பத்துவருடங்கள் நிறைவுபெறுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அம்மாவின் பாதக்கமலங்களுக்கு என்னுடைய 'சிந்தனைச் சுடர்' என்னும் இந்நூலை அர்ப்பணிப்பதில் ஆத்மதிருப்தி காணுகின்றேன்.

ooo

நான் பல நூல்களைத் தொகுத்தும் - பதிப்பித்தும் வெளியிட்ட போதும்; 'சிந்தனைச் சுடர்' என்னும் இந்நூலே எனது ஆக்கங்களை முழுமையாகத் தாங்கி முதல் நூலாக வெளிவருகின்றன. இந்த நூலை இலங்கை முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான "பாதுகாவலன்" பத்திரிகை விருப்புடன் வெளியீட்டு வைப்பதில் எனக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. இவ்வாறு வெளியிட மூலகர்த்தாவாக இருப்பவர் என் அன்புக்கும் நட்புக்குமுரியவரான 'பாதுகாவலன்' – ஆசிரியர், அருள்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் ஆவார். இவர் இந்நூலை ஆராய்ந்து அணிந்துரையும் தந்துள்ளார்.

ஆசியுரையை வழங்கியவர்; ஆயத்துவப் பணியில் வெள்ளிவிழா கண்ட என் மதிப்புக்குரிய கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

வாழ்த்துரையைத் தந்தவர்; என் சிந்தனைகள் அகல விரிந்து செல்ல களங்கள் பல தந்து வழிகாட்டியவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவரான இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் அருள்தந்தை எஸ்.பி. நேசக்குமார் அடிகளார்.

என்னைப் பற்றி குறிப்புரை எழுதியுள்ளார் ; என் ஆருயிர் நண்பன் திரு. கி. செல்மர் எமில்.

அட்டை ஓவியத்தை அழகுற வரைந்து தந்தவர் ஓவியர் திரு. ம. டொமினிக் ஜீவா.

நூலை ஒப்புநோக்க உதவியுள்ளார்கள்; செல்வி எஸ். கெலன் மேரி, திரு. சி.என். ஹெய்ன்ஸ் ஆகியோர்.

இந்நூலை கணிணி மூலம் அச்சு செய்து வடிவமைத்ததோடு, அட்டையையும் வடிவமைத்து தந்தவர்; ஜெயந் சென்ரர் இயக்குநர் திரு. கு. இராயப்பு (கலையார்வன்) அவர்கள்.

நேர்த்தியான முறையில் அச்சுப்பதிப்புச் செய்துள்ளார்கள் ஏ. சி. எம். அச்சக ஊழியர்கள்.

இந்த ஆக்க முயற்சிக்கு கைகொடுத்து உதவிய இவர்கள் எல்லோருக்கும் எனது அன்பு நிறைந்த நன்றிகள்.....

**வி. பி. தனேந்திரா**

# உள்ளுறை


1. குழந்தைகளுக்கு நல்வழி காட்ட வேண்டும் ..................... 01

2. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ..................... 03

3. மத நல்லிணக்கம் வேண்டும் ..................... 05

4. பயணத்திற்கு ஆயத்தமா? ..................... 07

5. சமூகத்தை சீரழிக்கும் உரிமை ..................... 09

6. வெறுமையும் தாழ்மையும் உயர்வுதரும் ..................... 11

7. இறைவன் வாழும் இல்லம் எது? ..................... 13

8. ஆன்மீக உள்ளுணர்வு தழைத்தோங்கட்டும் ..................... 15

9. தனிமரம் என்றும் தோப்பாகாது ..................... 17

10. மன்னிப்பின்றி அமைதி இல்லை ..................... 19

11. சமூகத்தை பாதுகாப்பது அவசியம் ..................... 21

12. தவறுகளைத் திருத்துங்கள் ..................... 23

13. அன்புச் சமூகம் மகிழ்வைத் தரும் ..................... 25

14. போலி வேடங்கள் வேண்டாம் ..................... 27

15. ஒருமைப்பாடும் சகிப்புத் தன்மையும் வேண்டும் ..................... 29

16. சக மனிதனை நேசிக்கும் பண்புகள் வேண்டும் ..................... 31

17. இறைவனிடம் அழைத்துச் செல்லும் கருவி ..................... 33

18. உண்மையான உறவுகள் உருவாக ..................... 35

19. சமூக சீர்கேடுகளைக் களைவோம் ..................... 37

20. சிறுவரிடம் அன்பாய் இருங்கள் ..................... 39

21. மன்னிப்பு மகத்துவம் நிறைந்தது ..................... 41

22. நம்பிக்கையும் அன்பும் எமது கவசங்கள் ..................... 43

23. நற்சாட்சி பகருவது அவசியம் ..................... 46

24. உறவுகள் வளர நாவடக்கம் தேவை ..................... 49

25. எமது தனித்துவங்கள் எப்படியுள்ளது? ..................... 51

26. அன்புள்ளம் வளரவேண்டும் ..................... 53

27. மேல்நிலைக்கு உயர்த்தும் தலைமைத்துவம் ..................... 55

28. நிறை வாழ்வுக்கு மனத்துறவு அவசியம் ..................... 57

29. மன அழுத்தங்களில் இருந்து விடுதலை ..................... 59

30. மனம் கொண்ட மதம் மதங்கொள்ளலாமா ..................... 61

1

# குழந்தைகளுக்கு நல்வழி காட்டவேண்டும்

பிள்ளைகளின் உள்ளத்தை வடிவமைப்பதில் இன்று அநேக சக்திவாய்ந்த ஊடகங்கள் தொழிற்படுகின்றன. அவை எப்படிப்பட்டவை என்பதுதான் முக்கியம்.

அபாயத்தை விளைவிக்கும் ஊடகங்கள்தான் இன்று பிள்ளைகளை ஆட்கொண்டு பிரச்சினைகளை உருவாக்குவதுடன், தீய நடத்தைகள் பெருகவும் காரணமாக அமைகின்றன. பிள்ளைகள் சிறுவயதில் எப்படியும் வாழட்டும், அவர்கள் வளரும்போது தானாகத் திருந்திக் கொள்வார்கள் என்று கூறும் பெற்றோரும் இருக்கிறார்கள்.

சிறுவர்கள் தீமையான வழியில் குறும்புகள் செய்யும்போது அதனை வழிப்படுத்த முயல்வதை - சிறுவர் உரிமைமீறல் என்ற போர்வையில் அலட்டிக்கொள்வோரும் இருக்கின்றனர். குழந்தை நிபுணர்களின் கருத்துப்படி, சிறுவயதிலிருந்தே குழந்தை கற்றுக்கொள்கிறது. தன் பெற்றோருடன் நெருங்கிய பந்த – பாசத்தை உருவாக்கிக் கொள்கிறது. புலன்களின் மூலம் கண்டுணரும் திறமைகளை வளர்த்துக் கொள்கிறது. தன்னைச் சுற்றியிருக்கும் உலகை ஆராயத் தொடங்குகிறது.

குழந்தையின் இதயத்தை வடிவமைக்க பொன்னான பருவம் அந்த சிட்டுப்பருவமே. பெற்றோர்கள் - குழந்தைகளை நன்றாக வடிவமைக்க வேண்டியவர்கள். “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னையின் வளர்ப்பினிலே” என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப அன்னை மட்டுமல்ல; தந்தையும் குழந்தை வளர்ப்புக்குக் காரணமாக அமைகிறார்.

நடத்தைவாதிகளின் கருத்துப்படி ஒரு மனிதனை நல்வழிப்படுத்த சூழல் பிரதானமாக அமைகின்றது. இச்சூழ்நிலையினைப் பெற்றோர்தான் நல்லபடியாக அமைத்துக்கொடுக்க முடியும். குழந்தைகளின் சமூக மயமாக்கலில் பெற்றோரின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. இதனால், முன்மாதிரிகை கொண்டவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். பெற்றோரின் மறையான குணங்கள், பேச்சுக்கள், சப்தங்கள், நடத்தைகள் என்பவற்றைப் பார்த்து குழந்தை அதனைப் பின்பற்றுகிறது.

அத்துடன் அன்பு, கருணை, பாசம், இரக்கம் போன்ற நல்ல குணங்களையும் பெற்றோரிடமிருந்தே குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. சிறுவயதில் காண்பவை, கற்பவைதான் பசுமரத்தாணிகள் போல் மனதில் பதிந்து குழந்தைகளிடம் பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றன. இன்று பெருகியுள்ள குழு வன் செயல்கள், தீய நடத்தைகள், மூத்தோரை மதியாமை, ஆன்மீகத்தேடலற்ற போக்கு அத்தனைக்கும் காரணத்தைத் தேடும்போது; முன்மாதிரியான வழிகாட்டல் இல்லாமையே பிரதான

காரணியாக அமைகிறது. "நல்ல வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார்". (நீதிமொழிகள் 22:6)

பிள்ளைகளின் வளர்ப்பில், ஆளுமையின் விருத்தியில் அக்கறை கொள்ளாத பெற்றோர்; பிள்ளைகளைப் பெறவேண்டிய தேவையில்லை. ஏனெனில், அவர்கள் ஒரு தீய சமுதாயத்தினை உருவாக்கிக்கொள்கின்றனர்.

சமயப்பற்று என்பது இன்று பொதுவாக அற்றுப் போய்விட்டது. சமயத்தை ஊட்டவேண்டிய பெற்றோர்; இன்று தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்து வன்முறைக் காட்சிகளையும், அரைகுறை நிர்வாண ஆட்டங்களையும் பார்த்து ரசித்து காலத்தைக் கடத்துகின்றனர். இதனால், சமயப் பூசைகளிலும், சடங்குகளிலும் பக்தி உணர்வு அற்றுப்போய்விட்டது.

சமூகப் பணிகளிலும் அவற்றின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு ஊட்டமறுக்கின்றனர் பெற்றோர். இதனால், பொதுநல நோக்கற்ற பிள்ளைகளே உருவாகின்றனர். பெற்றோர்கள் சமூகத் தரிசனத்தை உணர்ந்து பிள்ளைகளுக்கு சமூகக் கடமைகளை, நியமங்களை உணர்த்தி, ஒழுக்க சீலராக வளர வாய்ப்பினைக் கொடுப்பதுடன் தாமும் அதில் ஈடுபடவேண்டும்.

உண்மையான சமய பக்தி உணர்வு கொண்டவர்களினாலேயே, இயன்றளவு அறநெறிசார்ந்து வாழமுடியும். சமூகத்தை நல்வழிப்படுத்த முடியும். இத்தகைய நோக்கிலேயே பிள்ளைகள் உருவாக்கப்பட வேண்டும். பெற்றோர் அதற்காக உழைக்க வேண்டும். முன்மாதிரியாக வாழ வேண்டும்.

**யாழ். தினக்குரல்**
*22.11.2004*

## *ஏங்குகின்றோம் ஐயா...*

### *பல்லவி*

*ஏங்குகின்றோம் ஐயா இயேசையா – உம்*
*திருமுகம் நோக்கி ஏங்குகின்றோமையா....*

### *அனுபல்லவி*

*பாடுகின்றோமையா இயேசையா – உம்*
*பாதக்கமலத்தில் பாடுகின்றோமையா*

### *சரணம்*

*பெண்ணாய்ப் பிறந்தது பாவமோ – ஐயா*
*பேதையரென்று பட்டம் சூட்டுகின்றார்*

*ஊனமாய்ப் பிறந்தது பாவமோ – ஐயா*
*ஊரார் வெறுத்து ஒதுக்கும் நிலை ஏனோ*

*நீதியாய் வாழ்வதும் பாவமோ – ஐயா*
*கூர்மையாய் அநீதி நிலையாய் நிற்கிறது.*

2

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

உடலில் பல உறுப்புக்கள் காணப்படுவதுபோல், நாம் வாழும் சமூகத்திலும் பல வகையான மனிதர்கள் காணப்படுகின்றார்கள்.

எல்லா மனிதர்களும் தேவையானவர்கள் அவர்களிடம் ஏதோ ஒரு சக்தி, செயல்திறன் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு மனிதன் கல்வியில், சமூக அந்தஸ்தில், சாதியத்தில், பொருளாதாரத்தில் உயர்ந்து காணப்படின் அவன் மற்றவர்களுடன் கூடிவாழ முடியாது; நான் தனித்துத் தான் வாழப்போகின்றேன் என்று சிந்திப்பதும் அதைக்குறித்து தொழிற்படுவதும் அபத்தமானது.

ஏனெனில் ஒரு மனிதன் சமூகப் பிராணி. அவன் சமூகத்துடன் கூடி சக மனிதர்களுடன் ஒன்றித்து வாழவேண்டும். தனித்து வாழ்பவன் மிருகத்தை விடக்கேவலமாகவே இருப்பான்.

ஒரு மனிதன் சமூகத்தில் வாழும் மற்றமனிதர்களைப் பார்த்து 'நீ எனக்குத் தேவையில்லை' என்று பெருமை கொண்டு ஒதுக்கிவிட முடியாது. அவர்களும் தேவையானவர்கள். அவர்களும் வாழத்தான் வேண்டும்.

சமூகத்தில் உயர்நிலையில் இருப்போரெனக் கருதப்படுபவர்கள்; மற்ற மனிதர்களை வேண்டாப் பொருட்களாகக் கணித்துக்கொள்வதும், அவர்களை அடிமைகளாகப் பாவித்துக்கொள்வதும், மனிதமற்றுத் தொழிற்படுவதும் மனுக்குலத்தின் கீழ் நிலையை வெளிப்படுத்துகின்றது.

திருச்சபையில் அங்கம் வகிக்கும் எல்லா மனிதர்களும் தேவையானவர்கள். அவர்களில் ஒரு பகுதியினர் மட்டும் தேவை, மற்றப் பகுதியினர் தேவையற்றவர்கள் எனக் கலைத்து ஒதுக்கிவிடக்கூடாது. இது திருச்சபை வாழ்விற்கும், கிறிஸ்துவின் போதனைக்கும் முரணானது.

சமூகத்தில் வேறுபாடுகள் காணப்படும்; இதை தவிர்க்க முடியாது. இந்த வேறுபாடுகள் கிறிஸ்தவ விழுமியங்களை உடைப்பதாகக் காணப்படுதல் கூடாது.

உடல் உறுப்புக்கள் பல வேறுபாடுகளின் மத்தியிலும் ஒழுங்காக இயங்குகின்றது.

காலில் கல் அடித்ததும் உடனே கை விரைந்து சென்று அதனை வருடிக்கொடுக்கின்றது. கண்கள் கலங்குகின்றன. மெய்சிலிர்க்கின்றது. இது உடலில்

நடைபெறுகின்ற தொழிற்பாடுகள் ஆகும்.

மனித வாழ்விலும் இதைப்போலத்தான், ஒருவன் துன்பத்தை அனுபவிக்கின்றான் என்றால், மற்ற மனிதர்கள் உடன் சென்று உதவிக்கரம் நீட்டவேண்டும். அவர்களுக்காக மனம் வருந்தவேண்டும். இது தான் கிறிஸ்தவப் பண்பு. இதனை எமது சமூக வாழ்வில் முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

எமது நாட்டை எடுத்துக்கொண்டால் இனத்துவ ரீதியில் முரண்பாடு, மதத்தின் பேரால் பூசல்கள், பிரதேச வாதத்தினால் பிரிவினைகள், சாதிய அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

இத்தகைய சூழமைவில் எமது செயற்பாடு எப்படி அமையவேண்டும். நாம் மற்றவர்களை துன்புறுத்தும் மனிதர்களாக வாழ முன்வருகின்றோமா? அல்லது மற்றவர்களுக்கு உதவி புரிந்து அவர்களின் உயர்ச்சிக்கு கைகொடுத்து உதவுகின்றோமா?

அடுத்தவர்களின் தனித்துவம், சிறப்பம்சம் என்பவற்றை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போது தான் பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

சமூக மாற்றத்தில் உலகில் அறிவு ரீதியான வளர்ச்சிப் போக்குகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. ஆனால், நாம் இன்னும் பழைய பிரிவினைகளை பேணிப்பாதுகாத்து சமூக முன்னேற்றத்தை தடை பண்ணும் நபர்களாகத் தொழிற்படுகின்றோம்.

இறை சாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் ஒரே தன்மை கொண்டவர்கள் அல்ல. அவர்கள் இனத்தால், மதத்தால், சாதியால், பிரதேசத்தால், மொழியால், பண்பாட்டால் வேறுபட்டவர்கள். இந்த வேறுபாட்டில் ஒற்றுமை காணமுன்வரவேண்டும்.

மனிதர்கள் சந்தோஷப்படுகின்றபோது, அவர்கள் முகம், உடல் என்பவற்றில் ஒருவிதப் புத்தெழுச்சி தோன்றுகின்றது. ஆனால், துக்கம் கொள்ளும் போது அவர்கள் முகம், உடல் சோர்ந்து, வாடி வதங்கிப் போகின்றது. இது மனிதர்களிடம் காணப்படுகின்ற பொதுவியல்பு.

ஆகவே, எமது சமூக, சமய வாழ்வில் சக மனிதர்களின் உயர்ச்சியில் பங்கெடுத்து மகிழ்வோம். அதேபோல் அவர்கள் துன்பத்திலும் பங்கெடுத்து அன்புக் கரம் நீட்டுவோம்.

"ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புக்களும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புக்களும் சேர்ந்து மகிழ்ச்சியுறும்". (1 கொரி12:26)

**வலம்புரி**
*20.06.2004*

3

# மத நல்லிணக்கம் வேண்டும்

சமயங்கள் மனிதனை நல்வழிப்படுத்தும் நிறுவனங்கள். இது உளம் சார்ந்தது. சமய நம்பிக்கைகள் – சடங்குகள் – குறியீடுகள் என்பனவெல்லாம் சேர்ந்து கூறுகின்ற விடயங்கள் நன்மைத்தனமானது. மதங்களுக்கிடையே சடங்குகள், சம்பிரதாயங்கள் வேறுபட்டாலும், அவற்றைப் பின்பற்றுபவர்களுக்கு அவை உள ஆற்றுகையைக் கொடுக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

நிச்சயமும், நிம்மதியும் அற்ற மனித வாழ்க்கையில் இறைவன் மீதுகொண்ட நம்பிக்கையும் – மதம் சார்ந்த விடயங்களில் கொண்ட எமது பற்றும் தான் மனிதனை வாழ்விக்கின்றது.

பல்வேறு அழுத்தங்கள் கொண்ட சமூக வாழ்வில் மதங்களின் போதனைகள்தான் மனிதவாழ்வுக்கான ஊக்கமாத்திரையாக இருக்கின்றன.

ஆனால், மன ஆற்றுகையைக் கொடுக்கும் சமயங்கள் இன்று மன அழுத்தத்தினைக் கொடுக்கும் தளமாக மாறிவிட்டன. மத அடிப்படைவாதிகளினால் - அந்த மதம் பிழையானது, எமது மதம்தான் சரியானது, எம்மதத்தைப் பின்பற்றுங்கள் என்று கூறப்படுவதும்; பிற மதங்களைக் கொச்சைப்படுத்துவதும்; கேவலமான செயல்களாகும்.

ஒரு ஜனநாயக நாட்டில் மதத்தினைப் போதிக்க, மதவிழுமியங்களை எடுத்துச்சொல்ல அனைத்து மதத்தவர்களுக்கும் உரிமையுண்டு. ஆனால், அப்போதனையைக் கேட்டு, தனக்குப் பிடித்த மதத்தினைப் பின்பற்றுவது அவரவரது சொந்த முடிவு.

இங்குதான், தன்னுடைய மதம் முக்கியம் எனக்கருதும் எவரும் அதுவே சரியான மதம் என நினைக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் ஏன் அதைப் பின்பற்றவேண்டும். இவ்வாறு இல்லாமல் தளம்பல் நிலையில் உள்ளவர்களே அடிக்கடி மதம்மாறுபவர்களாக இருக்கின்றார்கள்.

பிறமதங்களை குறித்தும் - இனங்களைக் குறித்தும் நாம் கொண்டுள்ள தப்பெண்ணம் என்ன? அவர்கள் பிழை: நாம் தான் சரி என்று கருதுகின்றமை ஏன்? போன்ற வினாக்களை எழுப்பி எம்மை நாமே மீள்பார்வை செய்யவேண்டும்.

விவிலியத்திலுள்ள நல்ல சமாரியன் உவமையை நோக்கும்போது, (லூக்கா10:29-37) எருசலேமில் இருந்து எரிக்கோவுக்குப் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவர் - கள்வர்களினால் தாக்கப்பட்டு குற்றுயிராகக்கிடக்கின்றார். அவ்வேளை,

அவ்வீதியால் வந்த மதப்பற்றுள்ள இரண்டு பேரும் அவனைக் கண்டும் காணாது போகின்றனர். யூதர்களினால் புறந்தள்ளப்பட்ட இனமாகிய சமாரியன் வருகின்றான்.

குற்றுயிராகக் கிடந்த மனிதனைக் காண்கின்றான். அவனது காயங்களுக்கு கட்டுப்போடுகின்றான். பராமரிக்கின்றான். இந்த சமாரியன் தன்னை ஓர் உண்மையான அயலான் என நிரூபிக்கின்றான்.

இந்த உவமையின் ஊடாக இயேசு கூறவருகின்ற கருத்து - பிற, இன, மத மக்கள் மீது கொண்ட தப்பெண்ணத்தைக் களைந்து அவர்களிடம் இருக்கின்ற நல்ல குணங்களை கண்டுகொள்ள வேண்டும் என்பதாகும்.

நாம் மற்ற மதத்தவரைப் பிழை என்றும், தப்பென்றும் போதித்தும், கொச்சைப்படுத்தியும், பகைமையை சம்பாதித்துக் கொண்டோம். இவற்றை மாற்றி அமைப்போம். அவர்களிடம் இருக்கின்ற நல்ல குணங்களைப் போற்றி வாழ்வோம். மனிதம் வளரக் கூட்டாக உழைப்போம்.

நல்ல மனித விழுமியங்களை நாம் போற்ற ஆரம்பிக்கும்போதுதான், நல்ல மனிதனும் உருவாகின்றான்.

யாழ். தினக்குரல்
*15.11.2004*

## ஆராரோ பாடவில்லை...

### பல்லவி

ஆராரோ பாடவில்லை - உன்னை
அமைதியாய்த் தூங்க வைக்க
அவலத்தின் குமுறலை நாம்
அழுதே கூறுகின்றோம்

### சரணம்

வதைகள் நிறைந்த பூமியிது
கொலைகள் நிறைந்த பூமியிது
பிணங்கள் நாறும் பூமியிது
நிஜங்கள் தொலைந்த பூமியிது

அதிகாரம் கொண்டவன் பலம்
அடக்கி ஆளும் தினம் தினம்
சுதந்திர வேட்கை தணிந்து
சுருண்டே போகும் மனிதம்

உழைத்து வாழ மனம் இல்லை
ஊதாரிப் பிள்ளை நெஞ்சில்
மரத்தைக் கெடுக்கும் குருவிச்சை - எம்
உறவைக் கெடுக்கும் பேராசை.

4

# பயணத்திற்கு ஆயத்தமா?

கிறிஸ்தவ மறையின்படி மரணம் பாவத்தின் விளைவு ஆகும். "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை..." (தொட. நூல் 3:19) என்று இறைவன் பாவத்தில் வீழ்ந்துபோன ஆதாமுக்கு சாபம் கொடுப்பதனையும், "பாவமே சாவின் கொடுக்கு". (1கொரி 15:56) என்று புனித பவுல் கொரிந்திய சபைக்கு உரைப்பதையும் காண முடிகின்றது! பிறந்தவர் அனைவரும் இறப்பது என்பது உலகின் நிச்சயமான நிகழ்வு. ஆனால், பாவத்தின் சம்பளமாகிய மரணம் நம்மை எப்பொழுது சந்திக்கும் என்று தெரியாது. பிறந்த ஒருசில நிமிடங்களும் – சிலருக்கு சில வருடங்களும் - பலருக்கு பல வருடங்களும் – சிலருக்கு நீண்ட ஒரு நூற்றாண்டாகவும் – சில உயிருக்கு கருவறை கல்லறையாகவும் இருக்கிறது. எனினும், கடவுளின் திட்டம் சித்தப்படி எந்த வயதினருக்கும் எந்தக் கணப்பொழுதிலும் மரணம் ஏற்படலாம்!

பிறப்பு – வாழ்வு – இறப்பு இவை மனித வாழ்வில் நிச்சயப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டங்கள் ஆகும். இதன் இறுதிக் கட்டமான இறப்பு அனைவருக்கும் தீவிர பயத்தையும், அருமையானவர்களை விட்டுப் பிரிந்துபோய் விடுவோமே என்ற துயரத்தையும்; இறப்புக்குப் பின் என்ன சம்பவிக்கும் என்ற அச்சத்தையும்; சேர்த்து வைத்த சொத்துக்களை – சுகங்களை – உறவுகளை எப்படி விட்டுச் செல்வது என்ற கலக்கத்தையும் எம்மில் அநேகருக்கு ஏற்படுத்துகின்றது!

மரணம்! இயற்கை அழிவுகள், கொலை, பஞ்சம், விபத்து, தற்கொலை, போர், அடிப்படைத்தேவைகள் இன்மை, முதுமை, நோய் போன்றவற்றினாலும் ஏற்படுகின்றது. இவற்றில் மரணப்படுக்கையில் இருக்கும் முதியோரும், நோயுற்றோரும் அந்த இறுதி நேரத்தில் அமைதியற்று; தீவிர மரண பயத்துடனும்; அங்கலாய்ப்புடனும், படபடப்புடனும் அவஸ்தைப்படுவார்கள். இந்த நேரத்தில் இறப்பைப் பற்றி எழும் ஐயப்பாடுகளை நீக்கி; கிறிஸ்தவ மறையின்படி மரணத்தின்பின் இருக்கின்ற நித்திய வாழ்வு பற்றி உரையாடி; அவர்களை ஆற்றுப்படுத்தி அருகிருப்போர் துணைபுரியவேண்டும். இவ்வாறு, துணைபுரிபவர் முதலில் தனக்குள்ளே இருக்கின்ற மரணத்தைப் பற்றிய ஐயப்பாடுகள், அச்சங்கள், பிழையான கருத்துக்கள் முதலியவற்றை போக்கவேண்டும். நாம் எமது அறிவின்மையால் மரணத்தைப்பற்றி கதைக்க நிலை தடுமாறும் பொழுது அது இறப்பவரையும் கூடிய பயத்திற்கு இட்டுச் செல்லும்! எனவே, இறப்புக்காக காத்திருக்கும் உறவுகளை என்னென்ன முறையில் சாந்திப்படுத்தலாம் அல்லது ஆற்றுப்படுத்தலாம் என்று பார்ப்போம்!

இறக்கப்போகும் தருவாயில் ஒருவர் தனது உறவினர்கள், நண்பர்கள், ஏனையவர்களிடம் இருந்து விடைபெற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க

வேண்டும். முன்பு நடந்த சம்பவங்களை பற்றிக் கதைக்கலாம். செய்த குற்றங்களுக்கு இரங்கி வருந்தவும், மன்னிப்புப் பெறவும், கோபதாபங்களைப் போக்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்படலாம். சந்தோஷமான, மகிழ்ச்சியான நிகழ்வுகளை நினைவுகூறலாம். சமய வழிபாடுகள், பாடல்கள், பாவசங்கீர்த்தனங்கள், மன்றாடல்கள் போன்றவற்றையும் ஒழுங்குசெய்யலாம்!

"கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்" (திரு.பா. 91:3), "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்". (மத்.11:28), "இறுதிவரை வழிநடத்துவார்" (திரு.பா. 48:14) போன்ற ஆறுதல்தரும் விவிலிய வார்த்தைகளையும் வேறுபல விவிலிய வாசகங்களையும், பாடல்களையும் அடிக்கடி உரைப்பதன் மூலம் அவர்கள் பயம் நீங்கிப்போகும்.

இறப்பவருக்கு நிறைவேற்றப்படாத ஆசைகள் இருக்கலாம், அவற்றை சாத்தியமானால் உடனே நிறைவேற்றவும்; அல்லதுபோனால் நிறைவேற்றுவோம் என்று உறுதிமொழி கொடுத்தல் வேண்டும். இறப்பவரின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து ஒன்றாக செவிமடுக்க வேண்டும். இறுதிநேரத்தில் அவசரப்பட்டு தேவையில்லாமல் வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்வதையும், குறிப்பாக மருத்துவமனைக்கு வற்புறுத்திக் கொண்டு செல்வதையும், தவிர்த்துக்கொள்ளுதல் நல்லது. ஒருவர் நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இறுதிக்கட்டம் வந்துவிட்டது என்று மருத்துவர் ஊர்ஜிதம் செய்தபின்னர் அவரை சொந்த இல்லத்திற்குக் கொண்டுசெல்லல் நன்று. அப்போதுதான் அவருக்கு அமைதியான இறுதிப் பயணமாக அமையும்.

"எங்கள் கீழைத்தேச சமயங்கள் எல்லாம்; இறுதி நேரத்தில் நாங்கள் எதைச் சிந்திக்கிறோமோ - எங்கள் ஆசாபாசங்கள் எங்கே செல்கின்றனவோ - எங்கள் மனநிலை எவ்வாறு அமைகின்றதோ அவ்வாறே அந்தத் திசையிலேயே எங்கள் ஆத்மாவும் சென்று, மறுபிறப்பும் நிர்ணயிக்கப்படுகின்றது என்று வற்புறுத்துகின்றன". இவ்வாறு பேராசிரியர் தயா சோமசுந்தரம் கருத்துக் கூறுவார். எனவே, இறுதிநேரத்தில் இறப்பவர்களின் மனநிலை நல்லதாக, அமைதியாக இறைவனை நோக்கியதாக இருக்கவேண்டும்.

மரணப்படுக்கையில் இருப்பவர்களின் சூழல் அமைதியாகவும், சுத்தமாகவும், நல்ல நறுமணங்கள் கமழும் இடமாகவும், இதமூட்டும் அழகுச் சூழலாகவும் அமைத்தல் நல்லது. உறவினர் சூழ நின்றால் மிகவும் நன்றாக இருக்கும். மடியில் வைத்து தொடுகை உணர்வுகள் மூலம் அன்பைப் பகிர்தல் அமைதியூட்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இறப்பவர்கள் எந்தவிதமான பயமும் இன்றி ஆறுதலாக தமது இறுதி மூச்சை விடுவார்கள். எமக்கும், நன்றாக பார்த்துக்கொண்டோம் என்ற மன ஆறுதலும், இறந்தவரைக் குறித்து எந்தவிதமான குற்ற உணர்வு அற்றவர்களாகவும் இருப்போம்.

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக்கையால் கட்டப்படாதது, நிலையானது". (2கொரி 5:1) அங்கு அழுகையில்லை, துன்பமில்லை, ஆனந்தப் பெருக்கு நிலைத்திருக்கும். அத்தகைய வாழ்வு எம்மவருக்கு எப்போதும் வரும். எனவே, நாம் அதற்கு ஆயத்தப்படவேண்டும். "சத்திய பரனாகிய தந்தையே இறைவா! உமது கரங்களில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கின்றேன்" என்று யூதர்கள் இரவில் படுக்குமுன்பு செபிப்பது போல நாமும் செபிப்போம், மரணப் பயத்தை நீக்குவோம், நித்திய வாழ்வுக்கு தயாராகுவோம்!

**தெளிவு**

(ஐப்பசி - கார்த்திகை 2001)

5

# சமூகத்தை சீரழிக்கும் உரிமை

ஒரு மனிதனின் நடத்தைகள் பல வடிவங்களாக இருக்கின்றன. இந்த நடத்தைகள் எல்லாமே கற்றுக்கொள்ளப்படுகின்றன. நடத்தைவாதிகளின் கருத்துப்படி கற்றுக்கொள்கின்ற நடத்தைகளை மாற்றியமைக்க முடியும் என்கின்றனர். இக்கருத்து உண்மையாயின் எதிர்மறையான நடத்தைகளையும் மாற்றியமைக்க முடியும் என்பது உறுதியாகின்றது.

அந்த வகையில் மனிதர்களின் பாலியல் நடத்தைகளிலும் மாற்றம் காணலாம். பாலியல் தூண்டல் என்பது எல்லோரிடமும் உண்டு. அவற்றை ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்துவதே சிறப்பானது.

உலகளாவிய ரீதியில் இப்பாலியல் பிரச்சினை பல வடிவங்களில் தலைதூக்கியுள்ளது. அதில் ஒரு வகைதான் தன்னினச் சேர்க்கை. இப்பாலியல் முறையானது ஆண் – ஆணுடனும், பெண் – பெண்ணுடனும் உடலுறவுகொள்ளும் தன்மையாகும். இது மேலைத்தேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் திருமண முறையாகவும் காணப்படுகின்றது. இது, வேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது.

அநேகர் தன்னினச்சேர்கையாளர்களை ஆரோக்கியமான முறையில் விமர்சிக்கின்றனர். இது அவர்களது சொந்த உரிமை சார்ந்த விடயம் என்றும், மறைமுகமாக இருக்கும் இப்பாலியல் உறவு, வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டால் என்னவென்றும்; அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். துறவற மடங்களிலும், விடுதிகளிலும் இருக்கும் தன்னினச் சேர்க்கையாளர்களை வெளிப்படையாக அங்கீகரிப்பது தவறில்லை என்றும் கூறுகின்றனர்.

இத்தகைய மேலைத்தேசப் பிரச்சினை இன்று உள்நாட்டுப் பிரச்சினையாகவும் தலைதூக்கியுள்ளது. மேலைநாடுகளில் தன்னினச் சேர்க்கையாளர்கள் தமது உரிமைக்காக குரல் கொடுக்க அமைப்புகளை உருவாக்கிப் போராடுவது போல இலங்கையிலும் - இலங்கையர்கள் உருவாக்கி விட்டார்கள். அவ்வமைப்புத்தான் "ஒரு பயணத்தில் கூட்டாளிகள்" (Comp anions on a journey) என்பதாகும்.

இந்த அமைப்பின் பணிப்பாளராக இருப்பவர் 32 வயதினைக்கொண்ட "ஷேர்மன் டி.றோஸ்". இவர், ஒரு பயணத்தில் கூட்டாளிகளுக்கு உதவும் நோக்கில் அவர்கள் உரிமைக்காகப் போராடி வருகிறார்.

"ஒரு பயணத்தில் கூட்டாளிகள்" என்னும் அமைப்பில் ஆண்களும், பெண்களுமாக 7000 பேர் அங்கம் வகிக்கின்றனர். 9 வருடங்களுக்கு முன்னரே இந்த

அமைப்பு உருவாக்கப்பட்டுவிட்டது. 1800 பேர் முழுநேர உறுப்பினர்களாக வேறெந்தத் தொழில்களும் செய்யாதவர்களாக இருக்கின்றார்கள்.

இலங்கையின் தண்டனைக்கோவை 365ஆவது பிரிவு ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு குந்தகமாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின்படி, தன்னினச் சேர்க்கை என குற்றம் சுமத்தப்பட்டால் அவருக்கு 12 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படும்.

இச்சட்டம் – இலங்கையில் இருந்தபோதிலும், பல தசாப்தங்களாக இக்குற்றத்திற்காக யாருமே வழக்குத்தாக்கல் செய்ததாகத் தெரியவில்லை என சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் எத்தனையோ உரிமை மறுப்புச் சம்பவங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. அதற்கான போராட்டங்களும் நடக்கின்றன.

அதனைப்போலவே முதன்மைப்படுத்தி, ஒரு பயணத்தில் கூட்டாளிகள் தமது உரிமைக்காகப் போராட்டம் நடத்துகின்றனர்.

இவர்களது போராட்டம் என்னவென்றால், தண்டனைச் சட்டக்கோவையில் இருக்கின்ற 365ஆவது பிரிவினை அகற்றுமாறு கோரியே. இச்சட்டம்தான், வெளியரங்கமாக தமது திருமணத்திற்கு தடையாக இருக்கின்றது. இது எமது உரிமைசார்ந்த பிரச்சினை என்று – ஒரு பயணத்தில் கூட்டாளிகள் அமைப்பின் பணிப்பாளர் ஷேர்மன் டி.றோஸ் கூறுகின்றார்.

தனிமனித உரிமைகள் குந்தகமானது. அதற்குத்தீர்வு காணவேண்டும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், அந்த தனிமனித உரிமை முழு சமூகத்தையும் சீரழிக்கும் என்றால், அதனைக் குறித்து சிந்திக்கவேண்டும்.

புனித பவுல், கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் "தீங்கிழைப்போருக்கு இறையாட்சியில் உரிமையில்லை என்று உங்களுக்குத் தெரியாதா? ஏமாந்து போகாதீர்கள்; பரத்தைமையில் ஈடுபடுவோர், சிலைகளை வழிபடுவோர், விபசாரம் செய்வோர், தகாத பாலுறவு கொள்வோர், ஒரு பால் புணர்ச்சியில் ஈடுபடுவோர், திருடர், பேராசையுடையோர், குடிவெறியர், பழிதூற்றுவோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை" என்கின்றார். (1கொரி6:9-10)

ஆகவே, இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ளவேண்டுமாயின் – எமது நடத்தைகளை நேரானதாக மாற்றிக் கொள்ளுவோம். ஒரு பயணத்தில் கூட்டாளிகளின் நடத்தை சரியானதா? அவர்கள் முன்வைக்கும் உரிமை சார்ந்த விடயம் ஆரோக்கியமானதா? என்பதை உளவியல் – சமூகவியல் – ஆன்மீக ரீதியில் மீள்பார்வை செய்யவேண்டும். ஒருபால் புணர்ச்சியில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமை ஆக்கிக்கொள்வதில்லை என்பது விவிலியம் கூறும் எச்சரிக்கையாகும். சிந்திப்போம்!

**யாழ். தினக்குரல்**
*30.11.2004*

6

# வெறுமையும் தாழ்மையும் உயர்வு தரும்

"நான்" என்ற அகந்தை கொண்டவர்கள் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த முடியாது. ஒற்றுமையாக எந்தக் காரியங்களையும் முன்னெடுக்க முடியாது.

தன்னைப்பற்றிய உயர்வு மனப்பான்மையே "நான்" என்ற அகந்தை தோன்றக் காரணமாகும். எப்போது – மற்றவர்கள் மீது அக்கறையும், கரிசனையும் உருவாகின்றதோ அப்போதே சமூகப்பணிசெய்ய மனம் உந்தும். இச்சமூகப் பணிசெய்ய "நான்" என்ற அகந்தை அகன்றுபோக வேண்டும். எம்மை நாம் உயர்வாகப் பேசும் பண்பு மாற்றம் கண்டு, மற்றவர் நலன் குறித்து சிந்திப்பது நல்லது.

'வெறுமை' என்பது எமக்குள்ளே ஏற்பட வேண்டும். இங்கு வெறுமை என்பது கௌரவம், இனம், சாதி, அந்தஸ்து, படிப்பு போன்றவை எமக்குள் மேலோங்கி இருந்தாலும், அவற்றினால் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் என்ற நிலையும், அதனைப்பாவித்து மற்றவர்களை அடக்கி ஒடுக்கும் நிலையும் அகன்று, ஒரு வெறுமை நிலை ஏற்படுத்தலாகும்.

இத்தகைய பண்பினை நாம் இயேசுவிலே காணலாம். இதைத்தான் புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் கூறுகின்றார்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்". (பிலிப்பியர் 2:6-10)

கடவுள் வடிவத்தில் உயர்ந்தவராக இருந்த இயேசு முற்றிலும் தம்மைத் தாழ்த்தினார். வெறுமையாகினார். பெத்தலகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். மற்றவர்களின் "நான்" என்ற அகந்தையினால் தாக்கப்பட்டார். சிலுவையில் கேவலமாக மரித்தார். மீண்டும் உயிர்த்தார். இதனால் பூவுலகம் முழுவதும் பணிந்து வணங்கும் மேலோனாக இன்றும் விளங்குகின்றார். எமக்குள் வாழ்கின்றார்.

காட்டிலே ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். அவருடைய புகழ் எல்லாத் திசைகளிலும் பரவியது. பக்கத்து நாட்டு அரசன் அவரைப் பார்க்கவிரும்பினான். தன்னுடைய அமைச்சரிடம் குதிரை பூட்டிய ரதத்தைக் கொடுத்தனுப்பி முனிவரை அரண்மனைக்கு

அழைத்து வரும்படி கூறினான். அமைச்சர் காட்டிற்குச் சென்று முனிவரை வணங்கி "கர்மயோகி என்ற முனிவர் தாங்கள் தானே? உங்களை எங்கள் அரசர் அழைக்கிறார்" என்றான். அதற்கு முனிவர் "அப்படி இங்கு யாரும் இல்லை" என்று கூறினார். அமைச்சர் வருத்தத்தோடு சென்று அரசனுக்கு இதைத் தெரிவித்தார். "இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது. மறுபடியும் சென்று அவரைக்கட்டாயப்படுத்தி அல்லது தூக்கி ரதத்தில் வைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்று கூறினார். அமைச்சரும் அவ்வாறே செய்தார். அரண்மனையில் முனிவரைக் கொண்டுவந்து உட்கார வைத்தார்கள். அரசன் முனிவரிடம் "கர்மயோகி" என்ற முனிவர் தாங்கள் தானே? என்று கேட்டதற்கு ஏன் இல்லை என்று கூறினீகள்? எனக்கேட்டார். அதற்கு அந்த முனிவர் "அந்த ரதத்தைக்கொண்டு வாருங்கள்" என்றார். முதலில் ரதத்திலிருந்து குதிரையைக் கழற்றும்படி கூறினார். பின்பு அரசனைப் பார்த்து "இது தான் ரதமா?" என்றார். அரசன் இல்லை என்றார். இதேபோல ரதத்தில் ஒவ்வொரு பாகமாகப் பிரித்து இதுதான் ரதமா என்று கேட்டார். அரசன் இல்லை என்றார். கடைசியில் முனிவர் ரதம் எங்கே? என்றார். அரசன் விழித்தான்.

பின்பு முனிவர் அரசனைப் பார்த்துக் கூறினார். "நான்" என்பதும் இதுபோலத்தான். நான் என்பது என்னுடைய பெயர், குடும்ப உறவு, படிப்பு, பட்டம், ஜாதி, மதம், இனம் இது எல்லாம் சேர்ந்தது தான் "நான்". இதை ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்து விட்டோம் என்றால், கடைசியில் எஞ்சியிருப்பது வெறுமை ஒன்றுதான். இந்தவெறுமைதான் நம் எல்லோரையும் சமமாகப் பார்த்து அன்பு செய்யவைப்பது. இந்த வெறுமைதான் சொர்க்கம், மோட்சம், இறையரசு எல்லாம். வெறுமையை அடைந்து விட்டவனின் வாழ்வில் எப்போதும் எல்லாமும் நிறைவும், மகிழ்ச்சியும் தான் என்றார்.

ஆகவே, நாம் எம்மை வெறுமையாக்கி, இறையரசின் விழுமியங்களை எமக்குள் உருவாக்கி வாழ்வை முன்னெடுப்போம். இயேசுகிறிஸ்து கொண்டிருந்த பணிநிலையை நாமும் கொண்டு மற்றவர்களுக்காகப் பணியாற்றி மகிழ்வான வாழ்வு வாழ்வோம்.

**வலம்புரி**

*25.07.2004*

## வீசும் தென்றலே...

*வீசும் தென்றலே வாழ்க வாழ்க*
*வினை தீர்க்கும் வித்தகனே வாழ்க வாழ்க*
*குருதி சிந்தி மீட்பவனே வாழ்க வாழ்க*
*குழந்தைகளை அரவணைப்போய் வாழ்க வாழ்க*

*தாவீதின் குலக் கொழுந்தே வாழ்க வாழ்க*
*தாழ்ந்தோரை உயர்த்துவோனே வாழ்க வாழ்க*
*ஆனந்த கடலே வாழ்க வாழ்க*
*அணையாத வான் விளக்கே வாழ்க வாழ்க*

7

# இறைவன் வாழும் இல்லம் எது?

விருப்பு வெறுப்பு என்பது எமது சிந்தனையை அடிப்படையாகக்கொண்டே காணப்படுகின்றது. எமது விருப்பு வெறுப்புக்களை ஊட்டுகின்ற ஒன்றாகவும் பொழுது போக்கு மையமாகவும் இன்று சினிமா, சின்னத்திரை என்பன காணப்படுகின்றன.

இவற்றில் காட்டப்படுகின்ற நடத்தைகளையே நாம் இன்று கடைப்பிடிக்கின்றோம். நடை, உடை, பாவனை, பேச்சு என்பன எம் மத்தியில் தீர்மானிப்பது பொழுதுபோக்கு மையங்களாகிய திரைப்படமும், சின்னத்திரையும் ஆகும்.

இதில், நெருங்கிப் பழகும் தன்மைகள் பாலியலைத் தூண்டுகின்ற வகையிலே அமைந்துள்ளது. அத்துடன் உடை உடுத்துவது, ஆடுவது, பாடுவது எல்லாமே பாலியல் தூண்டலாகவே அமைகின்றது. கிளர்ச்சியூட்டும் இசை போன்றனவும் தாராளமாய் காணப்படுகின்றது. இங்கு நேரான உணர்வுகளுக்கும், பரஸ்பர மதிப்புக்கும் இடம் கிடையாது. மாறாக, எமது பாலியலைத் தூண்டும் உணர்வைத் தருகின்றன.

இத்தகைய பாலியல் தூண்டலை பார்ப்பதினால் எமது சிந்தனையும் பாலியல் சார்ந்தே நகர்கின்றது. பாலியல் சார்ந்த கதைகளும், அசிங்கமான உடைகளை உடுத்துவதும் இதன் ஓர் வெளிப்பாடு ஆகும்.

இன்று இளைஞர்கள் மத்தியில் இழிவான பாலியல் சார்ந்த கதைகள் கதைக்காதவர்களையும், புதிய நாகரிகம் என்ற போர்வையில் அணியும் அசிங்க ஆடைகளை விரும்பாதவர்களையும்; சக நண்பர்கள் ஒதுக்குகின்றார்கள். கேலி செய்து 'ரீயூப்லைற்' என்று அழைக்கின்றார்கள்.

இதனால், சக நண்பர்களின் கேலிக்கு பயந்து பாலியல் சார்ந்த செயற்பாடுகளில் இறங்குபவர்கள் அதிகம். இதன் மூலம் தாங்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் ஓர் இழிதகமைச் செயல்களைச் செய்து வருகின்றார்கள். அதனை அவர்கள் சாதனை என்று நினைக்கின்றார்கள்.

தீமைகள் வருமுன்னே காப்பது நல்லது; வந்தபின்பு அதனைக் குறித்து கவலை கொள்வதினால் எவ்விதப்பயனும் இல்லை. ஆகவே, பாலியல் உறவு முதன் முதலில் எப்படி இருக்கும் என்று பரிசோதிக்க பிழையான உறவு முறைகளை பின்பற்றுகின்றனர் சிலர்.

எதையும் நிதானமாகச் சிந்தித்து செயற்படவேண்டும். எமது உடல் தூய்மையானது. அதனைக் கெடுக்கக்கூடாது. இறைவன் தங்கும் இல்லம் அது. இதனைத்தான் புனித பவுல் கூறுகின்றார்.

"ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார். எனவே, பரத்தைமையை விட்டு விலகுங்கள். மனிதர் செய்யும் எப்பாவமும் உடலுக்குப் புறம்பானது. ஆனால், பரத்தைமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கு எதிராகவே பாவம் செய்கின்றனர். உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூயஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா?

நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே, உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்." (1கொரி 6:17-20)

**வலம்புரி**
*06.02.2005*

## இல்லங்கள் தோறும்...

பல்லவி

இல்லங்கள் தோறும்
மகிழ்வு பொங்கும் - இயேசு
வள்ளல் பிறந்த செய்தி கேட்டு

அனுபல்லவி

ஏழை எளியோர் வாழ்வில்
ஏற்றம் தழைத்துச் செழிக்க
ஏற்றத் தாழ்வுற்ற சமுகம்
என்றும் சமத்துவம் காணும்

சரணம்

ஆண்டானும் அடிமையும் - இவ்
அகிலத்தில் அடியோடொழியும்.
ஆண்டவர் பாதம் தஞ்சமென
அடியவர் புடை சூழும்.
பசுவும் புலியும் ஒன்றாய்
உணவுண்ணும் காலம் வரும்.
பசுமையான வாழ்வு பெற
பரமன் அருள் கூடவரும்.

8

# ஆன்மீக உள்ளுணர்வு தழைத்தோங்கட்டும்

'ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்' (மீக்கா 6:8)

ஒரு சமுதாயம், பிரதேசம், நாடு எவ்வளவுக்கு ஆன்மீகத்தில் வேரூன்றி உள்ளதோ அதே அளவுக்கு அன்பு, நீதி, நேர்மை, சமாதானம், மனிதவிழுமிய பண்பாடுகளின் பரிமாணம் தழைத்தோங்கும் என்பது மறுக்க முடியாத பேருண்மையாகும்.

பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பா ஆசியாவின் ஆன்மீகம் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போது 'உலகத்தின் பெரும்விருட்சமாக வளர்ந்திருக்கும் மதங்கள் அனைத்தும் ஆசியாக் கண்டத்தில் தான் தோன்றின. இந்த மதங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் ஆன்மாவின் ஆழமான ஆன்மீக உள்ளுணர்வு, ஞானம் ஆகியவற்றைக் கொண்டவர்கள்.' என்று குறிப்பிடுகின்றார். எனினும் மேலைத்தேச மக்களுக்கு, ஆசியாவின் ஆன்மீகத்தையும், பற்றுறுதியையும் பின்பற்றி ஆன்மீகத்தை ஆழப்படுத்துங்கள்......... என்று அறை கூவுவதுபோல ஆசியாவின் ஆன்மீகத்தை வியந்துபோற்றுகின்றார்.

இதன் அடிப்படையில் ஆசியாக் கண்டத்தில் அங்கம் வகிக்கும் எமது நாடு இக்கருத்துக்கு எந்தளவு தூரம் பொருத்தப்பாடு உடையது? எமது இளைஞர், யுவதிகள் எந்தளவு தூரம் பக்தி உணர்வையும், பிறரன்பையும், ஆழப்படுத்தும் உணர்வுபூர்வ ஆன்மீகப் பற்றுறுதியில் இருக்கின்றனர்.

நான் இக் கூற்றுக்குத் தகுதியுடையவனா?

எனது ஆன்மீகப் பற்றுறுதி எவ்வளவு தூரம் ஆழப்படுத்தப்பட்டது?

நான் மற்றையவர்களை ஆன்மீக ரீதியில் வழி நடத்துகின்றேனா?

போன்ற வினாக்களை நம்மை நாமே பார்த்து கேட்க வேண்டும். அப்பொழுது எமது ஆன்மீகநிலை எமக்கே புரிந்து கொள்ளும்.

நீண்ட காலயுத்தத்தினால் பூலோகமயமாக்கப்படும் எமது பிரதேசம் அநேக இழப்புக்கள், வன்முறைகள், பாலியல் வல்லுறவுகள், பயங்கரங்கள், ஆன்மீக பாதையில் கிறிஸ்தவர்களை வழிப்படுத்துவதில் மிகுந்த நெருக்கடிகள் தோன்றித் தாண்டவ மாடுகின்றன. ஆனால், அதே நேரம் எமது வாழ்க்கையின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, எதிர்காலம், அபிலாசை போன்றன வீணடிக்கப்படுகின்றன. இவைகள் முற்றுப்புள்ளி

இல்லாது தொடர்கதையாகிக் கொண்டே போகின்றன. இந்த ஒட்டு மொத்தமான சூழ்நிலை எமது ஆன்மீகத்தை உறுதிப்படுத்தி இறைப் பற்றுறுதியை ஏற்படுத்த சிறந்தவொரு காலமாக அமைகின்றது. ஏனெனில், இதை விட மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்தது தான் எமது ஆதித்திருச்சபை. அக்காலத்தில் ஆன்மீகம் வலுப்பெற்றது. கிறிஸ்தவம் பெருகியது. கிறிஸ்துவுக்காகத் தங்களையும் அர்ப்பணித்த வேதசாட்சிகள் ஏராளம்.

எனவே, இந்த யுத்தகாலம் எம்மை நாம் ஆன்மீகத்தில் ஆழப்படுத்த வேண்டிய காலம். ஆனால், மாறாக இன்று ஏதேன் தோட்டத்தில் இறைவனால் விலக்கப்பட்ட கண்ணுக்குக் கவர்ச்சியான மரமும் அதன் பழங்களும் பெருகிக்கொண்டே போகின்றன. இவை இன்று நவீன தொழில் நுட்ப சாதனங்களாகப் புதிய இடையிட்ட பண்பாட்டுக் கலாசாரத்தினாலும் வளர்கின்றன.

வீட்டிற்குள்ளே பாவத்தை ரசித்து, புசிக்க தொலைக்காட்சிப்பெட்டிகள் நிறைந்து வழிகின்றன. இதனால், அரைகுறை நிர்வாணப்படக் காட்சிகளுக்குக் குறைவில்லை. இதனை குடும்பத்துடன் ரசிக்கின்ற தன்மையும் நண்பர்களாகச் சேர்ந்து நீலப்படக் காட்சிகளை ரசிப்பதும் பெருகுகின்றது.

அந்தப் படக்காட்சியில் வருகின்ற நடிகைகள் போலத் தம்மையும் அழகுபடுத்தி, உணர்ச்சி தூண்டுகின்ற அரை குறை ஆடை அணிகலன்களையும் அணிந்து, வீதியில் வலம் வருகின்றார்கள். நரகமே சுவர்க்கம் என்னும் அளவுக்கு மாயை வலைக்குள் வீழ்ந்தும் காமவெறி கொண்ட கயவர்களாகவும், தாராளமான மது வகைகளை இறக்குமதிசெய்து குடித்து வெறித்து வாழ்கின்ற தன்மை இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனால், நம்பிக்கையற்று, ஆன்மீகத்தில் வலுவிழந்து, உள்ளத்தில் தூய்மையற்று, அற்பசொற்ப மாயை வலைக்குள் வீழ்ந்து விட்டோம்.

இந்த நேரத்தில்தான் எம்மவர்க்கு 'எனக்கெதிராகப்போர் எழுந்தாலும், நான் நம்பிக்கையோடிருப்பேன்...' (திருப்பாடல்கள் 27:3), 'நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை; குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை.....' (11கொரி4:8) எனத் தாவீதும், புனித பவுலும் நம்பிக்கை தந்து உற்சாகம் ஊட்டுவதுபோல நாங்களும் நம்பிக்கை இழந்து போகாமல் ஆன்மீகத்தில் இறைவனுடன் ஒன்றிணைந்து வாழமுற்படுவோம்.

எமது ஆன்மீகத் தேடலுக்கும் பற்றுறுதிக்கும் எப்படியான மாயவலைகள் விரிக்கப்பட்டாலும் அந்த வலையில் சிக்கித் திணறாதபடிக்கு உறுதியாக இருக்க தூய ஆவியானவரை மன்றாடுவோம்.

"கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும்."

(திருப்பாடல்கள் 51:10)

**வலம்புரி**
*23.09.2001*

9

# தனிமரம் என்றும் தோப்பாகாது

மனிதர்கள் சேர்ந்து கூட்டாக வாழவேண்டும். மிருகங்கள், பறவைகள் ஒன்றாகக் கூட்டு வாழ்க்கையைத் தான் மேற்கொள்கின்றன. இந்தக்கூட்டுவாழ்க்கையின் தனித்தன்மை என்னவெனில்; ஒருவர் சோர்ந்து போகின்றபோது அடுத்தவர் ஆறுதல் அளிக்க முடியும்: மகிழ்ந்திருக்கும் போது அந்த மகிழ்வினைப் பகிர்ந்து கொள்ளமுடியும்.

குழுமத்தின் அல்லது கூட்டு வாழ்க்கையை வெறுப்பவர்கள் தனி மரமாக, நடைப்பிணம் போல் தான் காணப்படுவார்கள். அத்துடன் மனதில் ஒரு இறுக்கத்தன்மை கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

அநேகர் வாழ்வுக்குப் பணம்தான் முக்கியம் என்றும்; பணம் என்னிடம் இருக்கின்றதுதானே! ஆகையினால் மற்றவர்களின் உதவி எனக்குத் தேவையில்லை என்றும் நினைக்கலாம். இது கூட ஒரு குறுகிய வறட்டுச்சிந்தனையே.

வெளிநாட்டுச் சம்பாத்தியம் எமது சமூகத்தினை ஆட்கொண்டு; இந்தக் கூட்டு உழைப்பினை, குழும வாழ்வைச் சீர்குலைத்து விட்டது.

அநேக குடும்பத்துப் பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து உழைக்கின்றார்கள். இங்கு வயோதிபப் பெற்றோர் மட்டுமே இருக்கின்றார்கள். இவர்கள் நினைக்கின்றார்கள் தமக்குப் பிள்ளைகள் நிறையப் பணம் அனுப்புகின்றார்கள்; எமக்கு என்ன குறை...

இங்கு அவர்களின் சிந்தனை தவறிப்போகின்றது. அதாவது கடையில் பொருட்களைக் காசு கொடுத்து வாங்கமுடியும். பொருட்கள் வேண்டுமென்று விதவிதமாக எத்தனையோ வாங்கிக் குவிக்கலாம். இதனையாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், மகிழ்வை - மற்றவர் உறவைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா? என்பதைச் சிந்திக்க மறுக்கின்றார்கள்.

முதுமையில் இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பிரிந்த நிலையில் அயலவர்களுடன் மற்றும் உறவுகளுடன் அன்பாகப் பரிவுடன் நடந்து கொள்ள மறந்து இறுதியில் அவர்கள் வீட்டுக்கே யாரும் செல்லாமல் இருப்பதைக் காணலாம். இதனால், அவர்களை தனிமைவாட்ட ஆறுதல் சொல்லயாருமின்றி மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டு மகிழ்வாக இறுதிக்காலத்தைக் கழிக்க வேண்டியவர்கள், சோகமாக மிகவும் பரிதாபகரமாக தமது வாழ்வைக் கழிப்பதைக் காணலாம்.

“தனி மனிதராய் இருப்பதை விட இருவராய் இருப்பது மேல். ஏனெனில், அவர்கள் சேர்ந்து உழைப்பதால், அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும். ஒருவர் விழுந்தால், அடுத்தவர் அவரைத் தூக்கிவிடுவார். தனி மனிதராய் இருப்பவர் விழுந்தால்,

அவரது நிலைமை வருந்தத்தக்கதாகும்; ஏனெனில், அவரைத் தூக்கிவிட எவருமில்லை". (சபை உரையாளர் 4:9-10)

இத்தகைய விவிலிய வாக்கு கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை அறிவுறுத்துகின்றது. பணம் நிறைய இருந்தாலும் மன அமைதி வேண்டும். இந்த மன அமைதியை நிறைவான கூட்டுவாழ்க்கைதான் தரும். பணக்காரன் தனிமையில் வாழ்வைக் கழிக்கின்றான். ஆனால், சாதாரண ஏழை தனது வாழ்நாளை மிகவும் மகிழ்வாகவும் நிம்மதியுடனும் கழிக்கின்றான். ஏனெனில், அவன் கூட்டாக குடும்பத்துடன் அயலவர்களுடன் வாழ்வதினால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக ஆறுதல்படுத்துபவராக இருப்பதினால் ஆகும்.

"காற்றைப் பிடிக்க முயல்வது போன்ற பயனற்ற உழைப்பு இரு கை நிறைய இருப்பதை விட மன அமைதி ஒரு கையளவு இருப்பதே மேல்". (சபை உரை. 4:6)

ஆகவே, உறவுகளை வெறுக்காது இருப்பது என்றும் பயன்மிக்கது. மனிதன் ஒரே நிலைப்பாட்டில் என்றும் இருப்பதில்லை. ஒரு நேரம் மகிழ்வாக இருப்பான். இந்த மகிழ்வைக் கூட மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள உறவு, நண்பர்கள், குடும்பம் தேவையானது. துக்கம்கூடத் திடீரென ஏற்படும். இந்தத் துக்கத்தில் இருந்து மீண்டும் ஆறுதல் அடைவதற்கு மற்றவர்களின் ஆறுதல் மொழிகள் தேவை. அத்துன்பத்தில் இருந்து விலக அறிவுரைகள் தேவை.

வாழ்தகவுடன் இருக்கும் விதைக்கு ஈரப்பதன், வெப்பம், வளி, நீர் என்பன கிடைக்கின்ற போது. அது முளைத்துப் பலன் கொடுக்கின்றது. அதைப்போல எமக்கு மற்றவர்களின் அன்பும் பரிவும் கிடைக்கின்றபோதே எம்மால் நிறைவாக மகிழ்வாக வாழ்வை முன்னெடுக்க முடியும்.

**வலம்புரி**

*31.10.2004*

## *சித்தத்தில் எண்ணியே...*

*பல்லவி*

*சித்தத்தில் எண்ணியே சிந்தையும் மகிழ*
*பெத்தலையில் மலர்ந்த இயேசுவைப் பாடு...*

*அனுபல்லவி*

*புயலென வீசிடும் போர்முகங்கள்*
*நேயன் வரவால்*
*தயக்கம் கொண்டோடினவென்று...*

*சரணம்*

*யுத்தங்கள் சத்தங்கள் நித்தமும் கேட்டு*
*அச்சங்கள் அழிவுகள் தந்தன முன்பு*
*உள்ளங்கள் அமைதியைப் பெற்றுமே-எங்கள்*
*உறவுகள் மகிழ்வுகள் அடையுதே இன்று.*

10

# மன்னிப்பின்றி அமைதி இல்லை

'சமாதானம்' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அதற்கு பல்வேறு கோணங்களில், பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றது. உளவியலாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் சமாதானத்திற்குக் கொடுக்கும் விளக்கம் தனிமனிதனுக்குள், அவனது உளம் சார்ந்து ஏற்படுவது என்பர். அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அவர்கள் கூறும் விளக்கம் யுத்தமற்ற ஓர் சமூகநிலையே சமாதானம் என்பர். அதாவது, பொருளாதார முறையில் வெளிநாடு முதலீடுகளை அதிகரிக்கச்செய்து வர்த்தகச் சம நிலையைப் பேணுவதும் ஒரு சீரான வளர்ச்சிப்போக்கினை கருத்தில்கொள்வதும் ஆகும்.

இத்தகைய வரையறைகளைக் கூறிய போதிலும், சமாதானம் என்பது இரண்டு வகை கொண்டது. ஒன்று போலி சமாதானம், இரண்டு நிரந்தர சமாதானம். இங்கு போலி சமாதானம் என்பது – ஓர் அமைப்புக்கு சவாலிட்டு, அச்சத்தையும் – பயத்தை உண்டு பண்ணுபவரை, சமுதாயத்தில் இருந்து களைவதனூடாக ஏற்படுத்துகின்ற அமைதி நிலை. இது, தற்காலிகமானது. தற்காலிக அமைதியைப் பேணுவதற்காக சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட முற்படுபவர்களை சமூகத்தில் இருந்து களைவது பெரும் அபத்தமானது.

தென்னாபிரிக்காவில் கறுப்பு இனமக்களின் விடுதலைக்காக, வெள்ளையின மக்களை நெல்சன் மண்டேலா சவாலிட்டார். இதன் காரணமாக நெல்சன் மண்டேலா அதற்கு குழப்பத்தை உண்டுபண்ணுகின்றார் எனக் கருதி, அரசு அவரை கைதுசெய்து சிறையில் அடைத்தது. இங்கு நீதிக்காக குரல்கொடுத்த மனிதரை ஆளும் வர்க்கம் தமக்கு அமைதிவேண்டி செயற்படும் இழிவுநிலைதான் நெல்சன் மண்டேலாவுக்கு ஏற்பட்டது.

இவ்வாறு, சமூகத்தை சவால் இடுபவர்களினால் நடைமுறை அமைப்பு பாதிக்கப்படுகின்றது என உணர்பவர்கள் அவர்களை சமூகத்தில் இருந்து களைவதனூடாகப் போலி அமைதியை உருவாக்குகின்றனர். மேலும், போலி அமைதியை உருவாக்க வன்முறையைக் கருவியாகப் பாவிப்பதையும் காணலாம். இவை அனைத்தும் ஒரு நிரந்தர அமைதியை உருவாக்கப்போவதில்லை என்பது உறுதி.

இயேசு வாழ்ந்த காலத்திலும், இயேசு சமூகத்தில் காணப்பட்ட அடக்கு முறைக்கும், போலிகளுக்கும் எதிராகச் செயற்பட்டார். குரல் அற்ற மக்களின் குரலாக அவர்களின் விடுதலைக்காகப் போராடினார். இச் செயற்பாடுகள் ஆளும் தரப்பினருக்குப் பயத்தை உண்டு பண்ணியது. இதனால், இயேசுவைப் பொய்க் குற்றம் சுமத்தி சிலுவையில் அறைந்தனர். இதைப்போல எமது சமூகப் புலத்தில், நமது வேலைத்தளத்தில், பொது


வி.பி. தனேந்திரா

நிறுவனங்களில் எம்மால் மற்றவர்களும் மற்றவர்களால் நாமும் புறந்தள்ளப்பட்டு இருக்கின்றோம். இவை ஏன்? இது நியாயமா?

நிரந்தர 'அமைதி' வேண்டும் என்றால் அவை நீதியோடு கூடியதாக காணப்பட வேண்டும். இதை விவிலியத்தின் ஊடாகப் பார்க்கும் போது! இயேசு சக்கேயுவைப் பார்த்து உமது வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று (லூக்19:9) என்று கூறினார். இங்கு மீட்பு அமைதி ஏன் வந்தது என்றால்: "ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகின்றேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக்கா 19:8) என்று சக்கேயு மனம் மாறிய நிலையினை இங்கு நோக்கலாம். எனவே, உண்மையான அமைதி நீதியோடு உருவாக்கப்படவேண்டும். இந்த நீதிகளும் மன்னிப்பை மையமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

உண்மையான அமைதி ஏற்படுத்த முற்படும்போது, நீதிக்குள் ஊடுருவி இருக்கும் அநீதியையும் கண்டறிய வேண்டும். மேலும், அடுத்தவர் உரிமைகள் மதிக்கப்படும்போதும், அதனைப் பேணும்போதும் உண்மையான அமைதி மலர்கின்றது.

நிரந்தர 'அமைதி'; வன்முறையற்ற ஆயுத கலாசாரமற்ற ஓர் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படவேண்டும். எனினும், ஆயுதப்போராட்டம் என்பது இறுதியாகக் கையாளப்படவேண்டிய ஓர் அணுகுமுறையாகும்.

இறுதியாகக் கையாளப்படும் ஆயுதப்போராட்டத்தை ஊக்குவிக்கும் அதே நேரம் அகிம்சைப் போராட்டத்தையும் வலியுறுத்திப் போராட அழைக்கப்படுகின்றோம். இயேசுவின் வாழ்விலும் 'உன்னை ஒருவன் வலது கன்னத்தில் அறைந்தால், உன் இடது கன்னத்தையும் காட்டு' என ஆண்டவர் கூறியதன் மூலம் வன்முறையற்ற ஓர் அமைதி பலமானதென்பதை வலியுறுத்தி நிற்கிறது.

ஒடுக்கப்படுபவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்குமிடையே ஓர் புரிந்துணர்வு நிலை ஏற்படும் போது, நிரந்தர அமைதி உண்டாகும். இந்நிலை இன, மத, சாதி, வகுப்பு, அந்தஸ்து என்ற பல தரப்பிலும் ஏற்படவேண்டும். ஆகவே, நாம் தற்காலிக அமைதிப் பயணத்தை கருத்தில் கொள்ளாது. நிரந்தர அமைதியை நோக்கிய பயணத்திற்கு தயாராகுவோம். நீதியோடு கூடிய அமைதியை உருவாக்குவோம்.

**வலம்புரி**

*17.10.2004*

## பூரண நிலவாய்...

*பூரண நிலவாய் உதித்தாய் போற்றி*
*புத்துயிர் அளிக்கும் அன்பே போற்றி*
*தாழ்ந்தோர் மகிழும் உயர்வே போற்றி*
*தாங்கி யணைக்குந் தயாளா போற்றி*

*மலரும் மணமும் ஆனாய் போற்றி*
*மறையின் பொருளாய் நின்றாய் போற்றி*
*பாவம் போக்கும் பரமே போற்றி*
*பாவலர் பாடும் கருவே போற்றி*

11

# சமூகத்தை பாதுகாப்பது அவசியம்

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது" (மத். 5:13)

மனித வாழ்வு அர்த்தம் கொண்டதாக அமையவேண்டும். ஏனோ, தானோ என்று வாழ்ந்து, காலத்தைக் கடத்துவது உண்மை வாழ்வல்ல. எமக்கு சிறுவயதில் இருந்து போதித்த அறநெறியின்படி வாழ வேண்டியது அவசியம். சமய போதனைகளும் நல்லதைச் செய், தீமையை வெறுத்து ஒதுக்கு என்று தான் போதிக்கின்றது.

இயேசு பிரான் மனிதர்களைப் பார்த்து 'நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்' என்று உருவகிக்கின்றார். ஏன் எம்மை உப்புக்கு உருவகிக்கின்றார் என்றால், மனித வாழ்வுக்கு உப்பு பல பாடத்தை கற்பிக்கின்றது. அதனூடாகப் பல உண்மைத் தன்மை மறைந்திருக்கின்றது.

அதாவது, உப்பு உணவுப் பொருட்களைப் பாதுகாக்கின்ற ஒரு பதார்த்தம். நுண்ணங்கிகள் உணவுப் பொருட்களை பாதிக்காத வகையில் பாதுகாக்கின்றது. அத்துடன் நீண்ட காலம் உணவுப் பொருட்களைப் பேணவும் உதவுகின்றது.

இதேபோன்று தான் மனிதர்களாகிய நாமும் குடும்ப, சமய, சமூக நிறுவனங்களை தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

இன்றைய எமது சமூகப் புலத்தை நோக்கும்போது எத்தனையோ தீமைகள், சமூகத்தை நிலைகுலைய வைக்கின்றன. மீளமுடியாத துன்பியல்பு அனுபவத்தைப் பெற்று, மனம் சிதைந்து போனவர்கள் ஏராளம். இங்கு பணியாற்றும் பொறுப்பு எம்முடையதாகும்.

சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. அவர்களை வேலைக்கமர்த்தி கொள்ளை இலாபம் தேடுவோர் பலர் இருக்கின்றார்கள். சிறுவர்களை பாலியல் தேவைக்கு பயன்படுத்தி அவர்களை உடல், உள ரீதியாகப் பாதிப்படையச் செய்து எதிர் காலத்தைச் சிதைக்கும் கொடியவர்கள் இருக்கவே செய்கின்றார்கள். இவர்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

பெண் உரிமை மீறலும், அவர்களை ஒரு இன்பப் பொருளாக மட்டும் பாவித்து உதறித்தள்ளிக் கொள்வதும், சலுகை கொடுப்பதாகக் கூறி ஏமாற்றுவதும், சீதனத்தின் பேரால் கொடுமைப்படுத்துவதும் பெரும் தீமைகள் ஆகும். இதனால், பெண்கள் உள்ளத்தில் ஆறமுடியாத காயங்கள் ஏற்படுகின்றன.

குற்றவுணர்வும் அவர்களை வாட்டி வதைக்கின்றது. இத்தீமைகளில் இருந்து

பெண்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

முதியோரை புறம்தள்ளி, அவர்களின் மனிதத்தன்மையை இழந்துபோக வைப்பதும் சொத்துக்காக மட்டுமே பெற்றோர் எனக் கருதுவதும், அவர்களிடம் அன்பு காட்டாமல் சீறிச் சினந்து துன்புறுத்துவதும், தனிமையில் வாடவைப்பதும் அவலமானது. மூத்தோர் எம் சமூகத்தின் முதுசம். அவர்களை இத்தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

ஊனமுற்றவர்கள் முழுவியத்துக்கு உதவாதவர்கள் என்ற கருத்தியல் இருக்கின்றது. இதனால், அவர்களை வெறுத்தொதுக்குவதும், அவர்களின் குறைகளை கேலிப் பொருளாக்கி அவமதிப்பதும், அவர்கள் வாழ முடியாத அளவுக்கு சிறந்த பாதுகாப்பும், பராமரிப்பும் கொடுக்காமையும் அபத்தமானது. இதனால், ஊனமுற்றோர் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மற்றவர் முன் தாம் இழிவானவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலும் அதிகரிக்கின்றது. எனவே, அவர்களை அன்பு செலுத்தி நேசிக்க வேண்டும். சிறந்த பராமரிப்புக் கொடுக்க வேண்டும். பிறர் தீமைகளில் இருந்து இவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இளைஞர்களைப் பொறுத்தவரை தம் கடமை மறந்து செயற்படுகின்றார்கள். சந்திகளிலும், வீதிகளிலும் இருந்து பிறரை கேவலப்படுத்தும் அளவுக்கு செயற்படுதல். சினிமா மோகத்தில் மூழ்கி அதைப் போன்ற பாணியில் செயற்பட முற்படுதல். இதனால், காதலுக்கு அர்த்தம் புரியாமல் பலரைக் காதலித்து ஏமாற்றுதல். குழு சார்ந்த மோதல்களில் ஈடுபடுதல் போன்றவற்றால் பலர் பலவகையில் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். இதிலிருந்து இளைஞர்களையும், சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

அரசியல்வாதிகளினால் ஏற்படுகின்ற தீமைகள், குடிபோதைக்கு அடிமையாக இருப்போர் ஏற்படுத்துகின்ற தீமைகள், சாதியத்தின் பேரால் ஏற்படும் தீமைகள், முதலாளிகளினால் தொழிலாளிக்கு உண்டாக்கும் தீமைகள் இவைகளில் இருந்து விடுதலையும் பாதுகாப்பும் பராமரிப்பும் கொடுக்கவேண்டும்.

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்" என்ற கிறிஸ்துவின் அறைகூவல் இன்று எமக்குப் பெரிய சவாலாக அமைகின்றது. இந்த அறைகூவலை நாம் அசட்டைசெய்ய முடியாது. கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம் இந்த அறைகூவலுக்கு செவிமடுத்து, சமூகத்தில் புண்பட்டு, சீழ்வடிந்து நாற்றம் எடுக்கும் தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும். உணவுப் பதார்த்தத்தினை உப்பு எவ்வாறு பாதுகாக்கின்றதோ அதேபோன்று நாமும், சமூகத்தின் பாதுகாவலர்கள். இவ்வாறு சமூகத்தில் தீமைகளைக் களைந்து, பாதுகாக்க நாம் தகுதிபெற வேண்டும் என்றால், முதலில் அத்தீமைகளை செய்யாது நாம் வாழவேண்டும்.

அவ்வாறு தன்னை கரைத்து தியாகம் செய்யும் உப்பினால் உணவு எவ்வாறு சுவைபெறுகின்றதோ அதுபோல் எம்மையும் கரைத்து தியாகம் செய்யும்போது சமூக தீமைகள் அகன்று போகும். சமூகமும் நல்லதாக உருப்பெறும்.

எனவே, இயேசுநாதரின் இந்த அறைகூவலை, எமது செவிகளினால் மட்டும் கேட்டு அசட்டுத்தனமாக வாழாது, எமது வாழ்வினால் அதனை செயற்படுத்த தூய ஆவியின் துணைவேண்டி மன்றாடுவோம்.

**வலம்புரி**
*11.07.2004*

12

# தவறுகளைத் திருத்துங்கள்

மனித வாழ்வில் துன்பங்கள் என்பது யதார்த்தமான ஒன்று இதனை யாரும் மறுக்கமுடியாது. இவை ஏதோ ஒரு வடிவத்தில் வந்தே தீரும். இங்கு தான் மனிதன் இறைவனிடம் கேள்வி எழுப்புகின்றான். எல்லாம் வல்லவர் எல்லா உயிர்களிடமும் அன்பு கூறுகின்றவர் ஏன் மனிதர்களின் துன்பங்களை நோக்காது இருக்கின்றார்.

இத்தகைய கேள்விகளை நாம் துன்பப்பட்ட வேளையில் எழுப்பி இருக்கின்றோம். இச்சந்தர்ப்பத்தில் நாம் சிந்திக்க வேண்டிய காரியங்கள் என்னவெனில் துன்பங்கள் மனித வாழ்வில் ஏன் வருகின்றன? அதன் மூலம் என்ன என்று மீள்பார்வை செய்யவேண்டும்.

அவ்வாறு பார்க்கும் போது துன்பங்கள் எமக்கு ஏற்படுவதற்கு, எமது தவறுகள் காரணமாக இருப்பதை உணரமுடியும். அதாவது, ஒருவர் குற்றச்செயல்களை செய்து சிறையில் அடைபட்டு துன்புறுபவராக இருந்தால்; அவர் இறைவன் மீதும் விதிமீதும் பழிசுமத்துவதில் அர்த்தமில்லை. இங்கு தனது தவறினால் துன்பத்தை அடைகின்றார்.

இயற்கை அழிவுகளினாலும் எமக்குத் துன்பம் ஏற்படுகின்றது. இதற்கும் கூட எமது தவறுகளே காரணமாக அமைகின்றது. ஏனெனில், காடுகளை அழிக்கின்றோம். அதனால், மழை வீழ்ச்சியின்றி வறட்சி ஏற்படுகின்றது. பிளாஸ்ரிக் பொருட்களைப் பாவிப்பதனால் எமது சுற்றுச்சூழல் மாசடைகின்றது. ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் இயற்கைச் சமநிலையைக் கெடுக்கின்றோம். இதனால் இயற்கை மனிதனுக்கெதிரியாக மாறிவிட்டது. இறைவன் இயற்கையைப் பேணிப்பாதுகாக்கவும் இன்னும் விருத்திசெய்யவும் சொன்னாரே தவிர அவற்றை அழிக்கவும் அதன் சமநிலையைக் கெடுக்கவும் சொல்லவில்லை.

இன்று பல்வகை நோய்கள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதிகமாகத் தாக்கி பெருந்துன்பத்தை உண்டு பண்ணுகின்றது. இந்நோய்த் துன்பத்தில் கூட எமது தவறினால் ஏற்படும் காரணங்களும் உண்டு. ஒருவனுக்கு ஒருத்தி என்பது எமது சமூகக் கட்டமைப்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வழக்கம். இதையும் மீறி எமது பாலியல் உந்தலைக் கட்டுப்படுத்த முடியாது பலருடன் உடல் உறவு கொண்டு எயிட்ஸ் நோயை வரவழைத்துக் கொண்டால், இங்கு யார்மீது பழிசுமத்துவது.

புகைப்பிடித்தல், மது அருந்துதல் உடலுக்குத் தீங்கினை உண்டுபண்ணும் என்பது எமக்குத் தெரியும். தெரிந்தும் அதனை உபயோகித்து நோயை வரவழைத்தால் அதற்குக்காரணம் யார்? இங்கு இறைவன் மீது குற்றமா? அல்லது மனிதத் தவறு காரணமா? எனவே, எமது தவறுகளைக் கண்டுணர்ந்து அதனால், ஏற்படும் துன்பங்களை நீக்கிக்கொள்வோம்.

வி.பி. தனேந்திரா

இயேசு பிரான் எவ்வித தவறுமிழைக்காமல் துன்பத்தை சிறுவயதில் அனுபவித்தார். இங்கு பிறரினால் இயேசுவுக்குத் துன்பம் ஏற்பட்டது. இதைப்போன்று எமது வாழ்வியலிலும் நாம் எவ்வித தவறுமிழைக்காமல் எமக்கு மற்றவர்களினால் துன்பங்கள் ஏற்படும். நாம் அனுபவிக்கும் துன்பத்திற்கும் எமது செயலிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருக்கும். இவை பெரும் அபத்தமாகக் காணப்படினும் அதனையும் எதிர்கொண்டு வாழவேண்டிய தேவை உண்டு. இங்குதான் இறைவன் மீது கொண்ட நம்பிக்கை எம்மை வாழவைக்கும் கருவியாக அமையப்பெறுகின்றது.

"அன்புக்குரியவர்களே, துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்குகொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்". (1பேதுரு4:12 – 13).

இவ்வாறு புனித பேதுரு தமது நிருபத்தில் கூறுகின்ற கருத்தை நாம் உள்வாங்கி எமது அன்பியல்பு அனுபவத்தைக் கண்டு வியக்காது அதனை மகிழ்வுடன் ஏற்று எதிர்கொண்டு வாழவும், வெற்றிப்பயணத்தைத் தொடரவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**வலம்புரி**
*03.10.2004*

## *இயேசு சீடனாக...*

பல்லவி

இயேசு சீடனாக வேண்டும் என்றும்
இயேசு பணி செய்ய வேண்டும் என்றும்

*சரணம்*

உயர்ந்தவர் தாழ்ந்தவர்
என்றுலகில் பேதங்கள்
இயேசுவின் வழியினில்
என்றும் பேதங்கள் இல்லையே

ஆலயம் சென்று இறைவனை
ஆராதிக்கும் மனிதர்கள்
இதயக் கோவிலில் இறைவனை
இருத்த நினைக்க வில்லையே

சிறுவரின் உரிமைகள்
இறையரசின் விருட்சங்கள்
சிந்தித்து வாழும் மனிதர்
இயேசுவின் வழி நடப்பர்.

13

# அன்புச் சமூகம் மகிழ்வைத் தரும்

இயேசு கிறிஸ்து பெத்தலகேம் நகரத்தில் பிறந்த மகிழ்வின் நற்செய்தியை தேவதூதர் "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்2:10) என்று இடையர்களுக்கு கூறினார்.

இன்று கிறிஸ்மஸ் பெருவிழாவைக் கொண்டாடுகின்ற எமக்கு மகிழ்ச்சி பொங்கும் நிகழ்வாக இது இருக்கின்றதா? அல்லது கிறிஸ்மஸ் ஏன் வருகின்றது என்று ஏக்கப் பெருமூச்சு வருகின்றதா? அல்லது சாதாரண ஏழைக்குடிமகன் கிறிஸ்து பிறப்பை மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக ஏற்றுக்கொள்ளுகின்றானா? என்று எமது சமூகப் புலத்தை மீள்பார்வை செய்யவேண்டும்.

உலகத்தின் மீட்பர் பிறந்த செய்தி, ஒரு பகுதி மக்களுக்கு; அதாவது பணக்காரவர்க்கத்திற்கு அந்தஸ்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றதா? அல்லது மத, இன, பால், சாதி, அந்தஸ்து கடந்து அனைவருக்கும் மகிழ்வூட்டும் நற்செய்தியாக இருக்கின்றதா?

சாதாரண ஏழைகளே வாழ முடியாத, நாற்றம் எடுக்கின்ற மாட்டுக்குடிசையில் பிறந்த கிறிஸ்துவை, நாம் மாளிகையில் குடில் அமைத்து அழகுப்பொருளாக காணவிளைகின்றோம். இயேசுவை உலக மீட்பின் பொருளாக ஏழைகளின் உயர்வாக கருதாமல் எமது பெருமைகளை அந்தஸ்துக்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக கிறிஸ்துவை, கிறிஸ்மஸ் காலத்தில் காணவிளைகின்றோம்.

அயல் வீட்டில் உள்ளோர் உணவுக்கு வழியின்றி தவிக்கின்றபோது எமது வீட்டில் அளவுக்கதிகமான உணவுப்பண்டங்களை வைத்துக்கொண்டு பகிர்ந்தளிக்க முடியாதவர்களாக, எமது உறவு, நட்பு என்று பரிமாறி மகிழ்வுகாண விளைகின்றோம். இங்கு மகிழ்வு காணவிளைவதிலும் பார்க்க எமது அந்தஸ்தை மற்றவர்கள் காணும் படியாக செயற்படுத்துவது மேலானது என நாம் உணருகின்றோம்.

கருணை வள்ளல் பிறந்த நாளைக்கொண்டாட, நாம் கருணையற்ற செயல்களைப் புரிவது மனித தருமம் அல்ல. எம்மைச் சூழ எத்தனை உயிர்கள் கிறிஸ்துவின் உருவங்களாக நடமாடுகின்றன. அவர்களிடத்தில் கருணை காட்ட நாம் முயற்சிப்பது இல்லை. இது இவ்வாறு இருக்கும்போது, நாம் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாட வேண்டுமா? இந்த விழாவைக் கொண்டாட எமக்குத் தகுதி இருக்கின்றதா?

கிறிஸ்தவ விழுமியங்கள் எம்மில் வெளிப்படும் போதே இவ்விழாவைக் கொண்டாட நாம் தகுதி பெற்றவர்கள். ஊனியல்பின் செயல்களை நாம் அகற்றிவிட்டு ஆவியின் கனிகளை வாழ்வாக வெளிப்படுத்தும் மனிதர்களாக இருக்கும்போதே கிறிஸ்மஸ் விழாவை கொண்டாட நாம் தகுதி பெற்றவர்கள்.

குடும்பம், திருச்சபை, சமூகம் இவற்றில் நாம் போலி வேடங்களாக வாழ்ந்து கொண்டு; புத்தாடை அணிந்து உணவுப் பண்டங்களை செய்து விருந்துபசாரம் கொடுப்பது கிறிஸ்தவ விழுமியங்கள் அல்ல. அது கிறிஸ்மஸ் விழாவும் அல்ல.

வாழ்வை வளமாக்க மகிழ்வு அவசியம். இந்த மகிழ்ச்சியை எங்கிருந்து பெறுவது? உள்ளத்தில் போலிகளையும், கள்ளத்தனத்தையும் வைத்துக்கொண்டு மகிழ்ச்சியான வாழ்வைச் சுவைக்கமுடியாது.

இறைவன் பிறந்த செய்தி உள்ளத்தில் கள்ளமற்ற, போலிகளற்ற மனிதர்களுக்குத் தான் நிறைந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். இது இறைவன் கொடுக்கும் அருள். இந்த அருளைப் பெற நம் உள்ளத்தை கிறிஸ்து வாழும் இல்லமாக அமைக்கவேண்டும். ஊனியல்பின் செயல்களை மீள்பார்வை செய்து அகற்றவேண்டும். ஒரு கணப்பொழுது மகிழ்ச்சியை அனுபவிப்பதா? நிரந்தர மகிழ்ச்சியை அனுபவிப்பதா? எது சிறந்தது. ஊனியல்பின் செயல்கள் எம்மில் இருப்பின் அங்கு தற்காலிக மகிழ்ச்சிதான் ஏற்படும். நாம் ஆவியின் கனிகளால் நிறைந்திருப்பின் நிரந்த மகிழ்ச்சியை வாழ்வில் அனுபவிக்கமுடியும்.

அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் முழுச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக வாழ அழைக்கப்படுகின்றார்கள். ஏழ்மை, தாழ்மை எம்மில் வளரவேண்டும். ஆடம்பரம் அல்ல, அன்புச் சமூகம் மலர எம்மை அர்ப்பணிப்போம். நிலையான மகிழ்வைக் காண்போம்.

**வலம்புரி**
*04.01.2004*

## *பகிர்ந்தளித்தவரை...*

*பகிர்ந்தளித்தவரை துதிசெய்வாய் - அவர்*
*பாதக் கமலங்களைத் துதிசெய்வாய்*
*கண்விழித்துக் காப்பவரை துதிசெய்வாய் - அவர்*
*கருணையை எண்ணித் துதிசெய்வாய்*

*சிந்தை இனிக்கத் துதிசெய்வாய் - அவர்*
*சித்தம் உணர்ந்தே துதிசெய்வாய்*
*நோய் தீர்க்கும் மருந்தவரை துதி செய்வாய் - தினம்*
*நொய்ந்தவர் நலம் பெறத் துதிசெய்வாய்*

14

# போலி வேடங்கள் வேண்டாம்...

'நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாகத்தோற்றமளிக்கின்றன; அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லாவகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன'. (மத்.23:27)

மனிதர்கள் வெளியரங்கமாகத் தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொள்ளப் போலி வேடங்களையும், முகமூடிகளையும் அணிந்து கொள்ளுகின்றார்கள். தமது வாழ்வியலை நல்லபடியாக அமைத்துக்கொள்வதாக எண்ணிப் பிறரைவஞ்சிக்கின்றார்கள்.

ஒருநாள் பொழுதை எடுத்துக்கொண்டால், எத்தனையோ போலி வேடங்களை நாம் அணிந்து கொள்ளுகின்றோம். அத்தனையும் எமது குற்றத்தை மறைக்க எம்மை நல்லவர்களாக வெளிக்காட்ட எடுக்கும் முயற்சிகள் ஆகும்.

வெளிப்பார்வைக்கு நல்லவர்களாக இருக்கின்றவர்கள் குற்றவாளிகளாக வெளிப்படுகின்ற போது –

'இவர் அப்படிச் செய்வார் என்று நான் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை'.

'அந்த மனுசனின் கதைகள் எந்தளவு தாழ்மை; ஆனால், அவருக்கு வாழ்க்கையைச் செம்மையாக்க முடியாமல் போயிட்டுதே'.

'எந்தளவு வசதியாக பேர் புகழுடன் வாழ்ந்த அந்த மனுசனின் சின்னத்தனச் செயலால் எல்லாம் போச்சு'

என்று ஆச்சரியத்தை உண்டாக்கும் வகையில் சில மனிதர் தமது வாழ்வியலை அமைத்துக்கொள்ளுகின்றார்கள். அதனால், சமூகத்தில் இகழ்ச்சிக்குரியவர்களாகக் கணிக்கப்படுகின்றார்கள்.

இன்று வழிகாட்டிகளாகத் திகழ்பவர்கள் நெறிகெட்டுப் போகின்றார்கள். முன்மாதிரிகை தலைகீழாகமாறி, எல்லாம் போலியான முறையில் வாழ்வியலை நகர்த்தி, சமூகத்தைச் சீரகெடுக்கும் தலைமைகளாக இருப்பதைக் காணலாம்.

சொல்லும், செயலும் ஒன்றாகும்போதே வாழ்வியலை நன்நெறியாக அமைத்துக்கொள்ள முடியும். மாய உலகத்தில் மற்றவருக்கு வழிகாட்ட எமது வாழ்வே நற்செய்திப் பொருளாக வேண்டும். உண்மையும் நேர்மையும் வாழ்வியலில் குடிகொண்டு செயல் வடிவமாகும்போது இறை தரிசனத்தை மற்றவர்கள் எம்மில் கண்டு கொள்வார்கள்.

அரசியலிலும் பொய், போலி இருக்கின்றது. ஏமாற்று, சுரண்டல், அடக்குமுறை, கொலை, புறக்கணிப்பு இத்தனையும் மக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. அரசியல் தலைவர்கள் மேடைப் பேச்சின்போது தம்மைவிடச் சுத்தமானவர் வேறு யாரும் இல்லை என்று வெளிக்காட்டி பல அம்சக் கோரிக்கைகளைக் கொடுத்து ஏமாற்றுகின்றார்கள்.

மக்களுக்குச் சேரவேண்டிய சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுகின்றனர்.

இதைப்போலத்தான் எமது சமூக, சமய, குடும்ப வாழ்வில் நாம் மற்றவர்களை ஏமாற்றுகின்றோம். வெளிவேடமாக நல்லவர்களாக மற்றவர்கள் எம்மை மதிக்கவேண்டும் என்பதற்காகச் செயற்படுகின்றோம். ஆனால், மறைவாக எத்தனையோ பாவமான காரியத்தை அதாவது உறவினர்களைப் பழிவாங்கும் வகையில் செயற்படுகின்றோம். இதை யாரும் கண்டுகொள்ளப்போவதில்லை என்று கருதுகின்றோம். ஆனால், அவை ஒருநாள் வெளிப்படும். மக்கள் முன் போலிவேடம் கலையும். எமது சமூகத்தில் மறைமுகமாக அநீதிகளையும், சின்னத்தனங்களையும் புரிபவர்கள் வரலாற்றில் வெளிப்படாமல் போனது இல்லை.

இறை தரிசனத்தை உண்மையாகச் சுவைக்க வெளிப்படையாகவும், உள்ளார்ந்த ரீதியாகவும், நேர்மையாகவும், உண்மைத்துவமாகவும் நடந்துகொள்வோம். போலி வேடத்தைக் களைந்து கொள்வோம்.

ஆகவே, இயேசு எம்மைப் பார்த்து எச்சரிக்கின்றார். 'நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால், உள்ளேயோ போலித்தனமும், நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள்'. (மத் 23:28)

உதயன்
*06.06.2004*

## ஊனைச் சிதைத்து...

*தொகையறா*

*ஊனைச் சிதைத்து, குருசில் மடிந்து*
*எனை மீட்க வந்த பாலகனே*
*வாடிய பயிரை வளம் பெறச் செய்ய*
*தேடியே வந்த மழை முகிலே*
*சரணம் சரணம் சரணம்*

*துயர் போக்கும் துணையே சரணம் சரணம்*
*தூதர் பாடும் பொருளே சரணம் சரணம்*
*ஈசாய் வேரின் தளிரே சரணம் சரணம்*
*ஈசன் மகனே சரணம் சரணம்*

*இன்ப ஊற்றே இறையே சரணம்*
*இரக்கம் கொண்ட உயிரே சரணம்*
*பண்ணும் இசையும் ஆனாய் சரணம்*
*மண்ணில் மலர்ந்தாய் சரணம் சரணம்*

15

# ஒருமைப்பாடும் சகிப்புத் தன்மையும் வேண்டும்

இந்த 21ஆம் நூற்றாண்டில் அறிவியல் ரீதியில் ஒரு சிறு குழுவினரை அறிஞர்களாகவும், செல்வந்தர்களாகவும் ஆக்கிவிட்டு; பெரும்பான்மையோரை வறுமைக்கோட்டின் கீழ் தள்ளி, அவர்களைப் பகடைக்காயாகப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்கின்ற தந்திரத்தைக் கையாள்கின்ற உலகம்.

அன்று சட்டத்தினால் சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட தொழுநோயாளரைப் போல் இன்று தான் செய்தகுற்றத்திற்காக காயங்களையும், வடுக்களையும் தாங்கி வாழ்வோர் ஒரு சாரார், இன்னுமொரு சாரார் தமக்கு வாழ்வில்லையே என்று சக நண்பர்களாலும் சமூகத்தாலும் புறக்கணிக்கப்பட்டுக் காயங்களையும் வடுக்களையும் தாங்கி வாழ்கின்றனர்.

இத்தகைய இரு சாராரும் இறை இயேசுவின் பாதம் நாடிவரும் பொழுது அன்று நம்பிக்கையோடு தொட்டுக் குணமளித்ததுபோல்; இன்றும் நெஞ்சினிலே காயங்களையும், வடுக்களையும் தாங்கிவருவோரை அன்போடும் பாசத்தோடும் தொட்டு அணைத்துக் குணமாக்கி மீண்டும் சமுதாயத்தில் புதுப்பிறப்படைந்த மக்களாக வாழவைக்கின்றார்.

இவ்வாறு, ஆண்டவரின் அப்பத்தினால் ஊட்டம் பெற்று வாழ அழைக்கப்பட்ட நாம்; தன்னிலே தாழ்வு நிலை கொண்டு ஒதுங்கி வாழ்கின்ற மக்களையும், பிறரால் ஒதுக்கிவைக்கப்பட்டு சுமையோடு வாழ்கின்ற மக்களையும் அன்போடும் - பாசத்தோடும் அரவணைத்து மீண்டும் அவர்களை முழுமனிதர்களாக சமுதாயத்தில் வாழ உதவும் கரங்களாக இருப்போம்.

இன்றைய காலத்தில் எம்மால் யார் புறந்தள்ளப்படுகின்றார்கள்? அவர்களை ஏன் புறந்தள்ளுகின்றோம்? அவர்களை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதா? என்று ஆராயவேண்டும்.

இத்தகைய நிலையில் ஆராய்ந்தபின்பு மற்றவர்கள் எம்மை புறந்தள்ளுகின்றார்களா? இவ்வாறு புறந்தள்ளினால் எதற்காக புறந்தள்ளுகின்றார்கள்? அந்த சூழலில் எமது மனநிலை எவ்வாறு இருக்கின்றது? என்று பார்க்கவேண்டும்.

மற்றவர்கள் எம்மைப் புறந்தள்ளி, ஒதுக்கி வைக்கும் போது நிச்சயமாக உள்ளம் வேதனையடையும். இதனை யாரும் மறுக்கமுடியாது, மறைக்கவும் முடியாது.

இந்த மன உளைச்சல் தான் எம்மால் மற்றவர்கள் புறந்தள்ளப்படுகின்றபோது அடைவார் என்பதை உணர்ந்து எமது செயல்களை நகர்த்தவேண்டும்.

எமது பெற்றோர், சகோதரர்கள், உறவினர் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்களைச் செய்தாலும், அவர்களை அப்படி ஒதுக்கி வைக்கக்கூடாது. அவர்கள் தவறிழைத்தால் அதனை மன்னித்து ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

சாதி, இன, மத, பால், அந்தஸ்து ரீதியில் ஒருவரைப் புறந்தள்ளினும் அந்நிலையும் தவறானதாகும். எனவே, மனித மாண்பைக் காக்க புறந்தள்ளும் செயல் தடையாக அமைகின்றது. இதில் இருந்து விடுபட எம்மைத் தயாராக்கவேண்டும்.

புறக்கணிப்பும், ஒதுக்கலும் மனித வரலாற்றில் கொடுமையானது. அதை யார் மீதும் பிரயோகிக்கக்கூடாது. ஒருமைப்பாடும் சகிப்புத் தன்மையும் தான் சிறந்தது. மனித மேம்பாட்டுக்கு இதனை செயல் வடிவமாக்குவோம்.

**வலம்புரி**

*18.04.2004*

## அமைதியின் தெய்வம்...

பல்லவி

அமைதியின் தெய்வம் - உங்களுக்கு
அமைதி உரித்தாகுக' என்று
உரைத்து மாறுமோ - அது
உயிரற்றுப் போகுமோ

அநுபல்லவி

வானம் பூமி அழியினும் - இறை
வாக்கு என்றும் அழியாது - அதை
நீயும் அறியாயோ
அறிந்தும் நீ உணராயோ

சரணம்

உள்ளத்தில் அமைதியை இழந்து
உருக்குலைந்த மனிதா
உன்னைப் படைத்த ஆண்டவரின் - அருள்
வார்த்தைகளை நினைத்துப் பாரு.

உறவுகள் அமைதியை இழந்து
உயிரைச் சிதைக்கும் மனிதா
உன்னயலானை நேசி யென்ற - இறை
வார்த்தைகளை நினைத்துப் பாரு.

16

# சக மனிதனை நேசிக்கும் பண்புகள் வேண்டும்

கொலையாளி என்பது அடுத்தவரின் உயிரைப்பறிப்பவர் என்று வரையறை செய்கின்ற எமக்கு; யோவான் தமது திருமுகத்தில் புதியதோர் கருத்தை முன்வைக்கின்றார். 'தம் சகோதரர், சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள்'. (1யோவான்3:15) என்று கூறுகிறார்.

இறைவன் மீது அன்புகொண்டவர்கள் அடுத்தவர் மீது அன்பு கொள்வார்கள். அடுத்தவரைத் தன் சகோதரனாக, சகோதரியாகக் கண்டு ஏற்றுக்கொள்ள உள்ளம் தடைவிதிக்குமானால் அவர்கள் இறைவனையும் தம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளத் தடைவிதிக்கிறார்கள்.

எமது ஊனக்கண்களால் காண முடியாத உயர் வல்லமை கொண்ட இறைவனை நாம் தரிசிக்கவேண்டுமானால் நாம் காணுகின்ற மனிதர்களை நேசிக்கவேண்டும்.

எமது அன்றாட வாழ்வில் உயர்வான விடயங்களையும், செல்வச்செழிப்பையும் கண்டு குதூகலிக்கின்றோம். அவற்றில்தான் இறைவன் தங்கியுள்ளார் என்ற மாயையில் இருக்கின்றோம். இறைவன் எங்குள்ளார்; எத்தகைய வடிவத்தில் வருகின்றார் என்பதை கல்மனங்கள் தரிசிக்க மறுக்கின்றன.

இதனால், எல்லா வகைச்சிறப்பும் உள்ள மனிதர்கள் கூட தம் உள்ளத்தில் அமைதி – விடிவு இன்றி துன்பத்தில் இருக்கும் அவலம் ஏற்படுகின்றது. அதற்கு மூலகாரணம் அடுத்தவரை சகோதரனாக, சகோதரியாக ஏற்றுக்கொள்ளாமையேயாகும். எமக்குண்டான செல்வம், பதவி எமக்கு மகிழ்வைக் கொடுக்காது. மனித உறவுகள் தான் மகிழ்வைக் கொடுக்கும். இந்த மனித உறவைப் பெறவேண்டுமென்றால், அடுத்தவரை சகோதரனாக, சகோதரியாக ஏற்கவேண்டும். அப்போது இறைவனைத் தரிசிக்கமுடியும். இறைவனைத் தரிசித்தால் உள்ளத்தில் அமைதியும் - விடிவும் உண்டாகும்.

ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் பாடம் கற்றுக்கொண்டிருந்தார்கள். பலவருடங்கள் படித்து முடித்த பிற்பாடு அவர்கள் சமுதாயத்தில் சென்று பணிசெய்ய விரும்பினார்கள். குரு அவர்களுக்கு தேர்வு வைத்து அதில் வெற்றி பெற்றவர்களை சமுதாயத்திற்குப் பணிசெய்ய அனுப்புவதாகக் கூறினார்.

குரு அவர்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டார்.

"பொழுது எப்போது விடிகின்றது?"

முதல் சீடன் சொன்னான் 'நான் விடியற்காலை நேரத்திலே திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வெளியே பார்த்துக் கொண்டே இருப்பேன். அங்கே இருக்கின்ற, புளியமரத்திற்கும் – வேப்பமரத்திற்கும் எப்போது வித்தியாசம் தெரிகின்றதோ அப்போது தான் பொழுது விடிகின்றது' என்றான்.

அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளாத குரு இரண்டாவது சீடரிடமும் அதே கேள்வியைக் கேட்டார்.

அவன் கூறினான். 'விடியற் காலை நேரத்திலே தொலைவில் எருமை மாடு, பசுமாடு வந்துகொண்டு இருக்கிறது. எப்போது பசுவுக்கும், எருமைக்கும் வித்தியாசம் தெரிகின்றதோ அப்போதுதான் பொழுது விடிகின்றது.' என்றான். அதையும் குரு ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

மூன்றாவது சீடன் கூறினான் 'நான் விடியற் காலை நேரத்திலே திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வெளியே பார்த்துக்கொண்டு இருப்பேன். அங்கே மனிதர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். வந்துகொண்டு இருக்கின்றவர்கள் எல்லாம் எப்போது என் சகோதரனாகவும், சகோதரியாகவும் தெரிய ஆரம்பிக்கிறார்களோ அப்போதுதான் பொழுது விடிகிறது' என்றான். அவனுடைய உயர்ந்த எண்ணத்திற்காக குரு அவனைப் பாராட்டினார்.

ஆகவே, எம் சமூகத்தில் சகமனிதர்களை சகோதரனாக, சகோதரியாக எப்போது ஏற்றுக்கொள்ளப்போகின்றோமோ அப்போதே உண்மையான விடிவைக் காணலாம்.

சமூக அடக்குமுறை காரணமாக ஏற்றத்தாழ்வு மேலோங்கியுள்ள நிலையில் சகமனிதர்களை அடக்கி ஆளுதல், புறம் தள்ளுதல், மானிடநேயம் அற்ற போக்கு எல்லாமே சேர்ந்து எமது வாழ்வை இருளாக்கியுள்ளது. அது ஒளி பெறவேண்டுமென்றால் சக மனிதர்களை சகோதரனாக, சகோதரியாக நேசிக்கவேண்டும். அல்லாவிட்டால், நாம் எல்லாம் கொலையாளிகளாவோம். தம் சகோதர, சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். இதில் நாம் யார்...!

**வலம்புரி**

*15.08.2004*

## பெத்தலை நகர் நாதன்...

**பல்லவி**

பெத்தலை நகர் நாதன்
பிறப்பை நினைக்கும் மனித வாழ்வில்
ஏற்றம் காணவே - எனக்குள்
மாற்றம் வேண்டுமே

**சரணம்**

மரத்துப்போன மரமானேன் - பிறர்
பாசம் மறந்த பிணமானேன்
ஆசை கொண்டேன் பணத்தில் - உறவில்
விரிசல் கண்டேன் நாளும்.

பிரிவினை விரும்பிக் கொண்டேன் - பிறர்
வாழ்வில் நாசம் புரிந்தேன்
கானல் தரையான உள்ளத்தில் - இறை
நம்பிக்கை இழந்தேன் நாளும்.

17

# இறைவனிடம் அழைத்துச் செல்லும் கருவி...

"அன்பு இழிவானதைச்செய்யாது; தன்னலம் நாடாது,
எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது". (1கொரி13:5)

மனித மேம்பாடு என்பது ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதிலையே தங்கியுள்ளது. துன்பத்தில் இருக்கும் ஒருவரைப்பார்த்து பாவம், பரிதாபம் சொல்வதிலும் பார்க்க அவருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வதே மேலானது.

இன்று அனேகர் தமது அயல் வீட்டில் என்ன நடந்தாலும் அதைக்குறித்து எந்த விதமான அக்கறையும் இல்லாது இருக்கிறார்கள். ஏன், அயல் வீட்டில் யார் இருப்பது என்றுகூடத் தெரியாமல் நகரப்புறங்களில் மனிதர் வாழ்வது மிகவும் அவலமான வாழ்வு ஆகும்.

நாம் நினைக்கிறோம், அயலில் உள்ளவர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டால் அதனால் பல இடையூறு வந்து சேரும். இதனால், தனிமையாக இருக்கவே விரும்புகிறோம்.

சுயநலப் போக்கு மனிதனிடம் எல்லா விடயங்களிலும் குடி கொண்டு விட்டது. எமக்கு மற்றவர்கள் உதவி செய்யவேண்டும். ஆனால், மற்றவர்களுக்கு உதவி தேவைப்படும்போது நாம் அதைக்குறித்து கவலையேகொள்ளாது இருக்கும்போக்கு எம்மில் நிறையவே உண்டு.

இறைவன் படைத்த உயிர்கள் அனைத்தும் மேலானது. அவைகளில் அன்பு கொண்டுவாழ வேண்டியது மனிதர்களின் கடமை. இன்று அன்பு என்ற வார்த்தைக்கே அர்த்தம் புரியாது செயல்படுகின்றோம். ஒருவர் எம்மீது அக்கறை கொண்டு உதவி செய்தால் மட்டும் அதை அன்பு என்கின்றோம். இதனால், அவர்களிடம் மட்டுமே எமது அன்பும் அதிகரித்துச் செல்கின்றது. இந்த அன்பு ஒருவகையில் பார்த்தால் ஒரு சுயநலப் போக்குக் கொண்டவையாக இருக்கின்றது.

யேசுபிரான் தன்னை உடைத்து மக்கள் அனைவரின் பாவத்தையும் தீர்த்தது போல; அதாவது, எந்தவித பாகுபாடுமின்றி செயற்பட்டதுபோல நாமும் எம்மை உடைக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். எமது சுயநலத்தை உடைக்க வேண்டும். அப்போதுதான் பிறருக்கு எம்மைப்பகிர்ந்து கொள்ளமுடியும்.

குறுகிய மனப்போக்குடன் உதவிகள் செய்யும் தன்மை இருக்கக்கூடாது. உதவி யாருக்குத் தேவையோ அவர்களுக்கு நிறைவான உள்ளத்துடன் உதவ முன்வரவேண்டும். அது மதம், இனம், சாதியம் கடந்த ஒன்றாக இருக்கவேண்டும்.

சமூகக் கட்டமைப்பைப் பார்த்தால் அதில் பல பாகுபாடுகள் இருக்கின்றன. அத்தகைய பாகுபாடுகளின் மத்தியில் நாம் செயற்பட்டால் அது ஆரோக்கியமல்ல. அதனை விடுத்து எல்லோருக்கும் உதவவேண்டும்.

நல்ல சமாரியன் உவமை (லூக்கா10:25-37) மூலம் யேசு போதிக்கும் கருத்து இதுதான். உதவி யாருக்குத் தேவையோ அவருக்கு தம்மையே அர்ப்பணித்துச் செயற்படவேண்டும். அப்போது நல்ல வாழ்வு மலரும்.

உதவிக்காக ஏங்கும் உள்ளங்களுக்கு கைமாறு கருதாது உதவி செய்து பாருங்கள்; அதனால், வரும் மகிழ்சியும் ஆனந்தமும் வேறு எதனாலும் கிடைக்காது. ஒரு மனிதன்,

எத்தனை நாடுகள் கடந்தான்
எத்தனை கடல் கடந்தான்
எத்தனை பேரைக் கொன்றான்
எத்தனை மகுடம் கொண்டான்
எத்தனை காலம் இருந்தான்
எத்தனை பிள்ளைகள் ஈன்றான்

என்பவை அல்ல, அவன் எச்சங்கள். இவையெல்லாம் 'நான்' என்ற ஆணவத்தின் நீளங்கள்.

அவன் இன்னோர் உயிருக்காக எத்தனை முறை அழுதான் என்பது தான் அவன் மனிதன் என்பதற்கான மாறாத சாட்சி.

எனவே, மனித நேயத்துடன் துன்பப்படும் மனிதனுக்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டும்.

**வலம்புரி**
*14.09.2003*

### பரிசுத்த நாமம்...

பரிசுத்த நாமம் இயேசு நாமம்
பாவங்கள் போக்கிடும் இனிய நாமம்
சாவின் கூரை உடைத்த நாமம்
சத்திய வாழ்வை உணர்த்தும் நாமம்

துதிக்கும் நாமம் இயேசு நாமம்
தூதர்கள் தினமும் போற்றும் நாமம்
வல்ல சந்துரு அஞ்சும் நாமம்
வல்லமை கொண்ட உயர்ந்த நாமம்

18

# உண்மையான உறவுகள் உருவாக...

"நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்?" (லூக்6:41)

இன்று எமது வாழ்வியலை நோக்கிப்பார்க்கின்ற போது, அடுத்தவர் பற்றிக் குறைசொல்வதில் தான் அதிக அக்கறை செலுத்துகின்றோம். மாறாக, எமது குறைகளை மீட்டுப் பார்த்து அதனைத்திருத்த முயற்சிப்பது இல்லை.

நாம் ஏதாவது தப்புச் செய்து விட்டால் அதற்குப் பரிகாரம் தேடுவதிலும் பார்க்க, அடுத்தவர் மீது அதற்கான பழியைப்போட்டு, நாம் செய்த தவறை சரிபோல நிரூபிக்க முயற்சிக்கின்றோம்.

ஒருவரின் வளர்ச்சிக்கு சமூகம் உறுதுணையாக இருந்தாலும். அந்த சமூக வளர்ச்சிக்கு நாமும் காரணமாக இருக்கின்றோம். இதனை உணர்ந்து எமது நடத்தைக் கோலத்தினால் சமூகம் பாதிப்படையாத வகையில் செயற்படுவது அவசியமானது.

நாம் தவறையும், தப்பையும் செய்து கொண்டு அடுத்தவரைத்திருத்த முயற்சிப்பது ஒரு போலியான செயலாகும். அதாவது, மதுவுக்கு அடிமையான ஒருவர், குடிபோதைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தால், அதனை சமூகம் ஏற்கத்தயாராக இல்லை. இதனைப் போலத்தான் சமூக விரோதச் செயல்களை மறைமுகமாகவும், வெளியரங்கமாகவும் செய்கின்றவர்கள் சமூக சீர்திருத்தத்தினைச் செய்யமுடியாது. அவ்வாறு செய்தாலும் சமூகம் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

"ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி"என்று சொல்வது போல, மற்றவர்களுக்கு உபதேசிக்கும் பண்புகள் எம்மிடையே அதிகரித்து இருக்கின்றது. ஆனால், அதன்படி நாம் நடக்கின்றோமா என்றால் அது பெரிய கேள்விக்குறியே!

மற்றவர்களை அடிக்கடி குறைசொல்வதினால் உறவுகள் விரிசல் அடைகின்றது. ஆகவே, ஆரோக்கிய உறவு மலர வேண்டும் என்றால் மற்றவர்களை நாம் மதிக்கவேண்டும். அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பண்பு எம்மிடையே வளராவிட்டால் பிரச்சினைகள் பெருகும்.

கணவன் தன் மனைவி மீது தினமும் குறை சொன்னால் அங்கு உறவில் விரிசல் ஏற்படுகின்றது. பிரச்சினை பெருகி குடும்பத்தையே சிதைக்கின்றது. இதனால், அவர்களது பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள். அயலவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இறுதியாக, விவாகரத்துக்கோ அல்லது தற்கொலைக்கோ வழிவகுகின்றது.

இன்று வளர்ந்தவர்கள் இளைஞர்களைப் பற்றிச் சொல்கின்ற பெரிய குற்றச்சாட்டுகள் “இப்பத்தைய பிள்ளைகள் படுமோசம், ஒரு சதத்திற்கு உதவாதுகள்' இது சாதாரணமாகப் பேசப்படுகின்ற கருத்துப் பரிமாற்றம். இங்கு வளர்ந்தவர்கள் சிந்திக்க வேண்டும், இக்கருத்துக்களை எதைக்கொண்டு சொல்லுகின்றோம் என்று. அடுத்து அக்குற்றச்சாட்டைச் சொல்லுமுன்பு தம்மிடம் இருக்கும் குறைகளைத் தீர்க்கவேண்டும். அதாவது; குடிபோதை, புகைத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கசிப்பு உற்பத்தி, கட்சி பகைமை மற்றும் சமூகவிரோத செயல்கள் போன்றவற்றில் தாம் ஈடுபடுவதை முதலில் அகற்றவேண்டும்.

இவை பெரியோரிடம் உள்ளதால் இன்று வளர்ந்தவர்களின் கருத்துக்களை இளைஞர்கள் கேட்க மறுக்கின்றார்கள். ஏனெனில் அவர்களைப் பார்த்தே சாதிச் சண்டையிலும், கட்சி மனப்பான்மையிலும், குடிபோதையிலும் அதிகம் ஈடுபடுகின்றார்கள். வளர்ந்தவர்களே அநேக சந்தர்ப்பங்களில் இவற்றை ஊக்குவிக்கின்றார்கள்.

எமது சமூகப் புலத்தைப் பார்த்தால் வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி அதனை நீருபிக்கவும், தம்குற்றத்தை மறைக்கவும் வன்முறையைக் கருவியாகப் பாவிக்கின்றார்கள். இன்றைய சூழலில் அறம், நீதி, சமய போதனை எல்லாம் ஏட்டளவிலும், பேச்சளவிலும் இருக்கின்றனவே தவிர, செயற்பாட்டில் காண்பது அரிதாகவே இருக்கின்றது. ஆகையினால், இயேசு போதித்ததுபோல எமது குறைகளை நாம் உணர்ந்து திருந்திக்கொள்ள முயற்சிப்போம். அப்போதுதான் சமாதானம் மலரும். உறவுகள் நிலைக்கும்.

“பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறொருவருக்கு வழிகாட்டிட இயலுமா? இருவரும் குழியில் விழுவரல்லவா?” (லூக்6:39)

**வலம்புரி**
*05.10.2003*

## முழுவொரு இறைவனை...

*முழுவொரு இறைவனை ஸ்தோத்தரி - மனமே*
*முழு உள்ளத்தோடு ஸ்தோத்தரி*
*அடைக்கல அரணை ஸ்தோத்தரி - மனமே*
*அண்டிக் காப்பவரை ஸ்தோத்தரி*

*அற்புத தேவனை ஸ்தோத்தரி - மனமே*
*அதிசய கர்த்தரை ஸ்தோத்தரி*
*படைப்பின் தெய்வத்தை ஸ்தோத்தரி - மனமே*
*பாருலகம் அதிர ஸ்தோத்தரி*

19

# சமூக சீர்கேடுகளைக் களைவோம்

"ஐயோ! பரிசேயரே உங்களுக்குக்கேடு! நீங்கள் புதினா, கறியிலை மற்றும் கீரைச்செடி வகைகள் எல்லாவற்றிலும் பத்திலொரு பங்கைக் காணிக்கையாகப் படைக்கிறீர்கள். ஆனால் நீதியையும் கடவுளின் அன்பையும் பொருட்படுத்துவதில்லை. இவற்றைத்தான் கடைப்பிடித்திருக்க வேண்டும்". (லூக்11:42)

இயேசு பிரான் சமூக அநீதிகளையும், சின்னத்தனங்களையும் நேரே சுட்டிக்காட்டினார். பரிசேயர், சதுசேயர், பிரதான ஆசாரியர், ஆட்சியாளர், சமூகத்தில் முதன்மை இடத்தில் இருப்போர் தவறிழைக்கும் போது இயேசு அவர்களுக்குப் பயந்து மௌனமாக இருக்கவில்லை. உள்ளம் குமுறி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். உடன் எதிர்ப்பைக்காட்ட கடும் வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்துக் கொண்டார். இவ்வாறு, சமூகத்தை சீர்ப்படுத்த முயன்றார். இதனால், அவருக்கு பலத்த எதிர்ப்பு வந்தது. அதற்கு அவர் அஞ்சவில்லை. அன்றைய சமூக சின்னத்தனங்களைக் கண்டித்து திருத்தப் பின்வாங்கவில்லை. விவிலியத்தை பார்த்தால் பல பகுதிகளிலும் தீர்க்க தரிசிகள் சமூக அநீதிக்கு எதிராகக்குரல் கொடுத்து சமூக மேம்பாட்டுக்கும், இறையரசுக்கும் உழைத்தார்கள். அதேபோல இயேசுவும் உழைத்தார். இறையரசை நிலைநாட்ட நற்செய்திப் பொருளாகினார்.

நாம் சமூக அநீதிகளையும் சின்னத்தனங்களையும் கண்டு அமைதியாக இருப்பது புத்திசாலித்தனம் என்று கருதி வாழ்வது உண்மையில் போலியானது. இவற்றைச் சுட்டிக்காட்டி வழிப்படுத்தவேண்டியது எமது கடமை.

இன்றைய சமூகத்தில் எத்தனையோ அடாவடித்தனங்கள் நடைபெறுகின்றன. அவற்றை யாரும் சுட்டிக்காட்ட முயற்சிப்பது இல்லை. இதனால், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் தம்மைக் கட்டுப்படுத்த யாருமில்லை என்று கருதி இன்னும் அதிகமாக அவற்றில் ஈடுபடுகின்றார்கள்.

புத்திசாலித்தனம் என ஒதுங்கியிருப்போர்; மௌனமாக நாம் எம் வழியை பார்த்துக்கொள்வோம், யார் எக்கேடு கெட்டுப்போனாலும் எமக்கென்ன? என்று கருதி வாழ்வியலை நகர்த்திச் செல்கின்றார்கள். இத்தகைய சிந்தனைப் போக்குள்ளவர்கள் கவனிக்கவேண்டியது தாம் மௌனமாக இருந்து சமூக சீர்கேடுகளுக்கு ஆதரவு கொடுக்கின்றார்கள் என்று. சமூக சீர்கேடுகள் புரிபவர்களிலும் பார்க்க அதனைக் கண்டும் காணாதவர் போல மௌனித்து இருப்பவர்களே சமூகம் சீரழிய அதிகம் பங்களிப்புச் செய்கின்றார்கள்.

ஒருவர் மற்றவரினால் துன்புறுவதைப் பார்த்து மௌனித்து இருப்பது மனிதாபிமானம் அற்ற செயல், அவருக்காகக் குரல் கொடுக்கவேண்டும். அவருக்கு இழைக்கப்படும் துன்பத்தை எதிர்த்து அவருக்கு வாழ்வு கொடுக்க முற்படவேண்டும். ஒருவர் துன்பத்தில் இன்பம் காண்பது மனிதப் பண்பல்ல, மனிதநேயத்தினை காக்க எமது மௌனத்தைக் கலைக்க வேண்டும். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராடவேண்டும்.

எமது சமூகப் புலத்தில் பழி - பாவம் என்று சொல்லப்பட்டவையெல்லாம் எந்தவித கூச்சமும் இன்றி நடத்தைக்கோலங்களாக வெளிப்படுகின்றது. இதைப்பார்த்து "காலம் சரியாக் கெட்டுப்போச்சு" என்று கருத்துப் பரிமாறி காலத்தையோட்டுகின்றோம். இத்தகைய நடத்தைக் கோலங்கள் ஏன் நடைபெறுகின்றது. இதற்கான மூலம் என்ன? என்பதை இனம் கண்டு செயற்பட யாரும் முயற்சிப்பதில்லை.

மனிதன் சுயநலப்புத்தியோடு, தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று கருதி வாழ்கிறான். இதனால், அடுத்தவர் படும் துன்பத்தைக் கண்டும் காணாதவன்போல இருக்கின்றான். துன்புறுபவர்களைப் பார்த்து "பாவம், பரிதாபம்" போன்ற அழகு வார்த்தைகளினால் ஆற்றுப்படுத்துவதாக நினைத்து செயற்படுகின்றான்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் ஏற்படுகின்ற சின்னத்தனங்களை கண்டு மனம் கொதித்தெழவேண்டும். ஆரோக்கிய சமூகம் மலர உழைத்து, சமூக மேம்பாட்டுக்காக வாழ்ந்து, நீதி – சமாதானம் உருவாக இறைதுணையுடன் ஒன்றிணைந்து தூரநோக்குடன் செயலாற்றுவோம்.

**வலம்புரி**
*02.11.2003*

## மரணத்தைக் கடந்த...

**பல்லவி**

மரணத்தைக் கடந்த இறைவன் - மனித
மனங்களில் உறையும் இறைவன்

**அனுபல்லவி**

சாட்சியாக வாழவே உன்னை
சீக்கிரமாய் அழைக்கின்றார்

**சரணம்**

நாகரிகம் மாறி வரும் உலகினில்
நாஸ்திகம் அதிகரிக்கும் அபாயம்
நன்கே உணர்ந்திடுவாய் - இறை
நற்செய்தி பரப்பிடுவாய்

20

# சிறுவரிடம் அன்பாய் இருங்கள்

"சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மத்19:14)

குழந்தைகளை நேசிக்கவேண்டியது மனிதர்களின் கடமை. அது தங்களுடைய குழந்தையாக இருக்கலாம், வேறு யாருடைய குழந்தையாகவும் இருக்கலாம். எக் குழந்தையானாலும் அதனிடத்தில் அன்பு கொண்டு நடக்கவேண்டியது மனிதாபிமானப் பண்பு.

சிலர் குழந்தைகளை அதட்டிக்கொண்டே இருப்பார்கள். அது விளையாடினால், சத்தம் போட்டால் 'குழப்படி செய்யும் குறும்புப்பிள்ளை' என்று பட்டமும் சூட்டி கண்டிப்பார்கள். சத்தம் போடாமல், விளையாடாமல், அமைதியாக இருக்கும் பிள்ளைதான் நல்ல பிள்ளை. அப்படிப்பட்ட பிள்ளை தான் எமக்கு வேணும் என்று அநேகர் விரும்புகிறார்கள்.

இதனால், பிள்ளைகளை அடக்கி ஒடுக்கி தாம் சொல்வதுபோல நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டு அதற்காக பரிசுப் பொருட்களையும் கொடுக்க முயற்சிக்கின்றார்கள்.

இச் செயற்பாட்டினால் பிள்ளைகளின் தனித்தன்மை சிதைக்கப்படுகின்றது. அவர்களின் ஆளுமையில் கோளாறு ஏற்படுகின்றது. பெற்றோர் சொல்வது போல் செய்து பழகிய குழந்தைகளுக்கு அடுத்தவர்களில் தங்கிவாழும் நிலை ஏற்படுகின்றது.

குழந்தைகளை நல்வழிப்படுத்த வேண்டியது வழிகாட்டிகளின் கடமை. அதற்காக அடக்குமுறை மூலம் அவர்களை நல்வழிப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் சிறுவர் உரிமை மீறல்களில் ஈடுபடக்கூடாது. தண்டனைகள் அளவுக்கதிகமாகவும், எடுத்ததற்கு எல்லாம் குறை குறட்டனியம் சொல்லியும் பிள்ளைகளை நோகடித்து வளர்க்கக்கூடாது.

சிறுவயதில் ஏற்படுகின்ற தாக்கம் தான் வளர்ந்து வருகின்ற போது பிரதிபலிக்கின்றது. ஆகவே, சிறுவயதில் பக்குவமாய் அன்புகாட்டி பிழைகளை தகுந்தமுறையில் எடுத்துச்சொல்லி தண்டிக்கவேண்டும்.

பிள்ளைகள் எப்போதும் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது, தன்னிடம் மற்றவர்கள் அன்பாக நடக்கவேண்டும் என்பதையே! இதனால்தான் இயேசு சிறுபிள்ளைகளை நேசித்தார். தூக்கி அரவணைத்து ஆசி பொழிந்தார். குழந்தைகள் மகிழ்வில் தாமும் பங்கெடுத்தார். அவர்களை அதட்டிய தம் சீடர்களை வன்மையாகக் கண்டித்தார்.

குழந்தைகளின் நடத்தைக் கோலத்தில் காணப்படுகின்ற ஆரோக்கிய விடயங்களைப் பாராட்டவேண்டும். அது சிறிய விடயமாகக்கூட இருக்கும்; அதை

தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும். ஒருபோதும் அசட்டையாக விட்டுவிடக் கூடாது. இந்த தட்டிக்கொடுத்தல்தான், மேலும் நல்நடத்தையாக மிளிர வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் தன்னைத்தானே ஏற்றுக்கொண்டு தன்னம்பிக்கையில் வளர்ந்து வர அக்குழந்தைகளுக்கு உறுதுணையாக அமைகின்றது.

வளர்ந்தவர்கள் சிறுவர்களின் விளையாட்டில் மகிழ்ந்துகளிக்கும் போது உள ஆற்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுகின்றார்கள்.

மற்றும் சிறுவர்களுடன் விளையாட, பொழுதைக்கழிக்க நேரம் ஒதுக்கி, உடனிருக்கும் போது அவர்களின் உள வளர்ச்சிக்கும் இது பெரும் துணையாக அமைகின்றது.

ஆகவே, சிறுபிள்ளைகளுடன் நல்லவார்த்தைகளை உரையாடி, அன்புடன், பாசத்துடன் நடந்து அவர்களின் உடல் - உள வளர்ச்சியில் அக்கறை செலுத்தி, சிறுவர் உரிமையை மதித்து, அவர்கள் மேம்பாட்டுக்காய் வாழ்வோம்.

**வலம்புரி**
*09.11.2003*

## கல்லறை போல்...

### பல்லவி

கல்லறை போல் கனமான மனம்
கரைந்து நொருங்காவிடின் - இறை
உயிர்ப்பின் ஒளியை
உணர்ந்திட முடியுமோ - மனமே

### அனுபல்லவி

மதம் மீது மதம் கொண்டு
மனித மாண்பு இழந்த மனமே

### சரணம்

அடக்கு முறையால் பிறரை
அடக்கி ஆள நினைத்தாயோ - உன்
ஆணவச் செயலால் அடுத்தவன்
உரிமையைப் பறித்தாயோ - மனமே

இறை புகழ் சொல்ல மறுத்து
தற்புகழ்ச்சி செய்தாயோ - உன்
அயலவன் உயர்வு கருதாமல்
அநீதிகள் பல புரிந்தாயோ - மனமே

21

# மன்னிப்பு மகத்துவம் நிறைந்தது

மனித வாழ்விலே கொடுப்பதற்கு கடினமாகவும், எல்லோரிடமும் இருந்து பெறுவதற்கு இலகுவானதாகவும் காணப்படுவது மன்னிப்பு ஆகும்.

இது ஆளுக்கு ஆள் காலத்திற்குக் காலம் இடத்திற்கிடம் வேறுபடுவதை அவதானிக்கலாம்.

மன்னிப்பு மனித வாழ்வில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துவதாகவும் அதிகளவு விரும்பப்படுவதாகவும் காணப்படுகிறது. சீனப்பழமொழி 'ஓர் அழகான மலரை கசக்கிப் பார்க்கும்போது அதில் எந்தளவு நறுமணம் வீசுகின்றதோ அதனைவிட நறுமணமுள்ளது மன்னிப்பு ஆகும்' என்கிறது.

தனிமனித, குடும்ப, சமூக வாழ்வில் மன்னிப்பு ஒவ்வொரு நிமிடமும் தேவைப்படும் ஒன்றாகக் காணப்படுகிறது.

எமது நாளாந்த வாழ்வில் நாம் பல பயமுறுத்தலுடன் கூடிய மன்னிப்பின் அனுபவங்களை அவதானித்து இருக்கலாம். பிள்ளைகளை பெற்றோர் பயமுறுத்தி மன்னிப்பு வழங்கும் பழக்கமுண்டு. பாடசாலை வாழ்வில் மாணவர்கள் தவறிழைக்கும்போது ஆசிரியர்கள் இத்தகைய அணுகுமுறையை கையாளுவார்கள். திருமறையில் இத்தகைய முறையை தொடக்க நூல் 30ஆம் அதிகாரம் தொடக்கம் 38ஆம் அதிகாரம் வரையுள்ள பகுதியை வாசித்துப் பார்க்கும்போது புரிந்துகொள்ளமுடியும்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமை கொண்டதன் விளைவாக ஆரம்பத்தில் குழியில் போட்டார்கள். பின்னர் எகிப்தின் வியாபாரிகளிடம் அடிமையாக விற்றுவிட்டார்கள். எகிப்துக்குச் சென்ற யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த அதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

இந் நிலையில் கானானில் பஞ்சம் ஏற்படவே அங்கு வாழ்ந்த யோசேப்பின் குடும்பம் எகிப்துக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டது. அப்பொழுது யோசேப்பு தனக்கு தீங்கு செய்த தன் சகோதரர்கள் தன்னிடத்திலே உதவி பெற வந்திருக்கிறார்கள் என அறிந்தபோது மிகவும் துன்புற்று அவர்களை நோக்கி 'நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள் இப்பொழுது நேரம் வந்தாயிற்று நான் உங்கள் தீமைக்கு ஏற்ற தண்டனையை இப்பொழுது தரமுடியும். ஆயினும் நான் உங்களை மன்னிக்கின்றேன்' எனக்கூறி பயமுறுத்தலுடன் கூடிய ஓர் மன்னிப்பை வழங்கினார்.

இது உண்மையான ஓர் மன்னிப்பு அல்ல. மற்றவர்களைப் பயமுறுத்தி வழங்கும் மன்னிப்பு. ஓர் பழிவாங்கும் உணர்வுடன் எழுந்த ஓர் மன்னிப்பாகும். இன்று எம்தேசத்தில்

இத்தகைய மன்னிப்பே காணப்படுகிறது. ஒரு சில மக்களை மன்னிக்கிறோம் எனக் கூறினாலும் பயமுறுத்தலுடன் வருகின்ற பழிவாங்கும் உணர்வு இதில் தொனிக்கிறது.

**வலம்புரி**
*15.01.2006*

## ஆராதனை செய்கின்றோம்...

**பல்லவி**

ஆராதனை செய்கின்றேன் - உந்தன்
அளவில்லா கிருபையை
அகத்தினில் நினைத்து
ஆராதனை செய்கின்றேன்

**சரணம்**

வாழும் தெய்வம் நீரே - என்னை
வாழ வைத்தவர் நீரே

வழியும் ஒளியும் நீரே - என்
வழிக்கு தீபம் நீரே

ஏழையின் தஞ்சம் நீரே - என்
ஏழ்மை நீக்குபவர் நீரே

அன்பின் உறைவிடம் நீரே - என்
அடைக்கல கோட்டையும் நீரே

சிலுவை நாயகன் நீரே - என்
சிறுமைகள் தீர்ப்பவர் நீரே

உயிர்ப்பின் தெய்வம் நீரே - என்
உள்ளத்தில் உறைபவர் நீரே

தூய்மை இறைவன் நீரே - என்
துயர் துடைப்பவர் நீரே

கல்லறை தகர்த்தவர் நீரே - என்
கன்மலை அரணும் நீரே

22

# நம்பிக்கையும் அன்பும் எமது கவசங்கள்

நல்லதைச் செய்தாலும், தீயதைச் செய்தாலும் மற்றவர்களின் விமர்சனத்திற்கு உட்படாதவர்கள் எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

இந்த விமர்சனப் பாங்கும் ஒரு வகையில் நல்லதுதான். ஏனெனில், தீமைகளையும் கீழ்த்தரமான செயல்களையும் மேற்கொள்பவர்கள் திருந்தி வாழ உதவிபுரியும்.

ஆனால், தூரநோக்குடன் சமூகப்பணி ஆற்றுபவர்கள் மீது கூறப்படும் அவதூறான பழி சுமத்தல்கள் தவறானது ஆகும்.

அனேகர் மற்றவர்களின் புறம் கூறலுக்குப் பயந்து சமூகப் பணிகளைச் செய்யாது இருக்கின்றார்கள்.

மற்றவர்களுக்குப் பயந்து அவர்களது புறங்கூறலுக்கு முகம் கொடுக்க முடியாது என்பதற்காக மானிடம் தழைக்கும் செயல்களைச் செய்யாமல் இருக்க முடியாது. அதனைச் செய்துதான் ஆகவேண்டும்.

சில சமூகத்திற்கு சில சமூகம் வளர்வதும் மேம்படுவதும் அபத்தமாக அமைகின்றது. ஏனெனில் தமக்கு அடிமைகளாக இருப்பவர்கள் உயர்ந்து விட்டால் தமக்குப் பணிவிடை செய்ய யாருமில்லை என்ற கொள்கையினால் காலம் காலமாக மற்றவர்களை அடிமைகளாக வைத்திருப்பவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் திட்டமிட்டே செயற்படுகின்றார்கள்.

அடுத்து தனி மனிதன் மீது கொண்ட காழ்ப்புணர்வின் காரணமாகவும் எதிர் விமர்சனங்கள் பிறக்கின்றன. இவை அந்தத் தனிமனிதன் மக்கள் மனதில் தடம் பதித்து புகழ்பெற்று விடுவான் என்ற பயத்தினால் உருவாகின்றது.

எது எப்படி இருந்தாலும் சிலருடன், ஏன் சில சமூகத்துடன் முரணாக இருந்தென்றாலும் நாம் செய்யவேண்டிய காரியங்களை செய்துதான் ஆகவேண்டும். இதைத்தான் மிகவும் அழகாக அன்னை திரேசா எது எப்படி ஆனாலும் செய்! (Do It Anyway) என்ற தலைப்பின் கீழ் தருகின்ற செய்தி வலுவற்றவர்களுக்கு வலுவூட்டுவனவாக அமைகின்றது.

'மனிதர்கள் பெரிதும் நேர்மையற்றவர்கள்.<br>
முன்பின் முரண்பாடானவர்கள்<br>
சுயநலமுடையவர்கள்<br>
எது எப்படியானாலும் அவர்களை மன்னித்துவிடு!<br>
நீ பிறர் மீது பாசமாக இருந்தால்<br>
அதனை சுயநலம்

அந்தரங்க உள்நோக்கம் கொண்டதாக எண்ணி உன்மீது
குற்றம் சுமத்துவார்கள்
எது எப்படியானாலும்
பிறர் மீது பாசமுடையவனாக இரு!

நீ வெற்றிக்குரியவனாக இருந்தால்
நீ போலி நண்பர்களையும்
உண்மையான எதிரிகளையும் சம்பாதிப்பாய்
எது எப்படியானாலும் வெற்றி கொள்.

நீ நேர்மையாகவும்
ஒளிவு மறைவு இல்லாதவனாகவும் இருந்தால்
மனிதர்கள் உன்னை ஏமாற்றி விடலாம்
எது எப்படியானாலும்
நேர்மையானவனாகவும்
கள்ளம் கபடமற்றவனாகவும் இரு!

நீ பல வருடங்களாகக் கட்டியெழுப்பியதை
யாரோ ஒருவர் ஓர் இரவில் அழித்துவிட முடியும்
எது எப்படியானாலும் கட்டியெழுப்பு!

நீ மன அமைதியும் மகிழ்ச்சியுமடைந்தால்
மனிதர்கள் பொறாமைப்படுவார்கள்
எது எப்படியானாலும் மகிழ்ச்சியாக இரு!

இன்று நீ செய்யும் நன்மையை
மறுநாள் மனிதர்கள் மறந்து விடுவார்கள்
எது எப்படியானாலும் நன்மை செய்!

உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்குக்கொடு
அது என்றுமே போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்
எது எப்படியானாலும்
நீ பெற்றுக் கொண்டுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்குக் கொடு!

இறுதி ஆராய்வில்
நீ புரிந்து கொள்வாய்
அந்த ஆராய்வு உனக்கும் ஆண்டவனுக்கும் இடையிலானதாகும்
எது எப்படியானாலும்
அந்த ஆராய்வு உனக்கும் மனிதர்களுக்கும் இடையிலானதாக
என்றுமே இருந்ததில்லை!"

எது எப்படியானாலும் நாம் மற்றவர்களின் வசை மொழிக்கும் தீய

வார்த்தைகளுக்கும் பயந்து முன்வைத்த காலை பின்நோக்கி வைக்காது முன்நோக்கி நகர்ந்து நற்பணியாற்ற வேண்டும்.

"பகலைச் சார்ந்த நாம் அறிவுத் தெளிவோடு இருப்போம். நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாகவும் மீட்புப் பெறுவோம் என்னும் எதிர் நோக்கைத் தலைச் சீராகவும் அணிந்து கொள்வோம்." (1தெசலோ 5:8)

புனித பவுல் தெசலோனிக்க சபைக்கு இவ்வாறு நம்பிக்கையூட்டுவது எமக்கும் பொருந்தும். நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாக அணிந்து எமது பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அன்னை திரேசா இதைத்தான் செய்தார். அவர் எதிர் கொண்ட சவால்கள் அதிகம். அத்தனையும் எதிர்கொண்டு இறை பற்றுறுதியோடு வெற்றி கொண்டார். அவரது பணிசார் நிறுவனங்கள் இன்று பெருவிருட்சமாக உலகெங்கும் பரவி அநேகர் நன்மையடைகிறார்கள். இது எமக்கு சிறந்த எடுத்துக்காட்டு. நாம் சிறிய நன்மைத்தனமான செயல்களைச் செய்யவேண்டும். அந்த நன்மைத்தனத்திற்கு எதிர்ப்பு வந்தாலும் அதனைச் செய்து முடிக்கவேண்டும்.

**வலம்புரி**
*19.09.2004*

## இயேசு சுவாமி...

***பல்லவி***

*இயேசு சுவாமி விரும்புகின்ற சிறுபிள்ளைகள் நாம்*
*தினம் இன்புற்று பாடிடுவோம் பாலன் இயேசுவை*

***சரணம்***

*சிரித்து சிரித்து மகிழ்ந்திடுவோம் நாம் - நல்ல*
*குழந்தை இயேசு மண்ணில் பிறந்ததினாலே*
*அகமகிழ்ந்து அகமகிழ்ந்து ஆடிடுவோம் நாம் - எம்*
*அன்பன் இயேசு உள்ளமதில் மலர்ந்ததினாலே*

*அல்லேலூயா அல்லேலூயா பாடிடுவோம் நாம் - எம்*
*ஆனந்த சொரூபனை தினம் துதித்திடுவோம்*
*துதிகீதம் துதிகீதம் சாற்றிடுவோம் நாம் - நம்*
*தூய தேவ மைந்தனை பறை சாற்றிடுவோமே*

*சின்ன சின்ன இதயமதை நாம் - எங்கள்*
*கன்னி மைந்தனுக்கு தினம் ஏற்றிடுவோம்*
*இன்னிசை வாத்தியம் முழங்கிடுவோம் நாம் - எம்*
*மன்னன் இயேசு மண்ணில் பிறந்ததினாலே.*

23

# நற்சாட்சி பகருவது அவசியம்

எமது வாழ்விலும், வார்த்தையிலும் என்றும் கிறிஸ்துவுக்கு நற்சாட்சி பகருவது அவசியம்.

இறைவாக்கினர்கள் முன்னுரைத்தபடி வார்த்தையாகிய கிறிஸ்து இவ்வுலகில் மனுவுரு எடுத்ததை நினைவுகூரும் தினம்தான் கிறிஸ்மஸ். இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில்...

"ஐயோ! என்ர வீடு தரைமட்டம் ஆச்சுதே",

"நாங்கள் கஷ்டப்பட்டு சேர்த்த சொத்தெல்லாம் கள்ளர் எடுத்துக்கொண்டு போட்டாங்களே".

"இந்த யுத்தம் எப்ப தீர்ந்து எம் சொந்த இடத்திற்கு போவோம்"

என்ற ஏக்கப் பெருமூச்சுக் கலந்த வார்த்தைகள் நாள்தோறும் எம் மத்தியில் பேசப்படுகின்றதை கேட்கின்றோம்.

இவ்வாறு சொத்துக்கள் நிறைந்த மக்களின் ஏக்கம் ஒரு பக்கம் இருக்க; அந்தச் சொத்துக்கள் மீது வைத்த பற்றுதலினால் மனித உயிர்களைக் கூட மதியாது இருக்கின்றவர்களையும் இங்கு காணலாம்.

"ஏ... தம்பி நீ வெறும் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போறாய், இந்தக் கிழவனை ஏத்திக்கொண்டுபோய் விட்டுவிடன். மனுஷன் நடந்து களைச்சுப்போச்சுது. பாவம் தானே" என்று ஒருவர் சொல்ல.

"ஏன் எனக்கென்ன வேறவேலை இல்லையோ...... உந்தக்கிழவனை ஏத்திக்கொண்டு போறநேரம் எங்கட 'ரீவி'யை கட்டிக்கொண்டு போனாலும் இடம்பெயர்ந்து இருக்கிற இடத்தில நல்ல படம் பார்க்கலாம்.." என்று பதில் வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரீ.விக்கு இருக்கின்ற முக்கியத்துவம் வயது முதிர்ந்த கிழவனுக்கு இல்லை. எனவே, இதைப்போல எத்தனையோ விடயங்களில் மனித உயிர்களை, மனித மாண்பை மதிக்காமல் இருக்கின்றோம். மனிதஉயிர்களைக்கூட பணத்திற்காகக் கொலை செய்கின்றோம்.

ஆகவே, எங்கள் கண்ணோட்டத்தை இயேசு பிறந்த காலத்தை நோக்கி திருப்பிப் பார்த்தால்....

தற்காலத்தில் அவசர கட்டளை பிறப்பிப்பதுபோல அகுஸ்து சீசரினாலும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (லூக் 2:1)

இதனால் பாலன் இயேசுவை வயிற்றில் சுமந்தபடி அன்னை மரியாளும் யோசேப்பும் கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம்

என்ற ஊருக்குச் சென்றார்கள் (லூக். 2:4-5). இவ்வாறு நீண்டதொரு பயணத்தை மேற்கொள்ளும் போது அவர்கள் எதுக்கும் கலங்கவில்லை. காரணம் அவர்களிடம் சொத்துக்கள், செல்வங்கள் இருக்கவில்லை. அவர்களிடம் இருந்தது ஒரு கழுதைக் குட்டியும், கொஞ்ச உடைகளுமே தவிர வேறெதுவும் இருக்கவில்லை. இதனால் கலக்கமேதும் இன்றி நீண்ட பயணத்தை மேற்கொண்டார்கள். இது இந்தக் காலத்தில் அளவுக்கு மிஞ்சி சொத்துக்கள் வைத்திருப்பவர்களுக்கு நல்ல பாடமாக அமைகின்றது.

என்னதான் பிரச்சினைகள், இடம்பெயர்வுகள், இழப்புக்கள் வந்தாலும் நாம் கிறிஸ்துவை ஒரு பொருட்டாக எண்ணாது கிறிஸ்மஸ் தான் பெரிது எனக் கொள்கிறோம்.

இவ்வாறு, கிறிஸ்மஸ் கொண்டாடுகின்ற காலத்தில் கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல வெட்கப்படுகின்றோம். ஆனால், காலம் காலமாக கிறிஸ்மஸ் ஆடம்பரமாகக் கொண்டாடித் தேவையற்ற பல காரியத்தைப் பற்றிப்பேசிக் கொண்டு இருக்கின்றோம். இவ்வாறு, வாழ்ந்தது போதும். போர்ச் சூழலில் வாழுகின்ற நாம் இனி இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி நற்சாட்சி பகருவோம்.

அன்று கிறிஸ்து பிறந்ததை தேவதூதன் மேய்ப்பர்களுக்குக் கூறியபோது அந்த நல்ல செய்தியை மேய்ப்பர்கள் "அந்தக் குழந்தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள்" (லூக்கா 2:17). என்று பார்க்கின்றோம்.

இதைப்போல கிறிஸ்துவைப்பற்றி அறிவிக்க தங்கள் உயிர்களை அர்ப்பணித்த புனிதர்களைக் கூட வரலாற்றில் காணலாம். ஏன், நாம் கூட இன்று கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றோம் என்றால் அன்றொருநாள் மிசனறிமார் இங்கு வந்து தாம் அறிந்ததை சொன்னபடியினால்தான் கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றோம். ஆனால், நாம் அறிந்துகொண்ட கிறிஸ்துவை சொல்ல தயங்குகின்றோம். ஏன் வெட்கப்படுகின்றோம்.

"முதலாம் மிலேனியத்தில் நற்செய்தி பரப்புவதில் மிக ஆர்வம் கொண்டது போல் புதிய மிலேனியத்திற்குள் கால் பதிக்கும் ஒவ்வொருவரும் ஆன்மீகத்தைப் பரப்புவதில் மிகத் தீவிரமாக உழைக்க வேண்டும். ஆன்மீக வாழ்வு வாழ்ந்து வழிகாட்டும் மக்களாக இறைமக்கள் பெருக வேண்டும்". என இந்திய மண்ணில் கடந்த வருடம் கால்பதித்து பொது மக்கள் முன்னிலையில் அருள் உரை ஆற்றிய பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் அறைகூவல் விடுத்துள்ளார் (ஆதாரம்: B.B.C செய்தி 7.11.1999).

எனவே, மூன்றாம் மிலேனியத்திற்குள் கால் பதித்திருக்கும் நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் இருந்தாலும் அதில் இருந்து கொண்டு கிறிஸ்துவுக்கு எமது வாழ்வாலும், வார்த்தையாலும் நற்சாட்சி பகிரவேண்டும். "நீயோ அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு; துன்பத்தை ஏற்றுக்கொள்; நற்செய்தியாளனின் பணியை ஆற்று; உன் திருத்தொண்டை முழுமையாகச் செய்". என்று புனித பவுல் 2 தீமொத் 4:5இல் சொல்லுகின்றார்.

கிறிஸ்மஸ் கொண்டாடுகின்ற நாம் அன்னை தெரேசா போல ஏழைகளையும், அநாதைகளையும் நோக்கிப்பார்த்து உதவ ஆயத்தமாக இருக்கிறோமா? அல்லது யோசேப்வாஸ் அடிகளாரைப் போல அயராது ஓடி ஓடி ஆன்மீகப்பணி ஆற்ற ஆயத்தமாக இருக்கிறோமா?

"என்னத்தை இழந்து போனாலும்; நாம் கிறிஸ்துவை இழக்காதவர்களாக இருக்கவேண்டும்" போர் மேகங்கள், இழப்புக்கள், கண்ணீர்கள் எம்மைச் சூழ்ந்து கொண்டாலும் நாம் அஞ்சாது உறுதியுடன் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள வேண்டும். எனவே, புதியதொரு ஆண்டிற்குள் நுழையும் நாம் புதிய மனிதர்களாக வாழ்ந்து கிறிஸ்துவை முழக்கமிட்டு அறிவிக்கப்புறப்படுவோமாக!

எனவே, நாம் இறைவனைப் பார்த்து
இறைவா!
விடிவெள்ளியைப் போல வழிகாட்டியாகவும்,
விண்ணகத்தூதனைப் போல நற்செய்தி கொடுக்கவும்,
மரியாளைப்போல தாழ்மையாகவும்,
யோசேப்பைப்போல பொறுமையாகவும்,
மந்தை மேய்ப்பர்களைப்போல கடமையில் தவறாது இருக்கவும்,
சாஸ்திரிகளைப்போல உயர்ந்த பரிசான உள்ளத்தை உமக்குக் கொடுக்கவும்,
பெத்லகேமைப்போல எங்கள் வாழ்க்கையில் தாழ்மையாக இருக்கவும்
அருள் தர வேண்டும் என்று மன்றாடுவோமாக!

**வலம்புரி**
*24.12.2000*

## விஞ்சிடும் என் துயர்...

### பல்லவி

*விஞ்சிடும் என் துயர் பாராயோ -- நான்
கெஞ்சிடும் உன்னருள் தாராயோ.*

### அனுபல்லவி

*வார்த்தையாக வந்தவா - தேன்
கரும்பாகி நின்றவா
குறை கொண்ட மனங்களில் - என்றும்
நிறை காண வைத்தவா*

### சரணம்

*வானத்தில் தோன்றும் முழு நிலவே - பாலை
வனத்தில் பொழியும் மன்னாவே
கன்னி மரியின் செல்வப் புதல்வனே - உன்னை
கணப்பொழுதும் மறவேன் மறவேன்.*

*மன்னர்க்கு மன்னரான இயேசுவே - தினம்
அன்பு சொரிந்திடும் வள்ளலே
உன்னத மலர்ப்பொற் பாதம் தனை - நிதம்
பணிந்திடுவேன் உம்மையே உம்மையே*

24

# உறவுகள் வளர நாவடக்கம் தேவை

"நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது; சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாவே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே. போற்றலும், தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர, சகோதரிகளே இவ்வாறு இருத்தலாகாது. ஒரே ஊற்றிலிருந்து நன்னீரும் உவர் நீரும் சுரக்குமா?" (யாக்கோபு 3:8–11)

வசைபாடும் தன்மை நம்மில் அநேகரிடம் இருக்கின்றது. மற்றவர்களைக் குறித்தும் அவர்களின் ஒவ்வொரு அசைவுகளைக் குறித்தும் மறையான கருத்துக்களை பேசிக் கொண்டே இருக்கின்றோம். இவை உறவுக்குப் பகையாக அமைந்தாலும் அவற்றை அகற்ற நாமும் முயற்சிப்பதில்லை. மற்றவர்களும் முயற்சிப்பது இல்லை.

உரையாடல்களில் எமது முகபாவனை, தொனி, அசைவுகள் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவைதான் உறவுகளை உடைப்பதும் இணைப்பதும் ஆகும்.

ஒரு விடயத்தை எடுத்துச்சொல்லுகின்ற முறை மிகவும் பிரதானம்.

ஒருவர் ஒரு விடயத்தைப் பற்றி அடிக்கடி தொல்லை கொடுக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம்.

இவை நடைமுறைக்கு சாத்தியப்பட்டு வராதவை என்றும் வைத்துக் கொள்வோம். இத்தகைய ஓர் சூழலில் அவருக்கு அந்நிலையைத் தெளிவுறுத்தவேண்டும். அதனை தெளிவுறுத்த பாவிக்கப்படும் சொற்களை நாசுக்காக எடுத்து விளம்பல்வேண்டும்.

நெருப்பினால் சுட்ட புண் ஆறும்; ஆனால், நாவினால் சுட்ட புண் ஆறுவதில்லை. என்று கூறுவது போல அடிபட்டவர்கள் வெட்டுப்பட்டவர்கள் ஒன்றாகி இருக்கின்றார்கள். அவர்கள் நட்பாக உறவாக தமது பழைய பகையை மறந்து போகின்றார்கள். ஆனால், நாவினால் கடுமையாக சண்டை பிடிப்பவர்களின் உறவுகள் நீண்டகாலம் செல்கின்றது ஒன்றுசேர. இக்கருத்துக்கள் வாய்ச்சண்டையை விட்டுவிட்டு அடிபடுங்கள் என்பது அர்த்தமல்ல. மாறாக, ஒருவர் சொன்ன வசைமொழிக்கு அவர் உறவுவேண்டாம் என்று இறுதி மட்டும் பிடிவாதமாய் இருப்பவர்களையும் எமது சமூகத்தில் கண்டு கொள்ள முடியும்.

இங்குதான் புத்தர் பற்றிய சிறிய கதை நல்லபாடம் புகட்டுகின்றது. "புத்தர் ஒரு வீட்டுக்குச் சென்று யாசித்தார். வீட்டுக்காரன் அவரை வசைபாடினான். புத்தர் அவனைப் பார்த்துக் கூறினார். ஐயா! நீ எனக்கு அரிசியைப் பிச்சையிடும் போது அதை

நான் ஏற்றுக்கொண்டால் அரிசி எனக்குச் சொந்தம். மறுத்திருந்தால், அரிசி உனக்கே சொந்தம். உன் வசைகளை நான் ஏற்க மறுக்கின்றேன். அவை உனக்கே சொந்தம் என்றார்''

புத்தரின் இச் செயல் போன்று நாமும் மற்றவர்களின் வசைமொழிகளை ஏற்காமல் இருப்போம். ஏற்றுக்கொண்டால் தான் பிரச்சனை தோன்றுகிறது. மனமும் சலிப்படைகிறது. பழிவாங்கும் உணர்வும் ஏற்படுகின்றது.

ஒருவர் எம்மை பார்த்து "கள்ளன்" என்று பேசுகின்றார் என்றால், அதற்கு எமது பிரதிபலிப்பு எப்படி இருக்கின்றது. நான் "கள்ளன்" இல்லை என்றால் எவ்வித சலனமும் இல்லாமல் புத்தர் சொன்னது அல்லது நினைத்தது போல நீ பேசிய வசைமொழியை நீயே வைத்துக்கொள் என்று இருப்பது நன்று. அவர் அப்படி பேசினார் என்பதற்காக அவர் சார்ந்தவர்களை வெறுத்தும், அவரது சுக துக்கத்தில் பங்கெடுக்காது இருப்பதும் நல்லதல்ல.

உண்மையாக நான் "கள்ளன்" என்றால் அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஏனெனில் அவர் வசைபாடவில்லை உண்மை பேசுகின்றார்.

எனவே; உண்மைகளைப் பேசிக்கொள்வோம். அதற்காக உறவுகளை பகையாக்கிக் கொள்வது நல்லதல்ல. மாறாக, எம்மைப் பார்த்துத் தேவையில்லாமல் யாராவது வசைபாடினால்; நீ பாடிய வசைமொழி உனக்கே சொந்தம் என்று வாழ்ந்திடுவோம்.

**வலம்புரி**
*21.11.2004*

## இறைவன் என்றாலும்...

### பல்லவி

இறைவன் என்றாலும் ஏழைக்கோலமாய்
இயேசு பிறந்து விட்டார் - என்றும்
ஏழைகள் வாழும் வீடுகள் தோறும்
இயேசு பிறந்து விட்டார்.

### சரணம்

சிந்தனை கொண்ட மனிதரெல்லாம்
சினம் கொண்டு விரட்டினரே - இறை
மைந்தனை அந்த இடையர் தானே
மகிழ்வுடன் போற்றி வணங்கினரே

தாழ்த்தப்பட்டவர் வாழ்த்தைப் பெற்றதோடு
உயர்த்தப்பட்டாரடா - இங்கு
உயர்ந்தவர் எல்லாம் தாழ்ந்தோராவர்
உயர்ந்த உண்மைப் பாடமடா

# 25

# எமது தனித்துவங்கள் எப்படியுள்ளது?

"மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் குற்றமற்றதாய்த் தோன்றலாம். ஆனால் ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார்." (நீதி.மொ 21:2)

அறிவில், அந்தஸ்தில் உயர்ந்திருந்தாலும், தன்னைத்தானே ஆட்சிபுரியத் தெரியாதவன் மனிதத்தன்மையை இழந்து மற்றவரை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றான்.

எப்போதும் ஒரு மனிதன் தன்னைத்தானே மீட்டுப் பார்க்கவேண்டும். தனது நடத்தைக் கோலங்கள் ஏன் இவ்வாறு இருக்கின்றது? இதனால் பிறருக்கு ஏற்படும் பாதிப்பு என்ன? எனது நல்ல பக்கங்கள் என்ன? எனது மறையான பக்கங்கள் என்ன? என்று ஒரு கனம் எம்மை நாமே அலசி ஆராயவேண்டும்.

இன்று எமது சமூகப் புலத்தில் நடைபெறுகின்ற அத்தனை தீமைகளும் நியாயப் படுத்தப்படுகின்றது. ஏன் எமது வாழ்வில் கூட, எமது தவறை ஏற்றுக் கொண்டு அதனைத் திருத்தி வாழமுற்படுவோர் மிக அரிதாகவே இருக்கின்றனர். தவறை ஏற்று அதனைத் திருத்திக்கொள்ள தவறுவோர், தம்மைத் தாமே மீட்டுப்பார்க்கத் தவறியவர்களே.

தம்மிடம் இருக்கும் மறையான நடத்தைக் கோலத்தை பெருமிதத்துடன் கூறி அதனைச் செய்கின்றவர்கள் எம்மைச் சூழ இருக்கின்றார்கள். ஆனால், அவர்களின் நடத்தையினால் பிறருக்கு ஏற்படும் தீமைகளை அவர்கள் உணர்வதில்லை. உணர்ந்தாலும் மரத்துப்போனவர்களாக இருக்கின்றார்கள்.

சிலர் தமது நடத்தைக்கு ஏற்றதுபோல மற்றவர்கள் இசைந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறு இசைந்து வரமறுப்பவர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தி வாழ்க்கையை அவலநிலைக்கு மாற்றுகின்றார்கள்.

குடும்ப, சமூக, சமய நிறுவனங்களில் இத்தகைய தனிமனித சிந்தனைப் போக்கு அதிகரித்து இருப்பதினாலேயே, பிரச்சினைகள் வளர்ந்து இந்நிறுவனங்கள் சிதைந்து போகின்றன.

ஒருவருடன் எமக்கு முரண்பாடு என்றால் அதற்கு காரணம் என்ன? என்று பார்க்கவேண்டும். இந்த முரண்பாட்டுக்கு எனது நடத்தைக் கோலங்கள் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியது என்று மீட்டுப்பார்த்து அதில் இருந்து திருந்திவாழ முயற்சிக்க வேண்டும். மன்னிப்பு கேட்கத் தயாராக வேண்டும். அப்போதே நட்புறவு வளர உறுதுணையாகும். இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைத் தானே மீட்டுப்

பார்த்து மனச்சலவை செய்ய வேண்டும்.

எமது அடிப்படை மனப்பான்மையில் மாற்றம் காணும் வரை முரண்பாடற்ற சூழலை உருவாக்க முடியாது. எமக்கு என்று தனித்துவங்கள் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த தனித்துவங்கள் மறையானதாக அமைந்து மற்றவரை பாதிப்புக்கு உட்படுத்துவதாக ஒருபோதும் இருக்கக்கூடாது. அவை நேரான தனித்துவங்களாக எமக்கும் மற்றவர்களுக்கும் பயன்படத்தக்கதாக இருக்கவேண்டும்.

**வலம்புரீ**
*07.12.2003*

## ஸரிகம ஸரிகம பாடு...

**பல்லவி**

ஸரிகம ஸரிகம பாடு - நீ
சங்கீத இசையோடு பாடு

**அனுபல்லவி**

காவிய நாயகனை
கருணைத் தெய்வத்தை
மண்ணில் மடிந்து
மாட்சி பெற்றவனை.....

**சரணம்**

உணர்வுகள் சிலிர்த்திடும்
உள்ளன்பு பெருகிடும்
உத்தமன் செயல்களை
உரத்துச் சொல்லிட...

பொய்மைகள் அகன்றிடும்
மெய்மைகள் நிலைத்திடும்
மன்னிக்கும் தேவனை
மகிழ்ந்து துதித்திட.....

விசுவாச உறுதியும்
விடுதலை வாழ்வும்
விரும்பியே பெற்று
மறுவாழ்வு காண.....

26

# அன்புள்ளம் வளரவேண்டும்

"உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மத் 22:39)

மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்றால் எமக்குள் அன்புள்ளம் வளர வேண்டும். மகிழ்ச்சியை இழந்த மனிதன் அன்பில்லாத மனிதன். அவன் தன்னை நேசிக்கத் தெரியாதவன். அதனால் பிறரையும் நேசிக்க தயங்குகின்றான்.

எம்மை நாம் நேசிக்கக் கற்றுக்கொள்வோம் ஆயின்; எமக்கு எதிராக எழுகின்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ முடியும். அந்த சவால்களில் இருந்து படிப்பினைகளைப் பெறவும், அதைக் குறித்து சோர்ந்து போகா வண்ணம் வாழ்வை முன்னெடுத்துச் செல்லவும் உதவியளிக்கும்.

இன்று சமூகத்தில் உள்ள பெரிய பிரச்சினை தம்மைத் தாமே அன்பு செய்யாததினால் தம்மையும், பிறரையும் பழிவாங்கும் உணர்வை வளர்த்துக் கொள்ளுகின்றார்கள். இந்தப் பழிவாங்கும் உணர்வுதான் சமூகவிரோதச் செயல்களையும் சின்னத்தனங்களையும் செய்யத் தூண்டுகின்றன.

மற்றும் சிறுபிரச்சினை வந்தபோதிலும் அதனை எதிர்கொண்டு வாழத் தற்துணிவு அற்று தற்கொலை செய்து கொள்வதும் தம்மைத் தாமே பழிவாங்கும் உணர்வினாலேயே ஆகும்.

இந்தத் தற்கொலை பழிவாங்கலினால், தற்கொலை செய்பவர் மட்டும் பாதிக்கப்படவில்லை. மாறாக அவரது குடும்பம், உறவுகள், நண்பர்கள், சுற்றத்தினர் என்று பட்டியல் நீளும். இன்று அநேகர் நினைப்பது தற்கொலை செய்து கொண்டால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று. இது தவறான சிந்தனை. இத்தகைய எண்ணம் ஒருவருக்கு உருவாகும் என்றால், அதற்குக் காரணம் தம்மைத்தாமே அன்பு செய்யாமையே ஆகும்.

எந்தவொரு செயலுக்கும் காரண காரிய தொடர்பு இருக்கவே செய்கின்றது. இதைப் போலத்தான் ஒருவருக்கு தற்கொலை எண்ணம் தோன்றும் என்றால் அதற்குக் காரணம் அந்த சமூகமே. இது இவ்வாறு இருக்கும் போது அவரைப் பார்த்து உன்னைப்போல உன் அயலானை நேசி என்று சொல்வது பொருத்தப்பாடு உடையது அல்ல. மாறாக அவருக்கு தன்னம்பிக்கை ஊட்டி, தம்மைத் தாமே அன்பு செய்ய நேசிக்க நாம் அவர்களுடன் ஆரோக்கியமான உறவை வளர்க்க வேண்டும். இதன் மூலம் அவரது பிரச்சினை குறையும். தற்கொலை எண்ணம் ஏற்படாது. மாறாக என்னை

நேசிக்க மற்றவர்கள் இருக்கின்றார்கள் என்ற உணர்வு தோன்றும். ஆகவே, நானும் அவர்களை நேசிக்க வேண்டும் என்று தம்மைத் தாமே மீட்டுத் தற்துணிவோடு அன்பு செய்ய முன்வருவார்.

எம்மிடம் அன்பில்லாவிட்டால் மற்றவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள, அவரின் வளர்ச்சியில் பங்கெடுக்க எமது உள்ளம் தடையாக அமைகின்றது. மற்றும் நாம் எது செய்தாலும் அதிலும் திருப்தி காணாது எம்மீதே எமக்கு சந்தேகம் ஏற்படும். இத்தகைய சந்தேகப் போக்குத்தான் மற்றவரையும் சந்தேகத்துடன் பார்க்க வைக்கின்றது. இதனால் பிரச்சனைகள் முரண்பாடுகள் அதிகரிக்கின்றதே தவிர முழுமையான வளர்ச்சிப் போக்கினைக் காண முடியாது.

ஆகவே, உறவுகள் வளர நல்ல அன்புள்ளம் வேண்டும். அதனை வளர்க்க நாம் முயல்வோம். இதன் மூலம் சமய, சமூக, குடும்ப வாழ்வில் ஆரோக்கியமான சூழல் தோன்றும்.

**வலம்புரி**

*21.12.2003*

## ஆதவன் வரவு...

### பல்லவி

ஆதவன் வரவு கண்டு
கடல் அலை போல்
துள்ளி எழுந்து ஆராதனை செய்திடுவோம் - நாம்
ஆண்டவர் இயேசுவுக்கு

### அனுபல்லவி

பூக்களைக் கொய்துமே
பூசைகள் இயற்றிடுவோம்
புண்ணிய கருமமாற்ற
புனிதனே அருள்வாய்

### சரணம்

பறவையின் ஓசைகள்
பரமனின் புகழ்பாடும்
பாவத்தின் பிடிகள்
பறந்துமே ஓடும்
கோவில் மணிகள்
கூவியே அழைக்கின்றது
இறை தரிசனத்தைத்
தேட அழைக்கின்றது

27

# மேல்நிலைக்கு உயர்த்தும் தலைமைத்துவம்

இவ்வுலகிலே ஒரு சிலர் தலைவர்களாகவே பிறக்கின்றார்கள். இன்னும் சிலர் தலைவர்களாக தலைமைப்பீடங்களுக்கு உயர்த்தப்படுகின்றனர். இன்னும் வேறுபல தலைவர்கள் தாங்களாகவே கடினப்பட்டு இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றனர். சிலர் இதில் வெற்றிபெறுகின்றனர். சிலர் இதில் தோல்வி அடைகின்றனர்.

உண்மையான தலைமைத்துவ முறைகளைப் பல்வேறு வடிவங்களில் நடத்தி வருகின்றனர். குறிப்பாக ஒரு சில தலைவர்கள் பிறர் தீர்மானம் எடுக்கும் போது பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பு வழங்கக் கூடியவகையில் ஜனநாயக முறையை பின்பற்றுகின்றனர். வேறு சில தலைவர்கள் தமது விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் பிறரின் கருத்துக்களையும், சிந்தனைகளையும் கல்லறைக்குள் புதைத்துவிட்டு சர்வாதிகாரமான முறையைப் பின்பற்றுகின்றார்கள்.

வேறுபலர் தமது கருத்துக்களையும், சிந்தனைகளையும் பிறருக்கு வழங்கி தமது சார்பில் பிறர் செயற்படவேண்டும் என நினைக்கின்றார்கள். இதனை சொல்லதிகார முறையென அழைப்பர். இன்னும் பலர் வேறு தலைவர்களின் மாதிரிகளைப் பின்பற்றி அவர்களைப் போன்று தங்கள் தலைமைத்துவங்களை அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர். இவர்கள் மட்டில் இவர்களுக்குரிய சுய சிந்தனையும் செயற்பாடுகளும் மழுங்கடிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது.

உண்மையான ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய பண்புகளை பழைய ஏற்பாட்டில் காணப்படும் கதாபாத்திரங்களில் ஒன்றான யோசேப்பின் வாழ்வில் இருந்து நாம் காணலாம். ஒரு உண்மையான தலைவனாக விளங்கிய யோசேப்பு பெற்றோரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தது, ஒரு தலைவன் கீழ்ப்படிவுள்ளவன் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தன் சகோதரரின் தவறுகளை மன்னித்து மறுபடியும் ஏற்கும் நிகழ்ச்சி, ஒரு தலைவன் மன்னிக்கும் ஆற்றல் உள்ளவன் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் தவறு செய்யக்கூடிய வாய்ப்பிருந்தும் தவறு செய்யாது விலகி ஓடும் பண்பும்: கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும்போது அதற்கான ஆற்றலை கடவுளே தந்தார் என, தன்னைத் தாழ்த்தி கடவுளை உயர்த்தும் பண்பும்: எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என அறிந்து, முன்கூட்டியே திட்டமிடும் தூரநோக்குப் பார்வையும்: தனக்கு பிறர் அநீதிசெய்கின்றார்கள் என அறிந்தும் அந்த அநீதியை அகற்றும் வகையில்

அதற்குப் போராடும் மனப்பக்குவம் பக்கச் சார்பற்ற முறையில் செயற்படும் பண்பும்: தன்னலத்தைத் துறந்து பிறர் நலத்தை நோக்கிய பணியும்: தாழ்மையில் இருந்து தான் உயர்வை நோக்கி உயர்த்தப்பட்டாலும், தன் பழைய நிலையை மறவாமல் தன் பெற்றோரை மதிக்கும் நிலையும் யோசேப்பிடம் காணப்பட்டன.

நாமும் பல்வேறுபட்ட தலைமைப் பதவிகளை எடுத்து நடாத்துகின்றபோது எம்மிடம் எத்தகைய பண்புகள் இருக்கின்றது; எனவே நல்ல தலைமைத்துவப் பண்புகளை உள்வாங்கிச் செயற்படுவோம்.

**வலம்புரி**

*30.11.2003*

## இறைவா உம்...

***பல்லவி***

*இறைவா உம் பிரசன்னம் தேவை*
*இறைவா உம் பிரசன்னம் தேவை*

***சரணம்***

*மன்னிக்கும் மனப்பான்மை*
*மானிட வாழ்வில் இணைய.....*

*ஆணவம் கொண்டவர் மனம்*
*அடங்கித் தணிந்துபோக....*

*உரிமைகள் மறுக்கும் சிந்தை*
*உறையா வண்ணம் காக்க...*

*அயலானின் தேவை கண்டு*
*அன்புடன் உதவிபுரிய....*

*உறவைச் சிதைக்கும் பேதம் கண்டு*
*உதறித் தள்ளி வாழ்ந்திட*

*நற்செய்திப் பொருளை நாம்*
*நயம்பட எடுத்துச் சொல்ல...*

28

# நிறை வாழ்வுக்கு மனத்துறவு அவசியம்

எமது வாழ்வில் அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்வுகள் மனதை மிகவும் பாதிக்கின்றது. அவை நல்லவையாகவும் இருக்கும் தீமையானதாகவும் இருக்கும். கட்புலன் சார்ந்ததாகவும் இருக்கும், செவிப்புலன் சார்ந்ததாகவும் இருக்கும். இவை இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம், ஆளுக்கு ஆள் வேறுபாடு கொண்டதாக அமையும்.

எது என்னவாக இருந்தாலும் அன்றாட நிகழ்வுகளினால், எம் மனதில் பாரச்சுமைகளை நாளும் சுமந்து திரிகின்றோம். இதனை இறக்கி வைக்க யாரும் முயற்சிப்பது இல்லை. இங்குதான் எமக்கு மனத்துறவு நிலை கைகொடுக்கின்றது. அகப்பற்று புறப்பற்று துறந்த நிலைதான் துறவிகளின் வாழ்வு என்பது போல் எமது மனதும் புறச்சூழலினால் ஏற்படும் அகத்தாக்கத்தினை நீக்கிக்கொள்ள மனத் துறவு தேவை.....

வீதியில், பாடசாலையில், சந்தையில், கோவிலில், வேலைத் தளத்தில், குடும்பத்தில் ஏற்பட்ட எதிர்மறையான நிகழ்வுகளை தினமும் நினைத்து மனம் வருந்துகின்றார்கள். தமக்குப் பாதிப்பு உண்டு பண்ணும் விடயங்களைக் குறித்து அதற்குத் தீர்வுகாண எதிர்மறையாக யோசிக்கின்றார்கள். அவை பழி வாங்கும் உணர்வைத் தூண்டுகின்றன.

ஆகவே, நாம் அன்றாட வாழ்வில் மனத்தை வெறுமை நிலையில் இருத்த வேண்டும். அதில் புதிய நல்ல விடயங்களை உட்புகுத்த வேண்டும். அதன் மூலம் எமக்கு ஏற்படுகின்ற எதிர்மறையான விடயங்களை வெற்றி கொண்டு, மகிழ்வாக வாழமுடியும். மனசு நிறையச் சுமையாக இருந்தால் மகிழ்வை அனுபவிக்க முடியாது போய்விடும்.

இரண்டு துறவிகள் பற்றிய சுவையான கதை இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

ஒரு நாள் இருதுறவிகள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது ஆற்றின் ஓரத்தில் இளமை ததும்பும் பெண் ஒருத்தி அழுது கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஒரு துறவி அவளிடம் சென்று 'தங்கையே, ஏனம்மா அழுகிறாய்? என்று கேட்க, அந்த பெண் என்னுடைய வீடு ஆற்றிற்கு அந்தக் கரையில் இருக்கிறது. நான் இன்று காலை ஆற்றைக் கடந்து வந்தேன். அப்போது நீர் வடிந்திருந்ததால் எளிதாக வந்து விட்டேன். ஆனால் இப்போது வெள்ளம் அதிகமாக இருக்கிறது. படகும் இல்லை. நான் அக்கரைக்குப்போக முடியவில்லையே' என்று

கூறினாள். அதற்கு அத்துறவி 'அவ்வளவு தானே' என்று கூறி அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரையில் விட்டு விட்டு பின்னர் இரு துறவிகளும் பயணத்தைத் தொடர்ந்தனர். இரண்டு மணி நேரம் கழித்து இரண்டாவது துறவி 'சகோதரனே நாம் இருவரும் ஒரு பெண்ணையும் தொடுவதில்லை என்று சபதம் பூண்டுள்ளோம். நீ செய்த செயல் பெரிய பாவமல்லவா? அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்தபோது உன் உணர்ச்சிகள் கிளர்ச்சியடையவில்லையா?' என்று கேட்க, பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்த துறவி 'அந்தப் பெண்ணை இரண்டு மணி நேரத்திற்கு முன்பே இறக்கி விட்டுவிட்டேன்; ஆனால், நீ அவளை இன்னும் மனதில் சுமந்து கொண்டிருக்கின்றாய் அல்லவா? என்று கேட்டாராம்.

இதைப் போலத்தான் எமது பிரச்சினைகளுக்கு உடனே தீர்வு காண முற்பட வேண்டும். அதனைப் பிறகு தீர்ப்போம் என்று பிற்போடக் கூடாது. அவ்வாறு பிற்போட்டால் உள்ளமும் பாதிக்கப்படுவதோடு உடலும் பாதிக்கப்படும்.

விவிலியத்தில் கூட, மார்த்தாளுக்கும் – இயேசுவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் ஊடாக மார்த்தாள் மனத்துறவு அற்ற நிலையில் பல்வேறு கவலைகளில் மூழ்கி இருந்தாள். இயேசு அவளைக் கண்டிக்கின்றார். இதனை லூக்கா நற்செய்தியில் காணலாம்.

மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும்" என்றார். ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகின்றாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்: அது அவளிடமிருந்து எடுக்கப்படாது என்றார்.." (லூக்கா 10:40 - 42)

மரியா நிதானமாக மனத் துறவு நிலையில் இருந்து, இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரது போதனைகளை உள்வாங்கிக் கொள்கிறாள். ஆனால் மார்த்தா பல வேலைகளின் மத்தியில் பல்வேறு கவலைகளில் மூழ்கி இருக்கிறாள்.

இயேசு பெத்தானியா - ஊடாக, பாடுகளின் பாதையை நோக்கிச் செல்கையில் ஆறுதலையும் - அன்பையும் - அமைதியையும் தேடித்தான் மரியா வீட்டிற்குச் சென்றாரே தவிர, உணவு உண்டு மகிழ்ந்திருக்கச் செல்லவில்லை. இதனை உணராத மார்த்தா பலவகை உணவு வகையினைச் செய்வதிலே கவனத்தைச் செலுத்தி, மிதமிஞ்சிய விருந்தோம்பலுக்கு ஆயத்தம் செய்கின்றாள்.

இதனால்தான் இயேசு மார்த்தாவைப் பார்த்து, அன்பாகக் கடிந்து, நீ தேவையில்லாத விடயங்களைக் குறித்துக் கவலைப்படாதே. தேவையானது ஒன்றே அதுதான் ஆழ்ந்த ஆன்மீக வாழ்வு, அதனை உள்ளத்தில் இருத்த வேண்டும். இதுதான் நிறை வாழ்வைக் கொடுக்கும் என்றார்.

ஆகவே, நாமும் மார்த்தா போல் பல விடயங்களைக் குறித்து கவலை கொள்ளாது, உள்ளத்தை வெறுமையாக்கி ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்வோம்; நிறை வாழ்வைக் காண்போம்.

**தொண்டன்**

*(ஒக்டோபர் 2004)*

29

# மன அழுத்தங்களில் இருந்து விடுதலை

"மனத்தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள், வலுவற்றோர்க்கு உதவுங்கள், எல்லோரோடும் பொறுமையாயிருங்கள்....." (தெசலோ 5:14)

எமது வாழ்வியலை நகர்த்திச் செல்கின்றபோது பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கு உட்படுகின்றோம். எனினும், இவற்றைக் கண்டு மனம் சோர்ந்து வலுவற்றுப் போகாது, எதிர்கொண்டு வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நாம் எதிர்பார்ப்பது கிடைக்காமலும் மற்றவர்களினால் வஞ்சிக்கப்பட்டு இருப்பதும் எம்மை அதிகமாகப் பாதிக்கின்றது. இவற்றைத் தாங்க முடியாமல் அநேகர் தற்கொலைகூட செய்துகொள்ளுகின்றனர். காதலித்தவர் ஏமாற்றிவிட்டார் என்றும், படித்தது சோதனைக்கு வரவில்லை என்றும், நல்வாழ்க்கை அமையவில்லை என்றும்; சிலர் சோர்ந்து தமக்குள்ளே வருந்திக்கொள்ளுகின்றனர்.

வாழ்க்கை பல எதிர்பார்ப்பு நிறைந்தது. ஆனால், அத்தனை எதிர்பார்ப்பும் நிறைவேறும் என்பது முடியாத காரியம். ஆகவே, இருப்பதில் திருப்தி கொண்டு வாழ்வை நகர்த்திச் சென்றால் மனநெருக்கீடுகளையும் அழுத்தங்களையும் குறைக்கலாம்.

மனச்சோர்வுகள் வருகின்றபோது அது பல உடல் - உள நோய்களை உண்டுபண்ணும், ஆகையினால், புனித பேதுரு சொல்வதுபோல "உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள்" (1 பேதுரு 5:7)

"உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார்." (திருப்பாடல் 37:5). இத்தகைய நம்பிக்கையூட்டுகின்ற திருமறை வாசகத்துக்கு ஏற்ப வாழுகின்ற போது உளநெருக்கீடுகள் குறைகின்றன; வாழ்வும் ஆரோக்கியமாக மலர்கின்றது.

நெருக்கீடுகளையும், துன்பங்களையும் நாமே நமக்கு வரவழைத்துக் கொள்ளுகின்றோம். ஏனெனில் எமக்குத் தேவையில்லாத, பொருத்தமில்லாத விடயங்கள் குறித்து, நாம் அதிகமாகக் கவலை கொள்ளுகின்றோம். இதனால், மகிழ்ச்சி வாழ்வை இழக்க நேரிடுகின்றது. அத்துடன், மற்றவர் மகிழ்ச்சியில், பொறாமை கொண்டு அவர்களை மறையான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றோம். எமது குறை நிறைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயங்குகின்றோம். இதனால், யாருடனும் நட்பு கொள்ளாது முரண்பட்டு வாழ்கின்ற அவலநிலை ஏற்படுகின்றது.

வி.பி. தனேந்திரா

எப்போதும் நாம் எமக்கு நம்பிக்கையூட்டும் எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். மறையான எண்ணங்கள் எம்மை இன்னும் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. 'நல்லதே நடக்கும்' என்ற உறுதியான நம்பிக்கையுடன் வாழ்வியலை நகர்த்த வேண்டும். இந்த எண்ணங்கள் மன அழுத்தங்களில் இருந்து விடுதலையைக் கொடுக்கின்றன.

"அன்பர்களே! நாங்கள் உங்களுக்குத தரும் அறிவுரை இதுவே; சோம்பேறிகளுக்கு அறிவு புகட்டுங்கள்; மனத் தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்; வலுவற்றோருக்கு உதவுங்கள்; எல்லாரோடும் பொறுமையாயிருங்கள். எவரும் தீமைக்குப் பதில் தீமை செய்யாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுள் ஒருவருக்கொருவர் மட்டுமன்றி, எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள்."

(1 தெசலோனிக்கர் 5:14 – 15

**உதயன்**
12.10.2003

## தஞ்சம் என்று

**பல்லவி**

தஞ்சம் என்று நாடி வந்தோம்
கொஞ்சம் அருள் தேடி வந்தோம்
பஞ்சம் கொள்ள வேண்டாம் ஐயா
விஞ்சும் கொடுமை தீரும் ஐயா...

**சரணம்**

கடல் உண்டு கரை உண்டு
கண்ணுக்கு அழகிய அலை உண்டு
செல்வத்தை வழங்கிய வாழ்வு உண்டு
கொடுத்ததைப் பறித்த அலையும் உண்டு

நீதியுண்டு அநீதியுண்டு
நிர்மலன் பாதம் தஞ்சம் உண்டு
வாழ்வு உண்டு வளமும் உண்டு
வார்த்தை வடிவம் பெற்றதும் உண்டு

பூ உண்டு காய் உண்டு
அவற்றைக் கெடுக்கும் பூச்சி உண்டு
நீதியற்ற கொடிய மனம் உண்டு
நிலைத்திடும் கோர நிகழ்வும் உண்டு

ஒளி உண்டு இருள் உண்டு
ஓங்கிடும் நல்ல நெறி உண்டு
அறிவு உண்டு அறம் உண்டு
அன்பு பெருகும் வடிவம் உண்டு

# 30

# மனங்கொண்ட மதம் மதங்கொள்ளலாமா

மத அடிப்படையிலான ஆன்மீக சிந்தனைகளை பின்பற்றுகின்றவர்கள் அம்மதக் கோட்பாடுகளுக்குள்ளே சிறைப்பட்டுக் கிடப்பது தவிர்க்க முடியாதது. ஒவ்வொரு மதமும் தத்தமது வழிதான் சரியானது என்று நம்புகின்றது. இதனால் எல்லா மனிதர்களும் தமது மதத்தையே பின்பற்ற வேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கருத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும், அது மதவெறியாக மாறி வன்முறைச் செயலாகினால் அது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றது.

மனித வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அன்று தொட்டு இன்று வரை மதத்தின் பேரால் பாரிய யுத்தங்கள், கலவரங்கள், கலாபனைகள் என்பன நிகழ்ந்துள்ளன. இது பல உடல் – உள ஊனங்களையும் ஏற்படுத்தியிருந்தது உண்மையே.

இயேசு சமாரியாவுக்குச் சென்ற பொழுது, அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இயேசுவின் சீடர்களாகிய யாக்கோபும் – யோவானும் கோபவெறி கொண்டு "ஆண்டவரே வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா" என்று கேட்டார்கள். அதற்கு இயேசு தமது சீடர்களை மிகவும் வன்மையாக கண்டித்துக் கொண்டார் என்று லூக்கா நற்செய்தியில் பார்க்கின்றோம். உண்மையிலே இறைவன் ஏனைய மதத்தவர்களை, ஏனைய இனத்தவர்களை அழிவுக்குட்படுத்துபவர் அல்ல; மாறாக மனித மாண்பினைக் கட்டியெழுப்பு கின்றவராக இருக்கின்றார் என்பது இச்சம்பவத்தில் இருந்து புலப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்கும்போது தன் மதத்தை, இனத்தை சாராதோரை அடிபணிய வைக்கும் நோக்குடன் மிருகத்தனமான போர்கள் – சித்திரவதைகள் – கொலைகள் இவற்றால் மானிடத்தை சிதைவுறச் செய்தல் எந்தளவுக்குச் சரியானதாக இருக்கமுடியும்.

அன்பற்ற – பண்பற்ற செயல்களை எந்த மதமும் சொல்வதில்லை. மத போதகர்களும் போதிப்பதில்லை. மாறாக அன்பற்ற – பண்பற்ற செயல்களை மதத் தலைவர்கள் போதிப்பார்கள் என்றால் அவர்கள் ஆன்மீக நன்மைக்காக அல்ல இன ரீதியான வன்முறைக்கு தூபமிடுபவர்களாக விளங்குவார்கள்.

பூமியும் அதன் வளங்கள் யாவும் மனித உயிர் வாழ்வதற்கு எவ்வளவு அவசியமாக இருக்கின்றதோ, அது போலவே ஒவ்வொரு இனத்தையும் பண்படுத்தி வளர்க்க மொழி – கலை – கலாசார – சிந்தனைமுறை இவை யாவும் கொடுக்கப் பட்டிருக்கின்றது. நாம் நமது உடல் வாழ்வையும், உள வாழ்வையும் வளப்படுத்தப் பண்பாடு இன்றியமையாதது. எனவே, அவற்றை நாம் மதிக்க வேண்டும். ஆனால்,

இன்றைய உலகை எடுத்துக் கொண்டால் தமது மதத்தின் மீதும் இனத்தின் மீதும்கொண்ட வெறியினால் ஏனைய பண்பாட்டை மதிக்காது யுத்தமும், கலவரமும் முற்காலத்தைவிட அதிகரித்துக் காணப்படுகின்றது. அதாவது, அமெரிக்க – ஆப்கானிஸ்த யுத்தம், சிங்கள – தமிழ் யுத்தம், இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் இந்து – முஸ்லீம் கலவரங்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவை தொடர்கதையாகவும் இருக்கின்றது. இவற்றுக்கு ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளாத புரிந்துணர்வற்ற தன்மையே காரணம் எனலாம்.

உலகில் கிறிஸ்தவர்களாக இருக்க அழைக்கப்பட்ட நாம்; ஓநாய்கள் நடுவே ஓநாய்களாக அல்ல மாறாக ஓநாய்கள் நடுவே ஆட்டுக்குட்டிகளாக இருக்க அழைக்கப் படுகின்றோம். இயேசுவும் உலகில் ஆட்டுக்குட்டியாகத்தான் இருந்தார். குருடனைப் பார்க்கச் செய்தவர், முடவனை நடக்கச் செய்தவர், ஊமையைப் பேசச் செய்தவர், பேய்களை ஓட்டியவர்; இறுதியாக தன்னினத்தினால் குற்றம் சுமத்தப்பட்டு தன் நண்பர்களினால் காட்டிக் கொடுக்கப்பட்டு உலகின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுகுட்டியாக சிலுவையில் மரித்தார். இதனால் உலகில் உள்ள எல்லா நாமத்திற்கும் மேலான நாமமாக அவர் நாமம் உயர்த்தப்பட்டது.

இயேசு சீடர்களை ஊழியத்திற்கு அனுப்புகின்றபோது "புறப்பட்டு போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகின்றேன்" (லூக்கா 10:3) என்றார்.

கிறிஸ்து கூறியது போலவே அவர்களும் பல துன்பங்களை, சித்திரவதைகளை அனுபவித்தார்கள், அவர்கள் அன்று ஓநாய்கள் நடுவே ஆட்டுக்குட்டியாக இருந்து இறை இயேசுவோடு வழி நடந்தார்கள். அவரும் அவர்களுடன் வழிநடந்து சென்றார். இதனால், துன்ப வாழ்க்கையை வெற்றியின் வாழ்க்கையாக வாழ்ந்து காட்டினார்கள் எமது ஆதிக்கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவ வாழ்வு துன்பத்தின் வாழ்வு. சிலுவையை அனுதினமும் சுமக்கும் வாழ்வு. இதனைக் கண்டு துவண்டு போகாது இறை நம்பிக்கையில் உறுதிபூண்டவர்களாக இருக்க வேண்டும். "துன்பங்கள் எவ்வளவு எம்மை நெருக்குகின்றதோ அந்தளவுக்கு ஆன்மீகத்தில் உறுதி காணப்படும்" என்று ஆன்மீகவாதிகள் கூறுகின்றனர். எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பங்கள் அனுபவித்தாலும் மற்றவர்களுக்கு தீங்கு செய்ய, மற்றவரின் உரிமையை பறிக்க, மற்றவரின் சுதந்திரத்தைக் கெடுக்க நினைக்கக் கூடாது.

அன்னை தெரேசா – ஏழை எளியவர்களையும், அனாதைகளையும் நல்ல சமாரியன் உதவும் மனப்பான்மையில் கண்டார். இன - மத - சாதி முதலிய எவ்வித வேறுபாடுகளையும் பார்க்காது "அனைத்து மனிதப் பிறவிகளும் எமது உடன் பிறப்புக்கள்" என்ற தாரகமந்திரத்தை இலட்சியமாகக் கொண்டு மக்களோடு மனப்பூர்வமாக இரண்டறக் கலந்து தொண்டு செய்தார். இதனைப் போன்று நாமும் இன - மத - சாதி கடந்து மனிதத்தன்மையை, மனித மாண்பை மதித்து அவர்களுக்கு தொண்டு செய்வோம். இதுவே உயிர்த்த இயேசு நாதரை உலகுக்குச் சொல்லும் உண்மை வழி. ஏனெனில் இயேசுவும் வாழ்ந்த காலத்தில்; ஏழை எளியவர்களுடன்தான் பணியாற்றினார். நாமும் அவ்வழி செல்வோம். வாழ்வு பெறுவோம். மரத்துப்போன எம் உணர்வுகளையும் உயிர் பெறச் செய்வோம்.

**தெளிவு**

*(மாசி - பங்குனி, 2002)*



நூலாசிரியர்;
வி.பி. தனேந்திரா, ராதி,
யாழ். ராதவல்லி, வி.பி. தனா
ஆகிய பெயர்களில் பல பத்திரிகைகள்,
சஞ்சிகைகளில் எழுதி வருகின்றார்.

கட்டுரை, வரலாறு, கவிதை, நாடகம், பாடல்,
உரைச்சித்திரம், உரையாடல் எனப்
பல் பரிமாணத்தில் இவரது
எழுத்துக்கள் உள்ளன.

பாடசாலை வாழ்வில் கட்டுரைப் போட்டிகளில்
பங்குகொண்டு அகில இலங்கை ரீதியாகவும்,
யாழ். மாவட்ட ரீதியாகவும் பரிசில்களைப்
பெற்றுள்ளார்.

நடிக்கும் ஆற்றல்கொண்ட இவர்,
சிறந்த நடிகனுக்கான தங்கப்பதக்கத்தையும்
பெற்றுள்ளார்.

'தெளிவு' பத்திரிகையின்
பிரதம ஆசிரியராகவும், 'கலைமுகம்'
கலை இலக்கிய சமூக இதழின்
உதவி ஆசிரியராகவும் இணைந்து
பணியாற்றுகிறார். பல நூல்களைத்
தொகுத்தும் பதிப்பித்துள்ளார்.

– வெளியீட்டாளர்